
பயங்கரவாதத்தின்
**கதை**
**முடியப் போகிறது**



பக்கம் 12 - 13


விலை
ரூபா 20

பக்கங்கள்
28

# உதயன்

34c - 27c
தெளிவான
காலநிலை

சுடர் 31 | கதிர் 208 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 07, செவ்வாய்க்கிழமை 21.06.2016


## ஜெனிவா செல்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஜூன் 21

இலங்கை அரசின் ஜனநாயக அடக்குமுறைக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவுக்குச் சென்று முறையிட மகிந்த ஆதரவு அணியான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு அறிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன.

ஆஸ்திரேலிய குடிமகன் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனமொன்றின் பங்குகளை போலியான ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பக்.23

உலக அரங்கில் தடைசெய்யப்பட்ட

# கொத்துக்குண்டுகளை வன்னியில் வீசியது அரசு

## ஆதாரங்களுடன் வெளியிட்டது பிரிட்டன் நாளிதழ் 'கார்டியன்'

கொழும்பு, ஜூன் 21

ரஷ்யாவினால் தயாரிக்கப்பட்ட கொத்துக் குண்டுகள் இலங்கையின் உள்நாட்டுப் போரில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்யும் ஒளிப்படங்களை - வலுவான ஆதாரங்களை, பிரிட்டன் நாளிதழான 'கார்டியன்' நேற்று வெளியிட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்ற பக்.23



## போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச பங்களிப்பு அவசியம்

### அதனையே கொத்துக்குண்டு விவகாரம் புலப்படுத்தியுள்ளது என்கிறார் சம் ஜரிவி

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையாளர்கள், தடயவியல் நிபுணர்களை உள்ளடக்கிய நம்பகத்தன்மையான விசாரணைகள் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை கொத்துக்குண்டு விவகாரம் புலப்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவின் ஆசியாவுக்கான பிராந்திய இயக்குநர் சம் ஜரிவி. இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் உள்நாட்டுப் போரில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பதிலளிக்கவேண்டும். மிகச் சமீபத்திய இந்தக் குற்றச்சாட்டுகள் நம்பகத்தன்மையான பொறுப்புக்கூறும் பொறிமுறையின் பக்.23

## அதிபர், உப அதிபர், ஆசிரியைகள் கூண்டோடு விளக்க மறியலில்

### பாலியல் துர்நடத்தையைப் பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறியதால்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தென்மராட்சிப் பாடசாலை ஒன்றின் அதிபர், உப அதிபர், ஆசிரியைகள் இருவர் உட்பட 5பேர் சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மாணவியைப் பாலியல் ரீதியில் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று ஆசிரியர் ஒருவர் குற்றஞ்சாட்டப்பட்டார். அந்தத் தகவல் தெரிந்தும் அதனைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தாமல் மறைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அதிபர், உப அதிபர், ஆசிரியைகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதனால் கல்விப் புலத்தில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பக்.23

## மற்றொரு பாடசாலையிலும் துர்நடத்தை குறித்து விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் மாணவிகள் 2 பேரைத் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாக வடக்கு மாகாணக் கல்வி பக்.23

# போரில் குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதே அரசின் நோக்கம்

### ஐரோப்பிய ஒன்றிய பிரதித் தலைவரிடம் எடுத்துரைத்தார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கை அரசு, போர்க்குற்ற விசாரணையின்போது வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றது. குற்றம் செய்தவர்களைப் பாதுகாக்கும் நோக்குடனே அது இப்படிக் கூறுகிறது. இதனை ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய பிரதித் தலைவர் போலிடம் எடுத்துரைத்தேன்.



இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய பிரதித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட போல், யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்தார். வடக்கு மாகாண முதலமைச்சரையும் சந்தித்தார். சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார் முதலமைச்சர்.

அவர் தெரிவித்ததாவது: பக்.23

## மகிந்த அணியில் மற்றொருவரும் கைதானார்

கொழும்பு, ஜூன் 21

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசாமில், பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் உத்தரவிட்டார்.

மகிந்த ஆதரவு பக்.23

முச்சந்தி முரளி



இதையும் விசாரிக்க ஆணைக் குழு நியமிப்பினம் பாருங்கோ...

# காணாமற்போனோர் தொடர்பில் இறுதி அறிக்கை கேட்கிறது அரசு

### கால அவகாசம் கோருகிறது பரணகம ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 21

காணாமற்போனோர் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கையை ஜூலை 15ஆம் திகதிக்குள் கையளிக்குமாறு பரணமக ஆணைக்குழுவுக்கு அரச தரப்பிலிருந்து பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இறுதி அறிக்கையை மேற்படி திகதிக்குள் கையளிப்பது கடினம் என்றும், அரசிடம் கால அவகாசம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக் குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

8 ஆயிரம் முறைப்பாடுகள் குறித்த விசாரணை இன்னும் ஆரம்பமாகவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'அதேவேளை, பரணகம ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுள் - சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய பக்.23

## ஜூலை முதல் தனியார் பஸ் கட்டணம் எகிறும்

கொழும்பு, ஜூன் 21

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்கள் 3.2 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தேசியபோக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பஸ் பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக வாணிப அதிகார சபையை வடக்கில் உருவாக்கத் திட்டம்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாண வர்த்தக வாணிப அதிகார சபையைஉருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். வடக்கில் 5 மாவட்டங்களிலும் உள்ள வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனும் நாளைமறுதினம் இதுகுறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தின் வர்த்தகர்கள் போரின் போதும் அதன் பின்னரான காலப் பகுதியிலும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் ஏனைய பொது விடயங்களிலும் கணிசமான பங்கை ஆற்றியிருகின்றார்கள்.

ஆயினும் அவர்கள் தங்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாமலும் எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை ஒரு உறுதியான நிலையில் வைத்திருக்க முடியாமலும் சிரமப்படுகின்றனர். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு துரிதமாக செயற்படுவது காலத்தின் தேவை. வர்த்தகர் களை இந்த நிலமையில் இருந்து மீட்டெடுப்பதற்கும் எமது பொருளாதரத்தை ஓர் உறுதியான நிலையில் வைத்திருப்பதற்கும் திட்டங்கள் வகுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தக சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், மற்றும் உப செயலாளர் ஆகியோர்களை நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இல 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வர்த்தகர் சங்கத்தின் கேட்போர் கூடத்திற்கு தவறாது சமுகம் தரவும்.

விசேட கலந்துரையாடலுக்கு வருகின்ற வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் தத்தமது மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை உறுதி நிலையில் வைத்திருப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் எழுத்து வடிவில் கொண்டு வரவும்.

இந்த யோசனைகள் எதிர் காலத்தில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும். வடக்கு மாகாணத்தில் வர்த்தக வாணிபத்தைச் சீர்செய்வதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும், வடமாகாணம் சார்ந்ததான வர்த்தக வாணிப அதிகார சபை ஒன்றை உருவாகுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் இருக்கின்ற புத்திஜீவிகள், வர்த்தகப்பெருமக்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் அனைவரும் எதிர்காலத்தில் மிகவும் உறுதியான பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்புவதற்கு தங்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் யோசனைகளையும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கமுடியும்-என்றுள்ளது. (ற-5)



# பளை மத்திய கல்லூரி மாணவனால் புதிய 6 கருவிகள் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் 6 வகையான புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கியுள்ளார் என்று குறித்த பாடசாலையின் முதல்வர் தெரிவித்தார்.

கண்டுபிடிப்புக்களின் மூலம் மாணவனால் உருவாக்கப்பட்டவைகளுக்கு முழுமையான வடிவத்தைக் கொடுப்பதற்கு, பொருளாதார ரீதியில் உதவிகள் தேவையாக உள்ளன என்றும் அதிபர் தெரிவித்தார்.

பளை மத்திய கல்லூரியில் உயர்தர தொழிநுட்பப் பிரிவில் கல்வி பயிலும் சசிகரன் எழிலன் என்ற மாணவனே 6 வகையான கருவிகளையும் கண்டுபிடித்துள்ளார்.

ரயில் கடவைக்கான வாகன் எச்சரிக்கைக் கருவி- ரயில் கடவைக்கான வாகன எச்சரிக்கைக் கருவியை வாகனத்தில் பொருத்தும் போது, 100 மீற்றருக்கு முன்னால் எச்சரிக்கை ஒலி எழுப்பப்படும். இதனால் விபத்துக்களை குறைத்துக் கொள்ளலாம்.

குளங்களுக்கான தன்னியங்கி வான் கதவு திறப் பான்- குளத்தில் அளவு மட் டத்தை அதாவது வான் கதவு மட்டத்தை தாண்டி குளத்து நீர் மேலெழும் சந்தர்ப்பத்தில் அதனைத் தவிர்த்து, தானாக ஒலி எழுப்புவதுடன் தானாக வான் கதவும் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும்.

சாரதி அனுமதிப்பத்திர இனங்காணி- பெட்டி ஒன்றை வாகனத்தில் பொருத்தும்போது அதனுள் சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்து, அதை மறக்காமல் கொண்டு செல்ல முடியும். ஒரு வேளை மறந்தால் அது நினைவூட்டும்.

மண்ணோடு கலந்திருக்கும் கற்களைப் பிரித்தெடுக்கவும், வயல்வெளிகள் வீதியோரங்களில் மண்ணோடு கலந்திருக்கும் கற்களை தனியாக பிரித்தெடுக்கவும் கல் பிரித்தெடுக்கும் கருவி.

பாரம் குறைந்த அதாவது கையால் எடுக்க முடியாத பொருள்களை கருவியைப் பயன்படுத்தி எடுக்கக்கூடிய வகையில் அதாவது கழிவு வாய்க்கால் போன்றவற்றுக்குப் பயன்படுத்தும் பாரம் குறைந்த பொருள்களை சேகரிக்கும் இயந்திரம்.

பப்பாசிப்பழம், மாங்காய் போன்றவற்றை பாதுகாப்பாக அறுவடை செய்யும் இயந்திரம் - என்பனவற்றையே குறித்த மாணவன் உருவாக்கி உள்ளார்.

''மாணவனுடைய சொந்த உழைப்பினாலே இந்த கண்டுபிடிப்புக் களை மேற்கொள்ள முடிந்தது" என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

"மாணவனின் பொருளாதார நிலமையைக் கருத்தில் கொண்டு மிகக் குறைந்த அளவிலான பொருள்களைப் பயன்படுத்தியே இந்த கருவிகள் செய்யப்பட்டுள்ளன. யாராவது முன்வந்து உதவி செய்யுமிடத்து பெரியளவில் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம்" என்று தொழிநுட்ப பாட ஆசிரியர் தெரிவித்தார்.

எனக்குத் தோன்றிய எண்ணத்தை ஆசிரியரிடம் தெரிவித்தபோது, ஆசிரியர் என்னை ஊக்கப்படுத்தினார். என்னை ஊக்கப்படுத்திய கீதப்பிரியா ஆசிரியர் மற்றும் கேதீஸ்வரன் ஆசிரியர், அதிபர், ஏனைய ஆசிரியர்களும் நன்றி கூறுகின்றேன்.

'எனக்கு இன்னும் சில எண்ணங்கள் தோன்றியுள்ளன. அந்த எண்ணங்களை செயல் வடிவங்களாக மாற்றுவதற்கு எனது குடும்பப் பொருளாதார நிலமை தடையாக இருக்கின்றது. இவை சீர் செய்யப்பட்டால் நிச்சயமாக நானும் ஒரு சிறந்த கண்டுபிடிப்பாளனாக வருவேன்" - என்று எழி லன் தெரிவித்தார். (ற-ஜ-21,ரி3)

# உடுவே தம்மாலோக தேரர் நேற்று பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூன் 21

அனுமதிப்பத்திரமின்றி யானைக் குட்டியை வைத்திருந்தது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரரை 20 மில்லியன் மதிப்பிலான பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்தது.

இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தில் முன்னிலையாகிய தம்மாலோக தேரோவிடம் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு தான் நிரபராதி என்று தம்மாலோக தேரர் பதிலளித்தார். அதன் பின்னர் பிணை வழங்கிய நீதிபதி தம்மாலோக தேரரின் வெளிநாட்டுப் பயணங்கள் முற்றாகத் தடை செய்யப்படுகின்றது என்று உத்தரவிட்டார்.

அதேபோன்று இந்த வழக்குத் தொடர்பாக தவறான தகவல்களைக் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவருக்கு உத்தரவிடப்பட்டது.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துக்களை தெரிவித்த உடுவே தம்மாலோக தேரர், இந்த குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தார்.

வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்ற காரணத்தால், இது குறித்த மேலதிக தகவல்களைக் கூற முடியாது என்று தெரிவித்த அவர், இந்த வழக்கு முடிவடைந்த பின்னர், விவரங்களை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளேன் என்று தெரிவித்தார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ற-ஜ-5)

# வடக்கு சுகாதாரக் குழு மலேசியாவுக்கு பயணம்

வட மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் பிரதம செயலாளர் உள்ளிட்ட குழுவினர் மலேசியா சென்றுள்ளனர்.

அந்த நாட்டுத் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெறும் முன்னோடித்துவ தலைமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்துகொள்வதற்காக 5 நாள் உத்தியோகபூர்வ பயணமாகச் சென்றுள்ளனர்.

வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் , வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மாகாண சுகாதார சேவைகளின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்கள் நிதி மற்றும் திட்டமிடல் ஆகியோருடன் வடக்கின் 5 மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இவ்வாறு பயணமாகியுள்ளனர். (ற-ஜ-101)



பருத்தித்துறை ஓராங்கட்டைப் பகுதியிலுள்ள தனியார் ஒருவரின் வீட்டிலிருந்து வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது. வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தவர்களால் நேற்று துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போது வீட்டின் பின் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று [illegible]ப்பட்டுள்ளது. பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அந்தப் பகுதிக்கு [illegible] பொலிஸார் விசேட அதிரடிப்படையிரின் உதவியுடன் அதனை மீட்டனர். (ற-ஜ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய போசணை மாதம்
ஜூன் - 2016

நிரம்பிய கொழுப்புணவுகளை அதிகம் உள்ளெடுப்பதால், கொலஸ்ரோல் ,குருதி நாளங்கள் அடைப்பு, இருதய நோய்கள், பாரிசவாதம், உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களை ஏற்படுத் துகின்றன.

ஆடைப்பால்,பட்டர்,சீஸ், சோசேச்ஸ், பேஸ்ரி, பிசா, பற்றிஸ்,ரோல்ஸ் போன்றவை நிரம்பிய கொழுப் புணவுகளுக்கு சில உதாரணங்களாகும்.

# அதிபர் சேவைக்கு தெரிவானவர்களுக்கு நியமனம் வழுங்குவதே பொருத்தமானது

## வட மாகாணக் கல்வி அமைச்சருக்கு முதலமைச்சர் விக்கி பரிந்துரை

யாழ்ப்பாணம், ஜுன் 21

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடத்துக்கு இலங்கை அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்களை நியமிப்பதே பொருத்தமானது என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு பரிந்துரைத்துள்ளார் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு பரிந்துரைத்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் 3 க்கான பரீட்சையில், வடக்கு மாகாணத்தில் சித்தியடைந்தவர்களில் 398 பேர் அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் 184 பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்கள் கடமையாற்றுகிறார்கள். எனவே குறித்த பாடசாலைகளுக்குள் அதிபர் சேவைக்குள் புதிதாக உள்வாங்கப்பட்டவர்களை நியமிக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்து கோரிக்கை முன்வைத்தனர்.

குறித்த வேண்டுகோளைப் பரிசீலித்த முதலமைச்சர், தற்போது இது தொடர்பான தனது பரிந்துரைகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு வழங்கியுள்ளார்.

இவ்வாறு முதலமைச்சரின் பரிந்துரைக் கடிதம் இன்றைய தினம் (நேற்று) மாகாணக் கல்வி அமைச்சருக்கு கிடைப்பெற்றது. இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு முதலமைச்சரின் பரிந்துரை கடிதம் கிடைக்கப்பெற்ற பின்னர் நேற்று மாகாணக் கல்வி அமைச்சர் தலைமையில் அதிபர் நியமனம் தொடர்பில் கல்வி அதிகாரிகளுக்கிடையே ஆலோசனைக் கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது, மூன்று வருடங்களுக்கு மேலாகக் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு அதிபர் நியமனத்தின் போது முன்னுரிமை வழங்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு பரிந்துரைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ -4,10)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1272
சீட்டிழுப்பு திகதி 2016.06.20
வெற்றி இலக்கங்கள்
02 13 40 47 L
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,659,340/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 513
சீட்டிழுப்பு திகதி 2016.06.20
வெற்றி இலக்கங்கள்
16 31 32 57 X
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 60,210,200/=

அபிவிருத்தி
இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 015
சீட்டிழுப்பு திகதி 2016.06.20
வெற்றி இலக்கங்கள்
28 29 34
இலட்சாதிபதி தங்க இலக்கம் 44021
இவ்வார இலட்சாதிபதிகள் 045
வழங்கப்பட்ட மொத்த பரிசு 09,457,740/=

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.
குணசிங்கம் லெனின்குமார்
B.A. Dip in Teach,
PGDE, SLPS III
கடந்த 17.06.2016 அன்று கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியில் கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடம் அதிபர் தரம் III பதவிக்கான நியமனத்தினை பெற்றுக் கொண்ட எமது நண்பன் குணசிங்கம் லெனின்குமார் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகளை பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர்: து. தயானந்தா (துயா), து. பிரதீபன் (தீபன்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திரு.செ.ஸ்ரீஸ்கந்தராசா (B.A Hons, Dip. in Edu.)

யா/மகாஜனக் கல்லூரி, யா/அருணோதயக் கல்லூரி, கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை என்பவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.செ.ஸ்ரீஸ்கந்தராசா (B.A Hons Dip in Edu) அவர்கள் தரம் III அதிபர் தர போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் நியமனம் பெற்றுள்ளமையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள், பதவிகள் அடைய இறைவனை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செ.இராசரத்தினம்
1/3, மடம் வீதி, யாழ்ப்பாணம்

வாழ்த்துவோர்:
மாமன், மாமி, யோகரத்தினம் குடும்பம், கேமேந்திரன் குடும்பம், மகிந்தன் குடும்பம்.



வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன்
பூங்காவன உற்சவம் - 21.06.2016

மேற்படி திருவிழா இன்று (21.06.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி தொடர்ந்து பிள்ளையார் முருகன் சகிதம் அம்பாள் அழகிய முத்துப் பந்தலில் வீதி உலா வருவார்.

நிகழ்ச்சிகள் - தவில் நாதஸ்வர கச்சேரி



- ஈழ நல்லூர் உதய சங்கர் குழுவினர்
- கலாநிதி பஞ்சாபி கேசனின் பேரர்களான விக்னேஸ்வரன், சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினர்.
- இந்தியா அம்மாப் பேட்டையிலிருந்து விசேடமாக அழைக்கப்பட்ட பார்த்தீபன், நாகேந்திரன் (ராசன்) குழுவினர்.

அம்பிகை அடியார்கள் அனைவரும் பூங்காவனத்திருவிழாவில் கலந்து அம்பாளின் அருள் பெற்று உய்தி பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒலி பண்டத்தரிப்பு தேவன் சவுண்ட்
ஒளி பண்டத்தரிப்பு நவா ஒளி அமைப்பினர்

மதியம் மகேஸ்வரபூசை (அன்னதானம்) இடம் பெறும்.

மணிமண்டபப் பூங்காவனத் திருவிழா உபயகாரர்.

(சி2184) (17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி இணக்கம்

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெளிவுப்படுத்தப்பட்டது. மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர் இணங்கியுள்ளார்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள இ.தொ.காவின் தொழிற்பயிற்சி கேட்போர் கூடத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பத்து வருடகாலமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

அண்மையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது ஆட்சியில் உள்ளார். இவருடன் நாங்கள் கலந்துரையாடி மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்திய தன் காரணமாக, ஜனாதிபதி மலையக மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இணங்கியுள்ளார்.

நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அமைச்சுப் பதவிகள் எதுவும் கேட்கவில்லை. கேட்கப் போவதும் இல்லை. ஏனையவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கினால் அதனைத் தடுக்கப் போவதும் இல்லை.

அமைச்சுப் பதவிகள் வழங்குவதைத் தடுப்பதற்கு இந்த நாட்டில் முறை இருக்கின்றதா என எனக்குத் தெரியவில்லை. அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பில் இந்த நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும்தான் யோசிக்கவேண்டும். அதில் ஒட்டிக் கொண்டு இருப்பவர்களுக்கு அதிகாரம் இருக்கின்றதா எனத் தெரியவில்லை.

ஊடகங்களில் பலரும் விமர்சனங்களை முன்வைத்து வருவது வேடிக்கையாக இருக்கின்றது. ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச இருந்த காலத்தில் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கினார்.

நாங்கள் கொடுக்கவேண்டாம் எனத் தடுக்க வில்லை. தற்பொழுது அமைச்சுப் பதவிகளை வாங்கி விட்டு மக்களுக்கு எவ்வளவோ சேவை செய்ய வேண்டிய நேரத்தில், மாற்று கட்சிக்காரர்கள் பற்றி விமர்சனம் செய்துகொண்டு, எமக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுக்க வேண்டாம் எனக் கூறிக்கொண்டு இருப்பதைப் பார்த்து மக்கள் சிரிக்கின்றார்கள்.

அவர்கள் அமைச்சு பதவி வாங்கும்போது இ. தொ.கா. எதுவும் பேசவில்லை. அதுதான் அரசியல் நாகரிகம். கடந்த காலங்களில் சம்பள உயர்வின்போது, பல போராட்டங்கள் நடத்திக் கம்பனிகளை ஏற்றுக்கொள்ள வைத்து சம்பளஉயர்வு பெற்றுக்கொடுத்துள்ளோம். தற்பொழுதும் இ.தொ.கா. தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதில் கடுமையாகக் கம்பனிகளுடன் போராடி வருகின்றது. சிலர் இதனை இல்லாமற் செய்வதற்கும் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே தொடர்ந்து கம்பனிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். தோட்ட தொழிலாளர்களுக்கு சிறந்த முறையிலான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்போம்-என்றார். (ற-ஐ)


## பகிரங்க அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க் கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் 20.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் தொழில் வியாபார பெயர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

குழாய்க்கிணறு நிர்மாணிக்க உத்தேசிப்பவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையூடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெற்ற பின்னர் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் பதிவு செய்த நிறுவனங்களினூடாக குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்கமுடியும் என்பதுடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைக்கும் பொதுமக்களுக்கும் குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தொடர்புகளுக்கு : 0212255381

செயலாளர்
வலிதென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்


## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 21

மோட்டார் சைக்கிளின் முன் பகுதியில் உட்கார்ந்து வந்த ஆறு வயதுச் சிறுவன் முன் சில்லு பிரேக்கை அமுக்கியதால் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடி மேற்கில் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-9)


## கேள்வி அறிவித்தல் -2016
## வவுனியா வடக்குப் பிரதேசசபை , நெடுங்கேணி

ஒப்பந்த பெயர்:- 1.நெடுங்கேணி பழைய மீன், இறைச்சிக் கடைகளை திருத்தம் செய்தல்.
2.புதிய பஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்கு தார் ஊற்றுதல்.
3.வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் வாகன தரிப்பிடம் அமைத்தல்.
4.புளியங்குளம் சந்தையில் பொதுக்கிணறு அமைத்தல்.
5.சன்னாசிபரந்தன் கச்சல்கொடி வீதி புனரமைப்பு செய்தல்.

ஒப்பந்த இல:- 1. COU/VU/VNPS/W/01 2. COU/VU/VNPS/W/02 3. COU/VU/VNPS/W/03 4. COU/VU/VNPS/W/04 5. DCB/VU/VNPS/W/01

01. வவுனியா வடக்கு பிரதேச சபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் **IFNEP** நிதியின் ஒரு பகுதி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, **வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி**, அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான **சீடா (CIDA)** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி (தொலைபேசி:-0243248346, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **காலை 09.00 மணி** முதல் **மாலை 14.00 மணி** வரை **2016.07.13** திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை **ஆங்கில மொழியில தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி** எனும் இடத்திலிருந்து **2016.06.21ம்** திகதியிலிருந்து **2016.07.13ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.1000 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி** எனும் முகவரிக்கு 2016.07.13ம திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்து மூன்று 2016.09.14ம் திகதி) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இப்பிணை வைப்பானது காசாக வவுனியா வடக்கு பிரதேச சபையில் செலுத்துதல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | வேலைகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1.COU/VU/VNPS/W/1 | நெடுங்கேணி பழைய மீன்,இறைச்சிகடைகளை திருத்தம் செய்தல் | 0.58Mn | 3 Months | C9 or Above | 5,000.00 | 12.10.2016 |
| 2.COU/VU/VNPS/W/2 | புதிய பஸ்நிலையத்தின் ஒரு பகுதிக்கு தார் ஊற்றுதல் | 0.58Mn | 3 Months | C9 or Above | 5,000.00 | 12.10.2016 |
| 3.COU/VU/VNPS/W/3 | வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் வாகன தரிப்பிடம் அமைத்தல் | 1.7Mn | 3 Months | C9 or Above | 17,000.00 | 12.10.2016 |
| 4.COU/VU/VNPS/W/4 | புளியங்குளம் சந்தையில் திறந்த பொதுக்கிணறு அமைத்தல். | 0.31Mn | 3 Months | C9 or Above | 3,100.00 | 12.10.2016 |
| 5.IFNEP/VU/VNPS/W/1 | சன்னாசிபரந்தன் கச்சல்கொடி வீதி புனரமைப்புச் செய்தல் | 2.99Mn | 3 Months | C8 or Above | 29,000.00 | 12.10.2016 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2016.07.07ம் திகதி 14.30 மணிக்கு ... தலைமை யலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி. 2016.06.21

### நாய்க்குட்டி விற்பனைக்கு

கிறேடேன் நாய்க்குட்டி கறுப்பு மற்றும் மண்ணிறம் விற்பனைக்குண்டு.

077 427 7120

### வீடு வளவு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில், யாழ்ப்பாணம், காரைநகர் பிரதான வீதியிலிருந்து நூறுயார் தூரத்தில் ஒரு கல்வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு (4 1876)(12.18)

செல்வரத்தினம் 021 222 7008

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரில் அல்லது அதை அண்மித்த பகுதிகளில் சிறிய நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு (3 அறைகள் உள்ள) வீடு தேவை. மேல்மாடியில் உள்ள இடமாயினும் சரி உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (C/22057)(11.17)

077 730 2882

### வீட்டுத் தளபாடப் பொருள்கள் விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய சோபா செற்றி, கதிரை, அலுமாரி, மேசை, சோக்கேஸ் அத்துடன் வீடு உடைத்து எடுக்கக் கூடிய யன்னல்கள், கதவு, ஓடு, மரம், உடைத்த கல், மண் என்பனவும் விற்பனைக்குண்டு. (சே/2280)

077 314 8249 (11.17)

### பெயர்மாற்றம்

மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி என்னும் முகவரி கொண்ட நான் எனது பெயராகிய பவானி என்பதனை இன்று தொடக்கம் பவானியம்மா என்று மாற்றிக் கொள்ளுகின்றேன் என்பதனையும் இனிமேல் சகல ஆவணங்களிலும் பவானியம்மா என்றே ஒப்பமிடுவேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**பவானியம்மா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர் கொடுப்பனவில் மாற்றமில்லை

மூத்த பிரசைகளுக்கு வழங்கப்பட்டு வரும் முதியோர் கொடுப்பனவில், எந்த வித குறைப்பும் மேற்கொள்ளக்கூடாது என்று பொது நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற செயற்குழு (கோப்), முதியோர்களுக்கான செயலகத்தின் பிரதானிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதுவரை காலமும் வழங்கப்பட்டு வரும் இரண்டாயிரம் ரூபாவில்இருந்து வேறு ஒரு நிதியத்துக்கென 100 ரூபா குறைக்கப் படவுள்ளது என்று கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்த அறிவுறுத்தல்கள் விடுக்கப் பட்டுள்ளது.

மூன்று மாதங்களாகக் கொடுப்பனவில் இருந்து குறைக்கப்பட்டுள்ள பணத் தொகையை, மூத்த பிரசைகளுக்கு மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோப் குழுவின் தலைவரும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

(ற-ஜ-ரி2,22)

## விழிப்புணர்வு செயற்பாடு

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 24 ஆம் திகதி மு.ப. 9 மணிமுதல் 11 மணி வரை நெல்லியடி பஸ் நிலையப்பகுதிலும், 27 ஆம் திகதி பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியிலும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளன.

(ற-ஜ-108)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி வனிதா அருட் செல்வன்**

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி வனிதா அருட்செல்வன் அவர்கள் 09.05.2016 தொடக்கம் அதிபர் சேவையின் தரம் 3 இற்கு நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/சன்மார்க்க ம.வி யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.த.பேரின்பநாயகம் J.P**

(C.T.B மற்றும் பிரதேச சபை ஓய்வுநிலை, காந்திஜி ச.ச.நிலைய தலைவர், கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்)

கடந்த 23.05.2016 யாழ்.மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற சமாதானநீதிவான் மற்றும் சமூகசேவையாளருக்குரிய தேசோதய கௌரவிப்பு இலங்கை சர்வோதய தலைவர் கலாநிதி A.T.ஆரியரத்ன அவர்களால் **தேசோதயதீபம்** என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

காந்திஜி ச.ச.நிலைய சமூகத்தினர்,
அதன் சர்வதேச வலை அமைப்பின்
மண்ணின் மைந்தர்கள்

## இணுவில் கந்தசுவாமி கோயில்

## திருமஞ்ச உற்சவ விஞ்ஞாபனம்

**(12ஆம் திருவிழா - 21.06.2016)**



காலை 7.30
சங்காபிஷேகம்
முற்பகல் 11.30 -
வசந்த மண்டப
பூஜை
ஒரு மணிக்கு
மதியத் திருவிழா
நிறைவு பெறும்.
மாலை - 6.15
வசந்த மண்டபப்
பூஜை,
சண்முக அர்ச்சனை
7.30 - திருமஞ்ச வீதி உலா
இடம்பெறும்.

தர்மகர்த்தாசபை,
இணுவில் கந்தசுவாமி கோயில்.

(சி/21181) (11..17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்களான



திரு.கந்தசாமி
சத்தியானந்தன்



திரு.சரவணமுத்து
அகிலன்



திரு.சிவபாதசுந்தரம்பிள்ளை
நவநீதன்



திரு. குமாரு
சுதாகரன்



திரு.உலகநாதன்
தனசங்கர்



திருமதி இராதிகா
லெனாட் இந்திக

ஆகியோர் கடந்த 09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர். இவர்களை மனதாரப் பாராட்டுவதோடு இவர்கள் இச்சேவையில் பல படிகளைத் தாண்டி உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுயவிருப்பில் ஓய்வு பெறும் திட்டத்தை நீக்கவும்

## அகில இலங்கைப் போக்குவரத்து ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்களை சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறச் செய்யும் செயற்பாடானது போக்குவரத்துச்சபையை இல்லாமல் செய்வதற்கான திட்டம். அந்தத் திட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கைப் போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையை பலவீனப்படுத்துவதற்கும், அதனை இல்லாது செய்வதற்கும் நிதி அமைச்சின் ஆலோசகரொருவர் உள்ளிட்ட தரப்பொன்றின் கடும் அழுத்தம் இது தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சங்கம் கூறுகின்றது.

"சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற வைக்கும் மேற்படி செயற்பாடு தொடர்பில், இவர்கள் செலவு செய்யவுள்ள பணத்தை இலங்கைப் போக்குவரத்து சபையைப் பலப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மேலதிக ஊழியர்களை நீக்கப் போவதில்லை" என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

"அரச போக்குவரத்துச் சேவையைப் பலப்படுத்துதல் தொடர்பில், தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத் தந்து சபையைப் பாதுகாக்கவேண்டும். இதனையே எமது சங்கம் ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கின்றது" எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஜ-ரி2,22)

6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்
செல்லம்மா மோட்சலிங்கம்

அன்னை மடியில்
1942.05.01

ஆண்டவன் அடியில்
2016.01.21

பாசமலரே நீ உதிர்ந்து ஆறுமாதங்கள் ஆகிவிட்டதம்மா
அன்புக் கணவரை, பாசமுள்ள மகன், மகளை
உன் ஆசைப் பேரன், மருமகன்
அன்பான உறவுகளை எல்லோரையும் விட்டுவிட்டு
எங்கே சென்றாய் அம்மம்மா?
நாம் நினைக்கும் போதெல்லாம் ஓடிவந்து
எத்தனையோ உதவிகள் புரிந்து
பாசத்தை பொழிந்தாய் அம்மம்மா
மீண்டும் வாடாத மலராய் வருவாய் எனக் காத்திருக்கும்.....

வேளா தோப்பு,
கட்டப்பிராய்.

பேரப்பிள்ளைகள்
V.மதுர்சன், V.யோகதர்சி

13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 02 . 1974

மறைவு
14 . 07 . 2003

அமரர் புவனேஸ்வரன் தவராஜா
(திதி - 21.06.2016செவ்வாய்க்கிழமை)

உன்னோடு வாழ்ந்த நாம் என்றும்
உன் நினைவுகளோடு மட்டும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

# தேர்தல் தாமதிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு முடிவு

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதிக்கப்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில், இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய, தமது நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் என்று பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிர்வாகக் காலம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு சார்பாக செயற்படவில்லை என்று உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

(ற-ஜ-5)

# தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் இழப்பீடு

## கோரிக் கடிதம்

கொழும்பு, ஜூன் 21
தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மூன்று பேரிடம், 500 மில்லியன் ரூபா வீதம் இழப்பீடு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி, அவமதிப்பை ஏற்படுத்தியதற்கு எதிராகவே இழப்பீடு கோரப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

(ற-ஜ-5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1936.02.23

மறைவு
2015.07.02

அமரர் கனகசபாபதி
தியாகராசா (சின்னப்பாப்பா)
(ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் அள.மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்)

திதி : வளர்பிறை பிரதமை (21.06.2016)

அன்பின் திருவுருவமாய் எமக்கு
வழிகாட்டியாய் இருந்த அன்புத் தந்தையே !
பாசம் நிறைந்த உங்கள் நினைவுகள்
ஓராண்டு கடந்தாலும் எங்களை
விட்டு என்றும் அகலாது
எங்களை தவிக்க விட்டு
ஏன் விடைபெற்றீர்கள் அப்பா !
மறப்பதற்கு முயற்சித்தோம் முடியவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பழம்பதி விநாயகனை பிரார்த்திக்கின்றோம்.

ஒழுங்கை,
வீதி, மானிப்பாய்.
: 'பதியகம்'
சாலை ஒழுங்கை

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
மனைவி, மகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
02.02.1927

அரன் அடியில்
22.05.2016

அமரர் சிவபாக்கியம் ஐயாத்துரை
(ஓய்வுபெற்ற ஆசிரியை - அட்டகிரி சைவ வித்தியாசாலை)

அன்பால் அரவணைத்து அறிவால் உயிரூட்டி
பண்பால் பாரினில் உயர்ந்திட பக்கதுணையாய் இருந்த
எம் அன்புத் தெய்வமே! ஆருயிர் அம்மாவே!
பாசம் மறந்து இறைநேசம் கொண்டதேனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய மருதடியானை வேண்டுகின்றோம்

கடந்த 22.05.2016 இறையடியெய்திய எங்கள் இதய தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும், அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள்,மலர்மாலைகள், மூலமாகவும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (21.06.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்....

மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பதவி விலகினார்

# அரச அச்சகர்

கொழும்பு, ஜூன் 21
அரச அச்சகர் காமின் பொன்சேகா அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

"பதவி விலகல் கடிதத்தை ஊடகத்துறை அமைச்சின் செயலாளர், நிமல் போபகேயிடம் நேற்று ஒப்படைத்துள்ளேன்" என்று காமின் பொன்சேகா தெரிவித்தார்.

"தனிப்பட்ட காரணங்களுக்காகவே அந்தப் பதவியில் இருந்து விலகுகின்றேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

அரச அச்சகர் மீது அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவே, அவர் அந்தப் பதவியில் இருந்து விலகினார் என்று அரசு அச்சக தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் வேறிடம் சென்றால் போராட்டம்

## வவு. மாவட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனையாளர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வவுனியாவில் அமைக்கத் திட்டமிடப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் வேறு மாவட்டத்துக்கு மாற்றம் செய்யப்பட்டால் அதற்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அவ்வாறு மாற்றப்பட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வவுனியாவில் உற்பத்தியாகும் விளைபொருள்களை விற்பனை செய்வதில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தினச் சந்தையிலேயே உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்கப்படுகின்றன.

இந்த வசதியீனங்களை அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பல தடவைகள் கூறினோம். எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான காணியைத் தெரிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதில் தாண்டிக்குளத்திலும், ஓமந்தையிலும் காணி ஒதுக்கீடு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ஓமந்தையில் நிர்மாணிப்பது பொருத்தமில்லை என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது. பொருத்தமான ஓர் இடத்தில் இதற்கான காணி ஒதுக்கப்பட வேண்டும், அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால், இந்தத் திட்டம் அநுராதபுர மாவட்டத்துக்கு மாற்றப்படும் என்றும் எச்சரித்திருந்தது.

ஓமந்தையில் செயற்படுத்துவது பொருத்தமற்றது என்பதால் தாண்டிக்குளத்தில் அதை அமைக்க வேண்டும் என்றும், காணி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது. ஆனால் தாண்டிக்குளம் காணியை வழங்குவதற்கு வடமாகாண முதலமைச்சரும், மாகாண விவசாய அமைச்சரும் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற வடமாகாண சபைக் கூட்டத்தில், தாண்டிக்குளத்தில் காணி ஒதுக்க வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. கடந்த வாரம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் தெரிவித்த கருத்து, இந்தத் திட்டம் வவுனியா மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபையில் ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் புறந்தள்ளிய முதலமைச்சர் புதிதாக வேறிடத்தில் காணி தெரிவு செய்யப்பட்டு, அது தொடர்பாகப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். எந்த இடத்தில் இந்தத் திட்டத்துக்கான காணி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்த மறுத்து விட்டார்.

வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட விவசாயிகள் மற்றும் வவுனியா மாவட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனையாளர் சங்கத்தினருக்குத் தெரியாது முதலமைச்சர் எவ்வாறு பொருத்தமான காணியைத் தெரிவு செய்தார் என்பது வியப்பாக உள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இந்த செயற்திட்டத்துக்குப் பொருத்தமான இடத்தில் காணி வழங்கப்படாவிட்டால், திட்டம் மன்னார் மாவட்டத்துக்கு நகர்த்தப்படும் என்று கூறியுள்ளார்.

வவுனியா மாவட்டத்துக்கென தீர்மானிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் வெளி மாவட்டத்துக்கு நகர்த்தப்படுமானால், அதற்கான முழு பொறுப்பையும் வடமாகாண முதலமைச்சரே ஏற்கவேண்டும்.

பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மாவட்டத்துக்கு வெளியில்கொண்டுசெல்லப்படுமானால், மக்கள் போராட்டம் வவுனியாவில் வெடிக்கும் - என்றுள்ளது.

(ற-ஜ-5)

> வவுனியா வசதியீனங்களை அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பல தடவைகள் கூறினோம். எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

## விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. நாளை புதன்கிழமை காலை 7 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை இந்த நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் திருமதி ரி. மிகுந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-ஜ-ரி4)

## வினைத்திறன் காண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாண சபை எல்லைக்குட்பட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் மாகாண பொதுச் சேவையின் அபிவிருத்தி அலுவலர் தரம் III மற்றும் தரம் II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் பரீட்சை எதிர்வரும் ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம்பெற்ற அல்லது பதவியுயர்வு பெற்றவர்கள் மற்றும் இதுவரை அந்தப் பரீட்சையைப் பூர்த்தி செய்திராத அலுவலர்கள் எதிர்வரும் எட்டாம் திகதிக்கு முன்னர் வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கலாம் என்று ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

## கஞ்சா விற்ற பாம்பாட்டி கைது

கொழும்பு, ஜூன் 21

பாம்பாட்டும் தொழிலில் ஈடுபட்ட நபர் பாம்பு இருந்த பெட்டிக்குள் மிகவும் சூட்சுமமாக கஞ்சாவை விற்பனைக்காக எடுத்துச் சென்றுள்ளார். இவர் மொனராகலை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

பாம்புப் பெட்டிக்குள்ளிருந்து 455 கிராம் எடையுள்ள சிறு பைக்கற்றுகளாக விற்பனைக்குத் தயாராக வைத்திருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. பாம்பும் பாம்பாட்டியுடன் கைது செய்யப்பட்டது.

கஞ்சா விற்பனையில் குறித்த நபர் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தவர் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதேவேளை-பாம்பின் பற்கள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை மையப்படுத்தி, பாம்பாட்டி பணம் உழைக்கும் குறித்த நபர், கஞ்சா விற்பனையிலும் சூட்சுமமாக ஈடுபட்டு பெருமளவு பணம் உழைத்துள்ளாராம். (ற-ஜ-5)

## களிமண் சிற்ப பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியில் களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறி மாதத்தின் இறுதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முழுநாள் பயிற்சியாக நடைபெறவுள்ளது.

கற்பிப்பதற்கு கொழும்பிலிருந்து கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கை நெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திர ஜீவா தலைமையிலான குழு வரவுள்ளது.

இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் நாளைமறுதினம் வியாழக்கிழமைக்கு முன்பாக திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி)

## கள் உற்பத்திக்கு பிளாஸ்ரிக் போத்தல் பயன்படுத்த தடை

சாவகச்சேரி, ஜூன் 21

பனை, தென்னை மரங்களில் கள் உற்பத்திக்கு பிளாஸ்ரிக் போத்தல்கள் பயன்படுத்த சுகாதாரப் பகுதியினர் தடை விதித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கொடிகாமம் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அழைக்கப்பட்டு இது குறித்து அறிவுறுத்தப்பட்டனர்.

அத்துடன் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படும், கள் தவறணைகளை உடனடியாக அங்கு காணப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். தவறின் அவை மூடப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த மாத முற்பகுதியில் பிரதேசத்தில் உள்ள கள் தவறணைகளில் சுகாதாரப் பிரிவு நடத்திய பரிசோதனைகளில், சுகாதாரமற்ற நிலையில் காணப்பட்ட இரு கள் தவறணைகளின் முகாமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

(ற-ஜ-9)

## கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டால் கிடைக்காது

### சாவகச்சேரி நகர சபையினர் அறிவுறுத்தல்

சாவகச்சேரி, ஜூன் 21

இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக அலைந்து பயிரழிவுகளை ஏற்படுத்தும் கால்நடைகள் பிடிக்கப்பட்டால் மீள வழங்கப்படமாட்டாது என சாவகச்சேரி நகர சபை அறிவித்துள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பெருங்குளம், கிராம்புவில், கெருடாவில், விளைவேலி, கல்வயல் போன்ற இடங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை கட்டாக்காலிக் கால்நடைகள் இரவு வேளைகளில் அழிக்கின்றன.

இது தொடர்பாக நகரசபையிடம் முறையிடப்பட்டது. அதையடுத்து இந்த அறிவிப்பு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் பெய்த பெருமழையால் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில், பயிரிடப்பட்ட அனைத்துப் பயிர்களும் வெள்ளத்தில் நாசமாகியுள்ளன.

விவசாயிகள் தற்போது மீண்டும் பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ள நிலையில், கட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளைகளில் கூட்டமாக வந்து அழிவை ஏற்படுத்துகின்றன.

(ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயன்கன்குளம் பொதுச் சந்தையை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 21
சுமார் மூன்று வருடங்களாக ஐயன்கன்குளம் பொதுச் சந்தை இயங்காத நிலையில் காணப்படுகின்றது. அதை இயங்கச் செய்து மக்களுடைய தேவைகளை இலகுபடுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி பொது மக்கள் கோரியுள்ளனர்.

சந்தையை மீள இயக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணுக்காய் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டது ஐயன்கன் குளம் பொதுச் சந்தை. இது மீள் குடியமர்வுக்கு பின்னர் கட்டப்பட்ட சந்தையாகும். தற்போது மக்கள் பயன்பாட்டுக்கு உதவாத நிலையில், பற்றைக் காடுகளால் சூழப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கின் வசந்தம், புறநெகும வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதேசங்களுக்கு இடையேயான சிறு நகர அபிவிருத்திக்கான நிதியுதவியுடன், கட்டப்பட்ட இந்த பொதுச் சந்தைத் தொகுதியில் இறைச்சிக்கடைகளும் உள்ளன.

200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு மீள்குடியமர்ந்துள்ளன. தங்களின் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருள்களை இந்தச் சந்தையில் விற்பனை செய்ததோடு கொள்வனவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். தற்போது சந்தை இயங்காதுள்ளதால் தமது பொருள்களை, வேறு மாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இதனால் மரக்கறிகளில் கிடைக்கும் வருமானம் போக்குவரத்துச் செலவுகளில் போய் விடும் நிலை காணப்படுகின்றது. பொருள்கள் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், வேறு இடங்களுக்குச் சென்று தங்களுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு இயங்காத நிலையில் உள்ள இந்த பொதுச்சந்தையை இயங்க வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐயன்கன் குளத்துக்கான போக்குவரத்துச் சேவைகள் நடைபெறாமையாலேயே சந்தை இயங்காத நிலையில் உள்ளது. தற்போது அங்கு இறைச்சிக்கடை ஒன்றும் மரக்கறி கடையொன்றும் இயங்குகின்றன. போக்குவரத்தைச் சீர் செய்து மிக விரைவில் சந்தையை மீள இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்று துணுக்காய் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ற-ஐ-415,ரி7)

# போக்குவரத்து நியதிச் சட்டம் விரைவில் நடைமுறையாகும்

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 21
போக்குவரத்து நியதிச் சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பின்னர் சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யும். இணைந்த நேர போக்குவரத்து அட்டவணையைப் பின்பற்றாதவர்கள், சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பு மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது. அதுகுறித்து கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் தனியார் போக்குவரத்து துறையினர் அறிக்கை விடுத்திருந்தனர்.

நடைமுறையில் இருந்த தனியாருக்கு 60 வீதமும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 40 வீதமும் என்ற அடிப்படையில் இணைந்த நேர அட்டவணை தயாரிப்பதற்காக கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட அமர்வுகளைநடத்தி, அவர்களின் ஆலோசனையுடன் ஓர் இணைந்த நேர அட்டவணையை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தயாரித்திருந்தார்.

அதில் வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் முழுமையான சம்மதத்துடன் கையொப்பம் இட்டிருந்தது. ஆனால் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் கையெழுத்திடவில்லை. மே மாதம் 10ஆம் திகதிக்கு முன், தயாரிக்கப்பட்ட இணைந்த அட்டவணையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவையாற்ற மறுக்கும் பட்சத்தில், வட மாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் ஐந்து சங்கங்களின் அமைப்பான வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மே மாதம் 16ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தது.

இந்த அறிவித்தலின் பின் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் முயற்சியால் இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர், வடக்கு மாகாணசபை ஆளுநர் அலுவலகத்தில் மே மாதம் 7ஆம் திகதி அமைச்சரால் தயாரிக்கப்பட்ட இணைந்த நேர அட்டவணையில் முழுமையான உடன்பாட்டுடன் கையொப்பம் இட்டார்.

இணைந்த நேர அட்டவணையின் பிரகாரம் விரைவில் சேவையாற்ற முடியும் என்ற அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மே மாதம் 16ஆம் திகதி நடைபெறவிருந்த பணிப்புறக் கணிப்புக்கான அறிவித்தல் பிற்போடப்பட்டிருந்தது.

பணிப் புறக்கணிப்பு பிற்போடப்பட்டு ஒருமாத காலமாகியும், நேர அட்டவணையின் அடிப்படையில் சேவைகள் ஆற்ற ஆவன செய்யப்படவில்லை. இணைந்த நேர அட்டவணை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நோக்குடன் சேவையாற்றிய உரிமையாளர்கள் தற்போது அதில் நம்பிக்கை இழந்துள்ளார்கள் - என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டத்தில் சில திருத்தங்கள் ஆளுநரால் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அதனை வடக்கு மாகாண சபை ஏற்றுக்கொண்டு திருத்தியமைத்துள்ளது. இந்தத் திருத்தங்களுடன் நியதிச் சட்டம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படும். ஆளுநர் உடனடியாக இதற்கு ஒப்புதல் வழங்குவார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வந்திருந்த போது, இந்த விடயம் தொடர்பில் அவருடன் பேசினேன். ஆளுநரிடம் ஒப்புதலை விரைந்து வழங்கச் சொல்லியிருக்கின்றார். அது விரைவில் நடைமுறைக்கு வரும்" - என்று அமைச்சர் டெனீஸ்வரன் குறிப்பிட்டார். (ற-ஐ-5)

# படை முகாமால் பற்றையாகியுள்ள வயல் காணிகளை சீராக்கித் தருக

## மாசேரி, வெட்டைக்காடு, சாளம்பை விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21
இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட மாசேரி, வெட்டைக்காடு, சாளம்பை பிரதேச நெல்வயல்களை மீள் நெற்செய்கைக்கு உட்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி மூலத்தைப் பெறுவது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

இவ்வாறு கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் நிசாந்தன் தெரிவித்தார்.

இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட மாசேரி, வெட்டக்காடு, சாளம்பை பிரதேச நெல்வயல்கள் மீள் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என யாழ். கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டது. மனு தொடர்பில் கூறும்போதே உதவி ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக வயல் உரிமையாளர்களால் இந்த மனு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட செயலர் மற்றும் விவசாய திணைக்களப் பணிப்பாளருக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மாசேரி விவசாய சம்மேளனப் பிரிவுக்கு உட்பட்ட குறித்த நெல் வயல் பிரதேசங்கள் உவர் நிலங்களைக் கொண்டவை. அங்கு சாளம்பை என்ற இடத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு இருந்தது. அதனால் அந்தப் பிரதேசங்களில் நெற்செய்கை செய்ய முடியாத நிலையில் இருந்தது. தற்பொழுது பொறப்பத்தை, தில்லை, கண்டல், சம்புப்புல் என்பன வளர்ந்து பற்றைக் காடாக காட்சி அளிக்கின்றது.

இராணுவம் முகாம் அமைந்திருந்த காலத்தில், வரணி குடத்தனைக்குச் செல்வதற்குரிய பிரதான பாதையும், இராணுவத்தால் தடை செய்யப்பட்டிருந்தது. வயல் நிலங்களைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியது.

100 ஏக்கர் வரையான வயல் பிரதேசம் இவ்வாறு பற்றைகளால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு இராணுவ முகாம் அகற்றப்பட்டது.

மீள் பிரவேசிக்க முடியாத நிலையில் பற்றைகள், மரங்களின் வளர்ந்துள்ளன. அங்குள்ள தில்லை மரங்களை மனிதவலு மூலம் அகற்றுவதில் பெரும் சிரமத்தைச் சந்திக்க நேரிடும். தில்லை மரத்தினுடைய பால் கண், தோல் என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

இந்தப் பிரதேசத்தை மீளவும் பயன்படுத்தும் முகமாக விவசாயிகளின் நன்மை கருதி குறித்த திணைக்களம் உதவ வேண்டும். உவர் நிலங்களில் உள்ள தில்லை மரங்கள் மற்றும் பொறபத்தை, கண்டல் மரங்களை பைக்கோ இயந்திரத்தால் அகற்றல், இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளை தூர்த்து மட்டம் செய்தல், உழவு இயந்திரத்தின் மூலம் வயல்களை பண்படுத்துதல், நெற் பயிர் பாதுகாப்பு தொடர்பில் எல்லைபுறத்தில் கம்பி வேலி அடைத்தல், பொருத்தமான நெல் இனங்களை, பசளை வகைகளை வழங்கிட ஏற்பாடு செய்தல், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்- என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு கடந்த 16 ஆம் திகதி எமக்குக் கிடைத்துள்ளது. இந்தப் பிரதேசங்களில் உள்ள நெல் வயல்களை மீள் நெற் செய்கைக்கு உட்படுத்துவதற்கு தற்போது எம்மிடம் நிதி இல்லை.

உரிய நிதி பெறுவது சம்பந்தமாக ஆராயப்படுகின்றது. நிதி கிடைத்ததும் மாசேரி, வெட் டைக்காடு, சாளம்பை பிரதேச நெற் செய்கைக் காணிகள் மீள் நெற் செய்கைக்கு உகந்த காணிகளாக மாற்றப்படும் - உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ற-ஐ-ரி,122)

# சொரூபம் அமைந்துள்ள காணி முன் அறிவிப்பின்றி தனியாரிடம்

## பள்ளிமுனை மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

மன்னார், ஜூன் 21
பள்ளிமுனைக்கிராமத்தில் ஆலய சொரூபம் அமைந்துள்ள 8 பேர்ச் காணி எந்த அறிவிப்பும் இன்றி மன்னார் பிரதேச செயலகத்தால் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பள்ளி முனைக் கிராம மக்கள் நேற்றுப் பேரணி நடத்தினர். மன்னார் பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதியில் பேரணி நடத்தப்பட்டது.



மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தில் ஆலய சொரூபம் அமைந்துள்ள 8 பேர்ச் காணியை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு மன்னார் பிரதேச செயலாளர் வழங்கியுள்ளார். பள்ளிமுனை கிழக்கில் கடந்த 2 மாதங்களுக்கு முன் காணி இல்லாதவர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. 100 காணித்துண்டுகள் அளந்து எடுக்கப்பட்ட நிலையில் 96 நபர்களுடைய பெயர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால் பெயர் பட்டியலில் இல்லாத, பள்ளி முனைக்கிராமத்தைச் சேராத குடும்பம் ஒன்றுக்குக் காணி வழங்கப்பட்டுள்ளது என்று இப்போது குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது.

அந்தக் காணியில் தற்போது கொட்டில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. "பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் காணி இல்லாத நிலையில், பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தெரிவு செய்யப்படாத பள்ளி முனைக்கிராமத்தைச் சேராத குடும்பம் ஒன்றுக்கு காணி வழங்கப்பட்டது எந்த வகையில் நியாயம்?" எனப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் கேள்வி எழுப் பினர்.

நூற்றுக்கணக்கான மக்கள் தமது கிராமத்தில் இருந்து ஊர்வலமாக மன்னார் பிரதேச செயலகம் வரை சென்றனர். பின் பள்ளிமுனைக் கிராம மக்களின் பிரதிநிதிகள் சிலர், மன்னார் பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமாருடன் குறித்த பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர். தமது கோரிக்கை அடங்கிய மனுவையும் கையளித்தனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியாற்றுப் பாலத்தையும் விட்டுவைக்காத திருடர்கள்

## இரும்புக் கம்பிகளைத் திருடிச் செல்கின்றனர்

முல்லைத்தீவு, ஜூன் 21
பாலியாற்றுப் பாலத்தில் பயணிகள் பாதுகாப்புக்கு அமைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. அவை துண்டாக்கப்பட்டு திருடப்படுகின்றன. அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.
இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.
பாண்டியன்குளம் – துணுக்காய் சந்தியை இணைக்கிறது பாலியாற்றுப் பாலம். முல்லைத்தீவு மாவட்ட நீர்பாசனத் திணைக்கள நிதியுடனும், வவுனியா நீர்பாசனத் திணைக்களத்தின் அனுசரணையுடனும் அமைக்கப்பட்டது. கட்டுமாணத்துக்கு 90 மில்லின் ரூபா செலவிடப்பட்டது.
பாலத்தின் இருமருங்கிலும் பயணிகள் பாதுகாப்புக்கு இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவையே இப்போது அறுத்து எடுத்துச் செல்லப்படுகின்றன. இரவுவேளைகளில் திருடர்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.
பாலத்தினூடு மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம் மக்கள் பெருமளவு பிரயாணம் செய்கின்றனர். பாலத்தின் இருமருங்கும் உள்ள பாதுகாப்பு வேலி திருடப்படுவதால் இரவில் பயணிப்பதில் அவர்கள் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர்.
இது குறித்து உடன் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-ஐ-415)



## படையினர் அமைத்த மண் அணைகள் அகற்றப்படுகின்றன

சாவகச்சேரி, ஜூன் 21
எழுதுமட்டுவாழ், கரம்பகம் என்பன அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த வேளையில், படையினரால் அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றப்படுகின்றன.
அங்கு சென்ற யாழ்ப்பாண மாவட்ட செயலரிடம் மக்கள் இது குறித்து முறையிட்டிருந்தனர். கடந்த வாரம் தொடக்கம் மாவட்டச் செயலகத்தால் வாகனங்கள் மூலம் மண் அணைகள் அகற்றப்படுகின்றன.
அங்கு காணப்பட்ட பதுங்கு குழிகளும் மூடப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
இந்த மண் அணைகளால், பல இடங்களில் மழை வெள்ள நீர் வழிந்தோட முடியாத நிலை காணப்பட்டது.
(ற-ஐ-9)

## வழிகாட்டல் கருத்தரங்கு

கரணவாய், ஜூன் 21
சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தில் நடைபெறும், விளையாட்டு விஞ்ஞான முகாமைத்துக் கற்கை நெறி மற்றும் உடற்கல்வி கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப்பரீட்சை நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 23 ஆம் 24ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் குறித்த பல்கலைக்கழகத்தில் இந்தப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.
பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 9 மணி முதல் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடத்துப் படவுள்ளது.
சப்பிரகமுவ பல்கலைக்கழக 7 ஆம் அணி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கில் பரீட்சைக்கு விண்ணப்பித்த சகலரையும் பங்குபற்றி பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(ற-ஐ-108)

## பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 21
முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், 'சங்கமம்' சஞ்சிகை வெளியீடும் இன்று செவ்வாய்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலரா சாவும், சிறப்பு விருந்தின ராக யாழ்.கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸூம் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ற-ரி)

## விவாதப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 21
தனிநபர் மற்றும் சமூக விழுமியங்களைக் கட்டியெழுப்பும் நோக்குடன் யாழ்ப்பாணம் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் மாணவர்களிடையே விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிகளை நடத்தவுள்ளது.
பிரம்மகுமாரிகளின் சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
மாகாண மட்டத்தில் க.பொ.த உயர்தரப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இவை நடத்தப்படவுள்ளன.
32 தலைப்புகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் சுற்றுப் போட்டிகளும், இரண்டாம் சுற்றுப் போட்டிகளும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 11ஆம் திகதி வரை பாடசாலை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஐ-ரி)

## காணி சிறப்பு நடுவர்கள் சபை ஓகஸ்ட் முதல் வாரம் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 21
ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் விசேட நடுவர் சபை மூலம் காணி சம்பந்தமான பிணக்குகளைத் தீர்க்கும் நடைமுறை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பமாகும். நீதிச் சேவை ஆணைக்குழுவின் நடுவர் சபைகளின் ஆலோசகர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு இதனைத் தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்தில் நடுவர் சபைக்கு 27 பேர் தெரிவாகியுள்ளனர். விசேட நிர்வாகம் மற்றும் சட்டம் போன்ற துறைகளிலும் காணிச்சட்டம் போன்ற துறைகளில் பயிற்றப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியாகும். காணி சம்பந்தமாக நியமிக்கப்பட்ட அனைவருக்கும் பதவி வழி சம்பந்தமான சமாதான நீதிவான் பதவி வழங்கப்படும்.- என்றும் அவர் கூறினார்.
(ற-50)

## 227 லட்சம் ரூபா நிதியில் வலி.மேற்கில் உதவிகள்

### பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21
வலி. மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்வாதார உதவிகள் பெறுவோருக்காக மீள் குடியேற்ற அமைச்சு 227 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது என்று பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.
அண்மையில் பிரதேச செயலகத்தில் கால்நடை வளர்ப்பு சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற்றது. அதன்போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
உதவித் திட்டத்துக்கு வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 227 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடைய கால்நடைகள் வழங்கப்படவுள்ளன. பயனாளிகள் தெரிவில் முன் அனுபவம், ஆர்வம், இடவசதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆடு,மாடு, கோழி என்பன வழங்கப்படவுள்ளன.
தவறான பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போது பயன்தரு திட்டங்கள் தோல்வியில் முடிவடைகின்றன. அதனைக் கருத்தில் கொண்டே இந்த முறை இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.
பயனாளிகள் பாரம்பரிய முறைகளைக் கைவிட்டு, புதிய நுட்பங்களைக் கையாளக் கூடிய வாழ்வாதார உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன- என்றார். (ற-ஐ-ரி, 50)

## சிறுநீரகம்பாதிக்கப்பட்டால் மானிய அடிப்படை வீடுகள்

### வீடமைப்பு அதிகார சபையின் யாழ். முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21
சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மானிய அடிப்படையில்வீடமைப்புத்திட்டம்வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:-
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.
தேசிய வீடமைப்பு வாரமான ஜூன் 23 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த வீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
பயனாளிகள், தமது நோய் தொடர்பாக அரச வைத்தியசாலையில் பதிவை மேற்கொண்டவராகவும், தற்போது இந்த நோய்க்கான சிகிச்சை பெறுபவர் என்றும் விசேட வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதோடு ஏற்கனவே வீடற்றவராகவும், காணி உரிமையுள்ளவராகவும் இருத்தல் அவசியம்.
வீட்டுக்கான கொடுப்பனவாக 5 இலட்சம் ரூபாவும், ஏற்கனவே உள்ள வீட்டை மேம்படுத்துவதற்காக 2 இலட்சம் ரூபாவும் மானியமாக வழங்கப்படவுள்ளது.
இந்தத் திட்டத்துக்கு பொருத்தமான பயனாளிகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமோ அல்லது தங்கள் பிரிவு பிரதேச செயலாளரிடமோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்- என்றார். (ற-ஐ-ரி)

> தேசிய வீடமைப்பு வாரமான ஜூன் 23 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை யான காலப் பகுதியில் இந்த வீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது



சர்வதேச தந்தையர் தினத்தை முன்னிட்டு வன்னிப் ப்ட்டறை அமைப்பு, மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றை வழங்கியது. இந்த நிகழ்வில் புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபர் ச.பரமேஸ்வரநாதன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையைக் கோர கூட்டமைப்புக்கு உரிமை உண்டு

## எமது நிலைப்பாட்டில் நாமும் உறுதியாக உள்ளோம் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித கூறுகின்றார்

**தமிழ் மக்களின் இத்தனை கால கோரிக்கையும் ஒன்று கூடி வரும் நிலையில் அதை குழப்பியடிக்காது தமிழர் தரப்பு பொறுமையாக இருந்து தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ராஜித தெரிவித்தார்.**

கொழும்பு, ஜூன் 21

**எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசை விமர்சிக்கவும், சர்வதேச மட்டத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தவும், சர்வதேச விசாரணையைக் கோரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை உண்டு.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையோ, வடமாகாண முதல்வரின் கருத்துக்களையோ அல்லது புலம்பெயர் அமைப்புக்களின் கருத்துக்களையோ முழுமையாக நடைமுறைப்படுத்தித் தீர்வு காணவேண்டும் என்ற தேவை அரசுக்கு இல்லை. அனைத்து மக்களின் ஒருமித்த கருத்துக்கு அமையவே அரசு இறுதித் தீர்மானம் எடுக்கும்.

இவ்வாறு அமைச்சரவையின் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இத்தனை கால கோரிக்கையும் ஒன்றுகூடி வரும் நிலையில் அதைக் குழப்பியடிக்காது தமிழர் தரப்பு பொறுமையாக இருந்து தீர்வைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பிலான விவாதம் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது. புலம்பெயர் அமைப்புகள், ஐ.நா. ஆணையாளர் ஹுசேனைச் சந்திக்கவுள்ளன. இவை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

எதிர்க் கட்சியாகவோ அல்லது தமிழர் தரப்பாகவோ அல்லது அதையும் தாண்டி புலம்பெயர் அமைப்புகளின் உறுப்பினர்களாகவோ பலர் பல்வேறு கதைகளைக் கூறமுடியும்.

அரசு என்ற ரீதியில் நாம் நாட்டின் நிலமைகள் மற்றும் எம்மால் எவ்வாறு செயற்பட முடியும் என்பதற்கு அமைவாகவே நடக்க முடியும்.

புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியோ, கூட்டமைப்பின் கருத்துகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியோ, வடமாகாண முதல்வரின் கருத்துகளை முழுமையாக நடைமுறைப்படுத்தியோ அரசு செயற்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

நாட்டின் மூவின மக்களும் எதை விரும்புகின்றனர், எந்தத் தீர்மானம் நாட்டை பாதுகாக்கும் என்பதற்கு அமைவாகவே ஜனாதிபதியும், பிரதமரும் தீர்மானம் எடுப்பார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொடர்பில் சர்வதேச தரப்பிடம் தமக்கான சர்வதேச விசாரணை ஒன்றுவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். ஆரம்பத்தில் இருந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அவ்வாறானதாகவே அமைந்துள்ளன.

அரசின் நிலைப்பாட்டையும் சர்வதேச தரப்பு ஆராயும். எமது கொள்கைகள், நாம் மேற்கொள்ளும் நகர்வுகள் தொடர்பிலும் ஆராயப்படும். இப்போது நல்லிணக்கம் தொடர்பில் அரசு பலமான பொறிமுறைகளை கையாண்டு வருகின்றது.

முன்னைய அரசு செயற்பட்ட விதத்துக்கும், இப்போது நாம் செயற்படும் விதத்துக்கும் வேறுபாடுகள் உள்ளன. எமது அரசின் செயற்பாடுகளில் முன்னேற்றமும் உள்ளன. இப்போது நாம் எவ்வாறு செயற்பட்டு வருகின்றோம் என்பதைப் பொறுமையாக அவதானிக்கவேண்டும். எமது விசாரணைப் பொறிமுறைகள், நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரையில் அவதானிக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தமிழர்களின் பிரச்சினைகள் எவ்வாறு கையாளப்பட்டன, இப்போது நாம் எவ்வாறு கையாள்கின்றோம் என்பதையும் அவதானிக்கவேண்டும்.

இவர்கள் அனைவரும் நாட்டில் நிரந்த தீர்வு ஒன்று பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லாது தொடர்ந்தும், குழப்பகரமான அரசியலை முன்னெடுக்கவே முயற்சிக்கின்றனர். அரசு என்ற ரீதியில் எமது நிலைப்பாடு மிகவும் உறுதியானது. நாம் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளை ஒருபோதும் ஏற்படுத்திக் கொடுக்க மாட்டோம்.

இவர்கள் ஜெனிவாவில் யாரைச் சந்தித்தாலும், என்ன காரணிகளை முன்வைத்தாலும் அரசின் மீதுள்ள சர்வதேச நாடுகளின் பார்வையும் எம் மீதான நம்பிக்கையும் மாறப்போவதில்லை. அதற்கான உறுதியான ஆதாரம் இந்தமுறை ஜெனிவாத் தீர்மானத்தில் அனைவரும் அறியக் கூடிய வகையில் இருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தத் தேசிய அரசில் உறுதியான நிரந்தத் தீர்வை நாம் பெற்றுக் கொடுப்போம்.

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கையில் அனைத்து இன மக்களும் அமைதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம்.

இந்தச் சூழல் அமைய வேண்டுமாயின், தமிழர் தரப்பு பொறுமையாக இருக்க வேண்டும். தமிழர் தரப்பின் இத்தனை காலக் கோரிக்கையும் ஒன்றுகூடி வரும் நிலையில் அதைக் குழப்பியடிக்கக் கூடாது - என்றார். (ற-ஐ-5)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மூத்த மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச பொசன் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தியானம் மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டார் எனக் காட்டும் ஒளிப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன. (ஐ-5)

# கிணற்றுக்குள் விழுந்த திருடன் கோப்பியும் குடித்துத் தப்பினான்

கொழும்பு, ஜூன் 21

கோழி திருடச் சென்ற திருடன் கால் இடறி கிணற்றுக்குள் விழுந்துள்ளான். அவனைக் காப்பாற்றிய வீட்டிலிருந்தோர் அவன் திருடன் என்று அறியாது கோப்பி கொடுத்து உபசரித்து அனுப்பியுள்ளனர். இந்தச் சம்பவம் தென்பகுதியில் நடந்துள்ளது.

இரவு கோழி பிடிக்க வீடு ஒன்றுக்குள் இறங்கிய திருடனை அங்கிருந்த நாய் துரத்த ஆரம்பித்தது. தலை தெறிக்க ஓடிய திருடன் கிணற்றுக்குள் விழுந்துள்ளான். கிணற் றுக்குள் இருந்து திருடன் கத்தியதைக் கேட்ட வீட்டிலிருந்தோர் ஓடி வந்துள்ளனர். கையில் இருந்த கோழியை கிணற்றுக்குள் அழுத்தி மறைத்துள்ளான் திருடன்.

சீட்டு விளையாடிய தன்னைப் பொலிஸ் துரத்தியது என்றும், தப்பிப்பதற்காக ஓடி வந்து கிணற்றுக்குள் விழுந்து விட்டேன் என்றும் திருடன் கதை கூறியுள்ளான். அதை நம்பிய வீட்டிலிருந்தோர் அவனை வெளியே எடுத்து மாற்றுடை கொடுத்து, கோப்பியும் வழங்கி உபசரித்து அனுப்பி வைத்தனர்.

மறுநாள் கிணற்றுக்குள் அமிழ்த்தப்பட்டு இறந்த கோழி மெல்ல வெளியே வந்து மிதந்தது. அதைப் பார்த்த பின்னர் தான் வீட்டில் இருந்தோருக்கு நடந்த சம்பவம் புரிந்துள்ளது. குறித்த திருடனை அவர்கள் ஆத்திரத்துடன் தேடியுள்ளனர். ஆனால் திருடன் சிக்கவில்லை. (ற-ஐ-5)

# மருந்து தட்டுப்பாட்டுக்கு பணிப்பாளரே பொறுப்பு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அதற்கு வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களே பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

கண்டி வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

[illegible] தெரிவித்ததாவது:-

[illegible] தட்டுப்பாடு காணப் [illegible] நாம் தேவையானவற்றை இறக்குமதி செய்கின்றோம். வைத்தியசாலைகளில் போதுமான மருந்துகள் காணப்படும் நிலையில் சில வைத்தியசாலைகளில் குறைந்தளவே காணப்படுகின்றது.

இந்தக் குறைபாட்டை நீக்க வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அருகில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து மற்றொரு வைத்தியசாலைதமக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான வசதிகள் வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ற-ஐ-5)

# நிரந்தர வீடுகள் அமைப்பதில் தாமதங்கள் ஏற்படக்கூடும்

## கொழும்பில் வெள்ளத்தால் பாதிப்படைந்தோருக்கு மேலும் சிக்கல்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதில் தாமதங்கள் ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது.

வெள்ளத்தால் கடும் பாதிப்புக்குள்ளான பிரதேசம் என்று அடையாளம் காணப்பட்ட கொலன்னாவவுக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன்கள் உள்பட அரசு எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டி, மக்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும் என்று பிரதமர் தங்களைக் கேட்டுக் கொண்டார் என்று கொலன்னாவ பிரதேச பள்ளிவாசல் நிர்வாகத்தின் தலைவரான மொகமட் பைரூஸ் தெரிவித்தார்.

வீடுகளை இழந்தவர்களுக்கு, வீடுகளை அமைப்பதற்கு அங்கொட பகுதியில் 150 - 200 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வீடுகள் அமைத்து வழங்கப்படும் என்ற உறுதியை பிரதமர் வழங்கினார்.

தமது பிரதேசத்தில் சுமார் 70 சதவீத குடும்பங்கள் வழமைக்குத் திரும்பியுள்ளன. வீடுகளை இழந்துள்ள குடும்பங்கள் மைதானமொன்றில் கூடாரங்கள் அமைத்தும், பாடசாலையிலும் தங்கியுள்ளனர் என்று பைரூஸ் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அரசு உதவியாக முதற்கட்டமாக தற்போது 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் கொலன்னாவ பிரதேச மக்கள் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்தார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறையைக் கழுவுவதற்கு காலம் கனிந்துள்ளதாம்

கொழும்பு, ஜூன் 21
இராணுவத்தின் மீது படிந்துள்ள கறைகளை அகற்ற, வடக்கில் இன அழிப்பு நடக்கவில்லை என நிரூபிக்கக் காலம் வந்துள்ளது. இப்போது பின்னடித்தால் பொய்கள் உண்மையாகிவிடும்.
இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போது அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறினார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபை கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளநிலையில் இலங்கை தொடர்பான விவாதம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அதில் இலங்கையின் செயற்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்ற கேள்விக்கே பொன்சேகா இவ்வாறு கூறினார்.
போர் முடிந்ததும் நாடு விடுதலையடையாது. போர் நடந்த எந்த நாட்டிலும் அப்படி நடக்கவில்லை. போர் முடிக்கப்பட்டதும் உண்மைகளை வெளிப்படுத்தத் துணிவுடன் நடந்திருக்க வேண்டும். அவ்வாறு இங்கு நடக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்தே உண்மைகளைக் கண்டறியும் செயற்பாட்டில் தாமதமாக செயற்படுகின்றோம்- என்றும் பொன்சேகா குறிப்பிட்டார்.
போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது அதைப் பொய் என நிரூபித்திருக்க வேண்டும். இராணுவத்தின் மீது படிந்துள்ள கறையை நீக்க வேண்டும். மனிதாபிமான முறையில் இராணுவத்தினர் போரை முடித்தார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்- என்றும் அவர் தெரிவித்தார்.
வடக்கில் இராணுவத்தால் இன அழிப்பு நடத்தப்பட்டது என்று சர்வதேச அமைப்புக்களும், சில அரச சார்பற்ற நிறுவனங்களும் கூறுகின்றன. அதில் எந்த உண்மையும் இல்லை. வடக்கில் நடந்த சம்பவங்கள் உண்மையா இல்லையா என்பதை விசாரணை மூலமே நிரூபிக்க முடியும்- என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
தற்போது அதற்குக் களம் ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசியல் சூழலில், சர்வதேசத் துடன் ஏற்படுத்தியுள்ள நட்புறவின் மூலம் சரியான முறையில் கொண்டு செல்லலாம். போர்க் குற்ற விசாரணையைக் கடத்துவது அவற்றை உண்மையாக்க வாய்ப்பாகிவிடும். உள்ளக ரீதியிலோ அல்லது கலப்பு விசாரணைக்கு அமைவாகவோ விசாரணை ஒன்றை நடத்த வேண்டும். இந்தப் பிரச்சினையை உடன் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்- என்றும் பொன்சேகா கூறினார்.
(ந-ஜ-5)

# இராணுவம் மீதான குற்றச்சாட்டை விட்டுக்கொடுப்புடன் அணுகுங்கள்

## இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா சட்டமா அதிபரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21
இராணுவத்தினருக்கு எதிராக சுமத்தப்படும் படுகொலைக் குற்றச்சாட்டுகளில் விட்டுக் கொடுப்பு அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்.
இவ்வாறு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவிடம் இராணுவத் தளபதி கோரியுள்ளார்.
சட்டமா அதிபரை அவரது பணியகத்தில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா சந்தித்துள்ளார் என்று சத்ஹண்ட சிங்கள இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இராணுவத்தினருக்கு எதிரான பொலிஸ் விசாரணைகள் பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் பெயர்களை வெளியிட வேண்டாம் என்று இராணுவத் தளபதி கேட்டுக் கொண்டார்.
குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளை சட்டமா அதிபர் நியாயப்படுத்தியுள்ளார். ஆதாரங்களை மறைத்த குற்றச்சாட்டுக்கு இராணுவம் பதிலளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.
ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சர்வதேச சமூகத்தினர் இந்த விசாரணைகளில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் ஜெனிவா அமர்வில் இந்த விவகாரம் தொடர்பாக பதிலளிக்க வேண்டியிருக்கின்றது என்றும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்குப் பின்னால் இருந்த அனைவரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர். இந்த நிலையிலேயே இராணுவத் தளபதி சட்டமா அதிபரை அவசரமாகச் சந்தித்துள்ளார்.
இந்தப் படுகொலைக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மூன்று குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த விசாரணைக்காக இராணுவத்தினரின் நாளாந்த செயற்பாட்டுப் பதிவேட்டை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்க இராணுவம் தொடர்ந்தும் தயங்குகின்றது.
லசந்த படுகொலை தொடர்பாக அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.
கொலை நடந்தபோது சரத் பொன்சேகாவின் பாதுகாவலர்கள் எங்கே இருந்தனர் என்று விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
முன்னைய இராணுவப் புலனாய்வுத்துறைத் தலைவர் பிரிகேடியர் சுரேஸ் சாலியையும், விசாரணை செய்ய குற்றப் புலனாய் வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
இந்தப் படுகொலை நடந்த போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர் ஐரோப்பாவில் தங்கியிருந்தார். 2009 மார்ச் மாதமே நாடு திரும்பியிருந்தார் என்றபோதும் அவரிடம் விசாரணை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இந்த விசாரணைகள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுடன் தொலைபேசியில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா விசாரித்துள்ளார்.
படையினருக்கு எதிராக நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.
அதற்குப் பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டியது தமது கடமை என்று பதிலளித்தார்- என்றுள்ளது.
(ந-ஜ-5)

# சலாவ இராணுவ முகாம் வெடிப்புக்கு காரணம் இன்னும் வெளிவரவில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

சலாவ இராணுவ ஆயுதக்கிடங்கு வெடிப்புச்சம்பவத்தில், தீவிரவாதத் தொடர்பு அல்லது சதி இருந்தது எனக் கண்டறியப்படவில்லை. அதற்கான வாய்ப்புக்களை நிராகரிப்பதற்குமில்லை.
இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
சலாவ விபத்து தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சம்பவத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. விடுதலைப் புலிகள் அல்லது ஐ.எஸ். தீவிரவாதத் தொடர்புகள் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படும். நாசவேலைகள் இடம்பெற்றதா என்றும் விசாரிக்கப்படும். இது சதிவேலையால் அல்லது வேறு காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம். எதையும் இப்போது உறுதி செய்ய முடியாது. ஆனால் நாம் திறந்த மனோநிலையில் இருக்கிறோம். சதிவேலை என்பதற்கான எந்தத்தகவலோ, ஆதாரமோ கிடைக்கவில்லை. அது பற்றிய செய்திகள் அனைத்தும் வதந்தியே. இந்த ஆயுதக் கிடங்கில் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் இருக்கவில்லை. அனைத்தும் இராணுவத்தினரின் வெடி பொருள்கள் தான். இந்த விபத்தில் அழிந்து போன வெடிபொருள்களின் பெறுமதி தொடர்பான அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை.
ஆயுதக் கிடங்கில் இருந்த வெடி பொருள்கள் காலாவதியானவையா மீள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தவையா என்பது பற்றிய தகவல் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை. அதனை இராணுவத் தளபதியிடம்தான் பெறவேண்டும். பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த விவரங்களை அவர்கள் ஊடகங்களுக்கு வழங்காமல் விடக்கூடும்.
இந்த விபத்து தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.
எனக்குத் தெரிந்த வகையில் சலாவ முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 50 வீதமான வெடிபொருள்கள் இன்னொரு இடத்துக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் தான் வெடிப்பு நடந்துள்ளது- என்றார். (ந-ஜ-5)



# ஆஸி. போர்க் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில்

கொழும்பு, ஜூன் 21
ஆஸ்திரேலிய கடற்படையின் ஏவுகணைக் கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்துள்ளது. போர்க்கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளித்தனர்.
எதிர்வரும் வியாழக்கிழமை வரை கப்பல் இலங்கையில் தரித்து நிற்கும். பின்னர் மத்திய கிழக்குக்குப் பயணிக்கும். அதில் 192 மாலுமிகள் உள்ளனர். அவர்கள் பயிற்சிகள் மற்றும் இலங்கைக் கடற்படையினருடனான உறவைப் பலப்படும் நிகழ்வுகளில் பங்கேற்பர்.
கடல் சார் பாதுகாப்பு ஒத்துழைப்பில் இலங்கை, ஆஸ்திரேலியா நெருங்கிய உறவைக் கொண்டுள்ளன. (ந-ஜ-5)

## மைத்திரியை விரும்பும் 10 லட்சம் பேர்

கொழும்பு, ஜூன் 21
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முகநூல் பக்கத்தில் 10 லட்சம் பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசியல்வாதிகளில் 10 லட்சம் விருப்பம் பெற்ற முதலாவது அரசியல்வாதியாக மாறியுள்ளார் மைத்திரிபால.
மைத்திரிபால இந்த இலக்கை கடந்த சனிக்கிழமை கடந்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த இந்த இலக்கை நேற்றுக் கடந்தார். மகிந்த 10லட்சம் விருப்புக்களைப் பெற 6 ஆண்டுகள் தேவையாக இருந்தது. மைத்திரிபால 18 மாதங்களில் அதனைப் பெற்றுள்ளார். (ந-ஜ-5)

## பதில் பொலிஸ்மா அதிபர்களை நியமிக்குமாறு முன்மொழிவு

மூன்று பதில் பொலிஸ் மா அதிபர்களை நியமிக்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பொலிஸ் ஆணைக் குழுவிடம் முன் மொழிந்துள்ளார்.
இந்தப் பதவிக்கு ஏற்கனவே 12 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன. மேலும் 7 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள பொலிஸ் ஆணைக் குழுவின் சந்திப்பின் போது பரிந்துரை செய்யப்பட்ட பெயர்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்- என்று பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே கூறினார். (ந-ஜ-5)

# நாட்டின் சொத்துக்களைத் தாரை வார்க்கிறது அரசு

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21
நிதி அமைச்சர் மீதும், மத்திய வங்கி ஆளுநர் மீதும் மோசடிக் குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன. ஆனால் அரசு அவர்களைக் காப்பற்ற முயல்கின்றது. நாட்டின் சொத்துக்களை சூறையாட நினைக்கின்றது.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க சாடினார்.
இந்த அரசியல் காலாசாரத்தை முடிவுறுத்த வேண்டும். இது நாடகம் என்று மக்களுக்கு நன்கு விளங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது- குற்றவாளிகளும், மோசடியாளர்களும் ஜனாதிபதி, பிரதமரைச் சுற்றியே உள்ளனர். நாட்டை தூய்மைப்படுத்த வந்தவர்கள் இன்று குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றனர்.
வடக்கு மாகாணம் இந்தியாவுக்கும், தெற்கு சீனாவுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நாட்டின் வளங்கள் தாரை வார்க்கப்பட்டு வருகின்றன. தீர்வு பெற்றுத் தருவதாகக் கூறி சர்வதேச வியாபாரத்துக்குப் பாதை அமைத்துக் கொடுக்கின்றனர்.
இன்றைய அரசியல் சூழல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நல்லாட்சியை அமைக்க ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று முன்னைய ஊழல் மோசடிக்காரர்களை இணைத்துக் கொண்டுள்ளனர்- என்றார். (ந-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற போக்கில் நகரும் அரசின் செயற்பாடுகள்

✦ அடுத்துவரும் இரண்டு வருடங்களில், வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவம் அகற்றப்பட்டு, தேவைக்கு ஏற்ற அளவுக்கான படையினர் மட்டுமே நிலை நிறுத்தப்படுவர்.

✦ படையினர் தம்வசம் கையகப்படுத்தி வைத்துள்ள, தனியார் காணிகளை, அவற்றின் உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

✦ ஐக்கிய நாடுகள் சபை உட்பட, அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களின் ஆலோசனைகளுக்கு அமைய, அரச படைகளின் கட்டமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படும்.

✦ அரச படைக் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்யும்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

✦ நாட்டில் மீண்டும் மோதல்கள் உண்டாகாத வகையில்-- தடுக்கும் வகையில்--

ஐக்கிய நாடுகள் சபையின், சிறப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான பெப்லோ டி கிறிப்பின் ஆலோசனைகள் பெறப்பட உள்ளன.

✦ இப்போதைய அரசு, இனப்பிரச்சினையை அர்ப்பணிப்புடன் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு மனம் கொண்டுள்ளது.

மேற்போந்த கருத்துக்களை வெளியிட்டிருப்பவர், அமெரிக்காவில் நிலைகொண்டுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் ஆவார்.

ஆயினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய உகந்த சட்டம் ஒன்றை இயற்றி நடைமுறைப்படுத்தும் உகந்த நிலை (Possibilities) இல்லவே இல்லை என்பதை, தூதுவர் பிரசாத் காரியவாசம் முழு அளவில் வெளிப்படுத்தினார் என்பது இங்கு அழுத்திக் கூறப்பட வேண்டிய ஒன்றே!

இது குறித்துக் கூட்டிக் கழித்துப், பிரித்துப் பெருக்கிப் பார்க்கும் போது--

தேவர்களின் வாழ்வும் வளமும் குறித்த கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

அது சுவை மிக்கதொன்று.

பக்தன் ஒருவன் தேவர்களிடம் தனக்கு ஒரு ரூபா வேண்டும் என்று வரம் கேட்டானாம்.

இத்தனைக்கும் அவர்களின் கணக்குப் பெறுமதியில் ஒரு ரூபா வழங்கின், பக்தனுக்கு ஒரு கோடி ரூபாவுக்குச் சமன் என்பதாகும்! அந்தப் பணத்தை ஒரு நாள் கழித்துத் தருவதாகத் தேவர்கள் கூறினர் என்பதும் கதையின் சுவாரஸ்சியமான ஒரு பகுதி!

இங்கே நகைச் சுவை என்னவெனில், தேவர்களின் ஒரு தினம் (நாள்) பக்தனின் ஒரு யுகத்துக்குச் சமன்!

அந்த வகையில் பார்த்தால்--

அதே வகை சார்ந்து போலும்--

● வலி.வடக்கு மக்கள் ஆறு மாதங்களில், அவர்தம் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

● வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-- அது கொழும்பு அரச தரப்பின் பொறுப்பு.

✦ மேற்போந்தவை மட்டுமன்றி, கொழும்பு அரசபிரதானிகள் அவ்வப்போது அவிழ்த்துவிட்ட, இனிப்புப் பூசிய உறுதி மொழிகள்-- இந்த "யுகம்" கடந்தாலும் நடைமுறைக்கு வருமா என்பது நீண்டு உயர்ந்த வினாவாகவே எழுந்து நிற்கும்...!!!

மொத்தத்தில் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற முன்னோரின் முதுமொழிக்கு ஒப்பவே, அரசின் செயற்பாடுகள் நகர்கின்றன எனச் சொல்வதில் தப்பேதும் இல்லையே!

# பயங்கரவாதத்தின் கதை முடியப் போகிறது



**எம்.ஐ.முபாறக்**

முழு உலகமும் இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விடயம்தான் சர்வதேசத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் ஐ.எஸ். அமைப்பினர்களின் முடிவு அவர்களை முற்றாகத் துடைத்தெறியும் படை நகர்வுகளின் முன்னேற்றம் சர்வதேசத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. முழுமையான வெற்றியுடன் அந்த நகர்வுகள் அனைத்தும் முடிவடைய வேண்டும் என உலக நாடுகள் அனைத்தும் விரும்புகின்றன.

> ஐரோப்பிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் இணைவதாலும், ஐரோப்பிய நாடுகளையே இந்த இயக்கம் அதிகம் குறிவைத்துத் தாக்குவதாலும், அந்நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம்கள் உடல் மற்றும் உளரீதியாக அதிக தொல்லைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

**முஸ்லிம் மக்களுக்குத் தலையிடி**

குறிப்பாக, உலக முஸ்லிம்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ள- முஸ்லிம்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகச் சித்திரித்துள்ள இந்த ஐ.எஸ். இயக்கம் முற்றாக ஒழித்துக்கட்டப்படவேண்டும் என்ற விருப்பம் முஸ்லிம்களிடம்தான் அதிகம் உள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் இணைவதாலும், ஐரோப்பிய நாடுகளையே இந்த இயக்கம் அதிகம் குறிவைத்துத் தாக்குவதாலும் அந்நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம்கள் உடல் மற்றும் உளரீதியாக அதிக தொல்லைகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஐ.எஸ். அமைப்பினரைத் தேடுவது என்ற போர்வையில் பொலிஸார் நடத்தும் நாடகத்தால் ஐரோப்பிய முஸ்லிம்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர்.

பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் ஐ.எஸ். நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் போது முஸ்லிம்கள் பல துன்பங்களை அனுபவித்தனர்.

வன்முறை என்றால் என்ன? ஆயுதக் கலாசாரம் என்றால் என்ன? என்று தெரியாமல் வாழ்ந்து வரும் ஐரோப்பிய முஸ்லிம்கள் இன்று பயங்கர வாதிகளாகப் பார்க்கப்படுவதற்கு இந்த ஐ.எஸ். அமைப்புத்தான் காரணம்.

**ஐ.எஸ்.இஸ்லாத்துக்கு எதிரானது**

இந்த இயக்கம் இஸ்லாத்துக்கு முற்றிலும் முரணானது. இஸ்லாமிய பெயரில் இஸ்லாத்தை அழிக்க வந்த இயக்கம்தான் இது என்ற பரப்புரை போதியளவில் முன்னெடுக்கப்படாததால் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல முஸ்லிம் இளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள் இன்னும் ஐ.எஸ். இயக்கத்தால் கவரப்படவே செய்கின்றனர். இப்போதும்கூட, அந்த நாடுகளில் இருந்து முஸ்லிம் இளைஞர்கள் அந்த இயக்கத்தில் இணையவே செய்கின்றனர்.

ஆனால், அந்த இயக்கம் இப்போது அதன் முடிவு காலத்தை நெருங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த முடிவு முழுமையாக இல்லாவிட்டாலும், அவர்கள் நிலங்களை இழந்து கெரில்லாத் தாக்குதலுக்கு மாறுவர் என்பது நிச்சயம்.



2014ஆம் ஆண்டு சிரியாவில் ஒரு பகுதியையும், ஈராக்கில் ஒரு பகுதியையும் கைப்பற்றி கிலாபத் இஸ்லாமியப் பேரரசு ஆட்சி முறையை ஐ.எஸ். இயக்கம் பிரகடனப்படுத்தியது. அப்போது அவர்கள் வலிமையான நிலையில் இருந்துகொண்டு பல இடங்களை விறுவிறுவெனக் கைப்பற்றி, அவர்களின் போலி அதிகாரத்தை இந்த இரண்டு நாடுகளிலும் விரிவாக்கிக் கொண்டு சென்றனர்.

ஆரம்பத்தில் அவர்களிடம் இருந்த அசுர வேகத்தால் அரச படையினர் பின்வாங்கவே செய்தனர். பின்னர் சுதாகரித்துக் கொண்ட அரச படையினரும் அவர்களுடன் இணைந்த துணைப் படையினரும் அமெரிக்க மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் உதவியுடன்-விமானத் தாக்குதல்களின் பலத்துடன் முன்னேறத் தொடங்கினர். இதனால் ஐ.எஸ். இயக்கம் கைப்பற்றி இருந்த இடங்கள் ஒவ்வொன்றாகப் பறிபோயின.

ஈராக்கின் குர்திஸ்தான் பகுதியில் அமைந்துள்ள சின்ஜார் நகர், அன்பார் மாகாணத்தின் ரமதி நகர், மொசூல் மற்றும் பலூஜா ஆகியவை ஐ.எஸ். இயக்கத்திடம் ஆரம்பத்தில் வீழ்ந்தன. பின்னர் ஈராக்கிய படையினரின் முன்னேற்றகரமான படை நகர்வால் சின்ஜார் மற்றும் ரமதி நகர்கள் மீட்கப்பட்டன.

இப்போது ஈராக்கில் ஐ.எஸ். இயக்கத்திடம் எஞ்சி இருப்பது மொசூல் மற்றும் பலூஜா ஆகிய இரண்டு முக்கிய இடங்களும் வேறு சிற்சில கிராமங்களும் தான். மேற்படி இரண்டு இடங்களும் வீழ்ந்தால் ஈராக்கில் ஐ.எஸ். முழுமையாக வீழ்ந்தமைக்குச் சமமாகும்.

> “பலூஜாவை அண்டியுள்ள பல இடங்களை ஈராக்கிய படையினர் இப்போது மீட்டெடுத்துள்ளனர். இன்னும் ஒருசில நாள்களில் பலூஜா முற்றாக வீழ்ந்துவிடும் நிலையில் உள்ளது.
> மறுபுறம், சிரியாப் படையினரும் சமகாலத்தில் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிரான தாக்குதலைத்”

**பலூஜா நகர் வீழும் நிலையில்**

இந்த நிலையில், பலூஜா நகரை நோக்கிய படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, அது இப்போது வெற்றியின் விளிம்பில் நிற்கின்றது. பலூஜாவை அண்டியுள்ள பல இடங்களை ஈராக்கிய படையினர் இப்போது மீட்டெடுத்துள்ளனர். இன்னும் ஒருசில நாள்களில் பலூஜா முற்றாக வீழ்ந்துவிடும் நிலையில் உள்ளது.

மறுபுறம், சிரியாப் படையினரும் சமகாலத்தில் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிரான தாக்குதலைத் தொடங்கியுள்ளனர். சிரியா அரசுக்கும் அந்த நாட்டின் எதிர்கட்சிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து, சிரியா படையினர் ஐ.எஸ்ஸுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தினர்.

இதனால், பல்மைரா நகரை ஐ.எஸ் இயக்கம் இழந்தது. தொடர்ந்து ஐ.எஸ்ஸின் தலைநகராகத் திகழும் ரக்கா நகரைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கை இடம்பெறுகின்றது. இந்த நகரம் மீட்கப்பட்டால் சிரியாவில் ஐ.எஸ்ஸுக்களின் கதை முடிவுக்கு வந்துவிடும்.

சிரியாவும்–ஈராக்கும் பறிபோகும்பட்சத்தில் லிபியாவையே அவர்கள் தளமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தனர். 2014 ஆண்டு முதலே அவர்கள் அங்குகால்பதிக்கத்தொடங்கிவிட்டனர். ஆனால், அவர்களுக்கு எதிராக சமகாலத்தில் அங்கும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அவர்கள் கைப்பற்றி இருந்த எரிபொருள் துறைமுகம் மீட்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களையும் மீட்டெடுக்கும் சண்டை உக்கிரமடைந்துள்ளது.

**மூன்று நாடுகளில் தாக்குதல்கள்**

இவ்வாறு ஐ.எஸ். நிலை கொண்டிருக்கும் மூன்று நாடுகளில் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டு, அவர்கள் தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் ஒரே நேரத்தில் மூன்று நாடுகளையும் இழக்கப் போவது சாத்தியமாகும் எனத்தெரிகின்றது.

அவ்வாறு அந்த நாடுகளை இழக்கும் பட்சத்தில், அவர்களின் போலி அதிகாரம் வலுவிழந்துவிடும். அவர்கள் கெரில்லாத் தாக்குதலுக்கே மாற வேண்டிவரும். அந்தக் கெரில்லாத் தாக்குதல் மூலம் எதையும் பெரிதாகச் சாதிக்க முடியாது. அவர்களின் அதிகாரத்துக்கு உயிரூட்ட முடியாது.

ஆகவே, உலகம் இன்று பயங்கரவாதிகளின் வீழ்ச்சியை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது. மிக விரைவில் ஐ.எஸ். இயக்கத்தின் கதை முடிவடையப் போகிறது.

# வெள்ள இடர்கள்

புகையிரதப் பாதை மற்றும் ஏ –9 வீதியிலிருந்து மழை வெள்ளம் வழிந்தோடி ஜே/302 கிராம சேவகர் பிரிவின் சங்கத்தானை கிராமத்துக்குள் வெள்ளமாக பாய்வதால் சிறிய மழைக்குக் கூட கிராமம் வெள்ளத்தில் மூழ்கி, வெள்ள நீர் வீடுகளினுள் புகுந்து விடுகிறது. மலசல கூடங்கள் நிரம்பிவிடுகின்றன. கிணறுகளினுள்ளும் வெள்ள நீர் புகுந்து விடுகிறது. இவற்றால் இந்தக் கிராம மக்கள் குடும்பம் குடும்பமாக உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் புக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையும் பாதிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக பிரதேச செயலர், நகரசபைச் செயலாளர், சாவகச்சேரி இடர் முகாமைத்துவப் பிரிவு ஆகியோருக்கு எம்மால் முறைப்பாடு செய்யப்பட்டு, எமது முறைப்பாட்டுக்கு அமைய பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட தரப்புகளான புகையிரதத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், நகர சபைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்தார். இதன் விளைவாக சம்பந்தப்பட்ட தரப்புக்களான புகையிரத திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், நகரசபைச் செயலாளர், பிரதேச செயலக அதிகாரிகள் ஜே/302 கிராம சேவகர், நகர சபை அதிகாரிகள், கிராம பொதுஅமைப்புகள் மற்றும் அதிகாரிகளுடன் பிரதேச செயலரும் குறித்த இடங்களை நேரில் வந்து பார்வையிட்டனர். இவர்களுக்கு இந்தப் பிரதேச மக்கள் ஒன்று கூடி, தமது பாதிப்புக்களை அடையாளம் காட்டி எடுத்துக் கூறியிருந்தனர்.

அதிகாரிகளும் பிரச்சினையை உணர்ந்து, இந்தப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனப் பொதுமக்கள் முன்னிலையில் வாக்குறுதியளித்துச் சென்றுள்ளனர்.

“இது செய்தியாக மே 27ஆம் திகதிய உதயன் பத்திரிகையிலும் பிரசுரமாகி இருந்தது.”

நடவடிக்கை எடுத்த பிரதேச செயலர், பிரதேச செயலக அதிகாரிகள், ஜே/302 கிராம சேவகர், நகரசபைச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் எமது நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகின்ற மாரிமழைக்கு முன்னர் விரைந்து வடிகால் குழாயை மூடி அல்லது வடிகாலை நீடித்து இந்த வெள்ள இடரிலிருந்து எமது கிராம மக்களைப் பாதுகாத்து, சுமுக வாழ்வு வாழ வழி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்புக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நா. சுதந்திரன்

# ஆத்மீகவாதிகளின் பின்னால் அணிதிரள்வீர்!

அன்றாடம் சாப்பாட்டுக்காக உடல் வருந்தி உழைக்கும் மக்கள், தமது தேவைகளுக்காக அரசியல்வாதிகளின் பின்னால் அணி திரள்கின்றனர். மக்கள் நம்பும் அந்தப் பிரமுகர்களில் சிலரோ தமது தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் சொத்துக்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு, மக்களை ஏய்த்து வருகின்றனர். குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் அவர்களின் அட்டகாசங்கள் மக்களுக்குத் தெரிந்திருந்தும், மக்கள் அவர்களையே சுற்றி வருவது எனக்கு மிகவும் மனவேதனையைத் தருகிறது. அதன் விளைவே இந்தக் கடிதம். கொஞ்சம் இதனைச் சிந்தித்து மக்கள் தமது விடுதலையை நோக்கிச் சென்றால்போதும். அவர்களின் அட்டகாசம் விரைவில் அடங்கிவிடும்.

ஆத்மீகவாதிகளோ மக்கள் இப்படி ஏமாற்றுகிறார்களே என்று வருந்திக்கொண்டு தம்மை நோக்கி அவர்கள் கவனம் திரும்பும் என்று காத்திருக்கிறார்கள். இவர்கள் கைகளில் ஒலி பெருக்கி இல்லையே தவிர, அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஊடகங்கள் மூலம் செயற்பட்டபடியே உள்ளனர். தமது சாப்பாட்டுக்கு உழைக்கும் நேரத்தில் சில நிமிடத்துளிகளை ஒதுக்கி தமது துன்பங்களுக்கு எவர் காரணம்? எனச் சிந்திப்பார்களேயாயின் நன்மை உண்டாகும். ஆத்மீகமே இன்றைய துன்பங்களை யெல்லாம் போக்கவல்லது.

சாவகச்சேரியூரான்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கி வான் தாக்குதலில் ஐ.எஸ். 23 பேர் சாவு

தெகரான், ஜூலை 21
வடக்கு சிரியாவில் துருக்கி இராணுவம் மற்றும் கூட்டுப்படை வான் தாக்குதல்களை மேற்கொண்டது. அதில் ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சந்தேகிக்கப்பட்ட இலக்குகள் மீது 33 தடவைகள் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதல் நடத்தப்பட்ட பிரதேசத்தை அடையாளப்படுத்த இராணுவத் தரப்பு மறுத்துள்ளது.

வடக்கு சிரியாவின் கிலிஸ் பகுதி ஐ.எஸ். அமைப்பின் கைகளில் உள்ளது. அந்தப் பகுதியில் கடும் வான் தாக்குதல்கள் நடத்தபட்டு வருகின்றன. ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இதுரை 70க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
(ற-ரி4)

# ஆப்கன் தலைநகரில் மனிதக் குண்டுத் தாக்குதல்

காபூல், ஜூன் 21
ஆப்கன் தலைநகர் காபூலில் மனிதக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் 14 பேர் இறந்தனர். 8 பேர் காயமடைந்தனர். இந்தத்தாக்குதலுக்குதலிபான்அமைப்பு உரிமை கோரியுள்ளது.

நேபாள பாதுகாப்பு அதிகாரிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. உயிரிழந்தவர்கள் இன்னமும் அடை



யாளம் காணப்பட வில்லை. வீதியில் பயணித்த வாகனங் கள் பல சேதமடைந்துள்ளன. பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருக் கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ற-ரி4)



இந்தோனேசியாவில் கடந்த சில தினங்களாகக் கடும் மழை பெய்கின்றது. பல இடங்களில் நிலச்சரிவும், வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது. மத்திய ஜாவலால் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் பல வீடுகள் புதையுண்டன. பல இடங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. இடர்களில் சிக்கி 42 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணிகளில் இராணுவம், பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். மழை தொடர்ந்து கொண்டிருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. (ற - ரி4)

## படகுகளை புரட்டிய புயல்

மொஸ்கோ, ஜூன் 21
வட மேற்கு ரஷ்யாவின் கரேலியா ஏரியில் சுற்றுலாப் படகுகள் புயலில் சிக்கின. அதில் பயணித்த 11 பேர் உயிரிழந்தனர். அவர்களின் 10 பேர் சிறுவர்களாவர். சிலர் காணாமல் போயுள்ளனர்.

47 சிறுவர்கள் உட்பட 51 பேர் மூன்று படகுகளில் ஏரியில் பயணித்துள்ளனர். அதில் இரு படகுகள் புயலில் சிக்கின.

புயல் திடீரென உருவாகியதால் எச்சரிப்பதற்கு முடியாமல் போனது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
(ற-ரி4)



## கர்ப்பிணி பெண்ணும் கணவரும் கொலை

லாகூர், ஜூன் 21
பாகிஸ்தானில் கர்ப்பிணிப் பெண் ஒருவரும், அவரது கணவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த பெண்ணின் சகோதரரே கொலை செய்துள்ளார்.

தம்பதியர் அடித்துக் கொல்லப்பட்டிருந்தனர். கால்வாய்க்குள் அவர்களது உடல்கள் வீசி எறியப்பட்டிருந்தன. கடந்த வியாழக்கிழமை உடல்கள் இனம்காணப்பட்டன.

4 நாள்களில் குழந்தை பிரசவிக்க இருந்தநிலையில் குறித்த பெண் கொல்லப் பட்டுள்ளார்.

இறந்தவர்களின் உடல்களை பெற்றோர் ஏற்கவில்லை. பொலிஸார் உடல்களை அடக்கம் செய்தனர்.

இந்தக் கொலைகளைக் கண்டித்து நேற்று லாகூரில் பெண்கள் அமைப்[illegible] ஆர்ப்பாட்டம் நடத்தின. அதில் [illegible] எண்ணிக்கையான பெண்கள் [illegible]ண்டனர். (ற-ரி4)

# வன்முறையானது ஆர்ப்பாட்டம் 6 பேர் உயிரிழப்பு: 53 பேர் காயம்

## மெக்சிக்கோவின் ஒக்ஸ்சாக்காவில் பரிதாபம்



மெக்சிக்கோ, ஜூன் 21
மெக்சிக்கோவில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் 6 பேர் உயிரிழந்தனர். 53 பேர் காயமடைந்தனர். ஒக்ஸ்சாக்காவில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அரசுக்கு எதிரான எண்ணெய் நிறுவனக் கழிவுகளால் பாதிப்பு ஏற்படும் என்று ஆய்வறிக்கை குறிப்பிட்டிருந்தது. இருந்தபோதும் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று ஆர்ப்பாட்டம் செய்த ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியோர் பெற்றோல் குண்டுகளால் தாக்கியுள்ளனர். பொலிஸார் சூடு நடத்தியுள்ளனர். பொலிஸாரின் தகவலின்படி 21 பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று அரசுக்கு சமீப காலமாக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. உள்ளூர் ஆசிரியர் சங்கத் தலைவரும் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.
(ற-ரி4)

## பல் பிடுங்கிய ஹெலிகொப்டர்

வொஷிங்டன், ஜூன் 21
அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தைச் சேர்ந்த றிக் றகீம் தனது மகனின் பல்லை ஹெலியைக் கொண்டு பிடுங்கியுள்ளார்.

7 வயது மகனின் ஆடும் பல்லை நூலால் கட்டி ஹெலியால் இழுத்தார் அவர். மகனின் பாற்பல்லு பிடுங்கப்பட்டது.

13 வருடங்கள் விமானியாகப் பணியாற்றிவர் றகீம். இவ்வாறு பல் பிடுங்கியமை இதுவே முதற்டவையாகும். பிள்ளைகளுடன் ஆனந்தமாக நேரத்தை செலவிடுங்கள், புதிய விடயங்கள் மூலம் அவர்களைக் கவருங்கள் என்ற பதிவுடன் பல் பிடுங்கும் காணொலி இணையத்தில் பதிவேற்றப் பட்டுள்ளது.
(ற-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கின்றனர் அகதிகள் எச்சரிக்கிறது ஐ.நா. அமைப்பு

ஜெனிவா, ஜூன் 21

கடந்த ஆண்டு 65.3 மில்லியன் மக்கள் சொந்த நாடுகளை விட்டு வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இவ்வாறு ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்தது.

113 பேரில் ஒருவர் வேறு நாட்டில் அகதியாகவோ அல்லாது உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்து வாழ்பவராகவோ உள்ளார் என்று அந்த அமைப்புக் கூறுகின்றது.

சிரியா, ஆப்கன், புருண்டி, தென் சூடான் ஆகிய நாடுகளில் நடைபெற்றுவரும் உள் நாட்டுப் போர்களே அகதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. 21.3 மில்லியன் அகதிகள் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் அரைவாசி எண்ணிக்கையானோர் சிறுவர்கள்.

> “சிரியா, ஆப்கன், புருண்டி, தெற்கு சூடான் ஆகிய நாடுகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர்களே அகதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. 21.3 மில்லியன் அகதிகள் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் அரைவாசி எண்ணிக்கையானோர் சிறுவர்கள்.”

அகதிகள் மத்திய தரைக் கடலைக் கடந்து ஐரோப்பா செல்கின்றனர். நெருக்கடியில் இருக்கும் மக்கள் செல்வந்த நாடுகளை நோக்கி நகருகின்றனர். அவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் ஐரோப்பா காலப்போக்கில் நெருக்கடிகளைச் சந்திக்கும். மக்கள் தொடர்ந்தும் ஐரோப்பாவுக்கு வருவார்கள். இதனைப் புரிந்து செயற்பட வேண்டும் - என்று ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

2015ஆம் ஆண்டு 2 மில்லியன் அகதிகள் தொழில் துறையுள்ள நாடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சம் சிறுவர்கள் பெற்றோரை விட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை 3 மடங்கு அதிகமாகும்.

ஜேர்மனியில் தஞ்சம் கோருவோரில் மூன்றில் ஒருவர் சிரியாவைச் சேர்ந்தவர். இதுவரை 4 லட்சத்துக்கும் அதிகமானோர் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

உலக அகதிகளின் எண்ணிக்கையில் 86 சதவீதத்தினர் (2.5 மில்லியன்) துருக்கி மற்றும் சிரியாவில் இருந்து அகதிகளானவர்கள். அடுத்த இடங்களை பாகிஸ்தான், லெபனான் ஆகிய நாடுகள் வகிக்கின்றன. (ற-ரி4)

## மனிதர்களைத் தாக்கியதால் 18 சிங்கங்கள் கூண்டுக்குள்

புதுடில்லி, ஜூன் 21

இந்தியாவில் கீர் வனவிலங்குப் பூங்காவில் 18 சிங்கங்கள் பிடிக்கப்பட்டு கூண்டுகளில் அடைக்கப்பட்டன. அந்தப் பகுதியில் மனிதர்களின் மீது சிங்கத்தின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. தாக்குகின்ற சிங்கத்தைக் கண்டு பிடிக்கவே ஏனையவையும் கூண்டுகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளன.



ஒவ்வொரு சிங்கமும் பரிசோதிக்கப்பட்டு மனித இறைச்சிக்குப் பழக்கப்பட்ட சிங்கம் இனம்காணப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மனித இறைச்சிக்குப் பழக்கப்பட்ட சிங்கம் மீண்டும் வெளியே விடப்படமாட்டாது என்றும் அது வாழ்நாள் முழுவதும் கூண்டில் அடைக்கப்படும் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதுவரை சிங்கம் தாக்கிய 6 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-ரி4)



ஓர்லாண்டோ துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் இறுதிச் சடங்குகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. அதில் தேவ தூதர்கள் போன்று ஆடை அணிந்த 200 கிறிஸ்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'கடவுள் ஓரினச் சேர்க்கையை வெறுக்கிறார்' என்ற தலைப்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ற-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
# பிறந்த எண்ணின் பலன்கள்
# 7

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 7 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இப்போது இல்லற சந்நியாசிகளான 7 ஆம் எண்காரர்களைப் பற்றிவிரிவாகப் பார்ப்போம். சோதிட நூல்கள் எல்லாம் இந்தக் கேதுவைப்பற்றி மிகவும் பயமுறுத்துகின்றன.

இந்த எண் மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது. மற்ற எண்களெல்லாம், மனிதனின் பிரார்த்தனைகளுக்கும், சக்திக்கும், வசியங்களுக்கும் கட்டுப்பட்டவை. ஆனால், இந்த 7 எண் மட்டும் இறைவனின் சர்வவல்லமை மிகுந்த எண்ணாக உள்ளது. இவர்களது பேச்சில் எப்போதும் பரம்பொருள், விதி, இறைவன் என்ற வார்த்தைகள் மிகுந்திருக்கும். 7 ஆம் எண்ணானது இளமைக் காலத்தில் போராட்டங்களையும், வறுமையையும் (பெரும்பாலோருக்கு) கொடுக்கும்.

ஆனால் நடுவயதுக்கு மேல் பெருத்த யோகங்களையும், பெரும் செல்வத்தையும் கொடுத்துவிடும். இவர்கள் தங்களின் கடுமையான உழைப்பில் வந்தபணத்தை, ஏழைகளின் நல்வாழ்க்கைக்காகவும், ஆலயத் திருப்பணிகளுக்காகவும், பொதுத் தொண்டுக்காகவும் அநாதை ஆச்சிரமத்துக்காகவும் செலவழிப்பார்கள். இவர்கள் உடையிலே எளிமையும், ஆனால் சுத்தமும் இருக்கும். தங்களது கடமையிலேயே மிகவும் கவனமாக இருப்பார்கள். இவர்களது செயல்களில் கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்கும். உலகத்தை உய்விக்க வந்த இயேசுபிரான், ஆதிசங்கராச்சாரியார், ரவீந்திரநாத் தாகூர் ஆகியோரெல்லாம் இந்த 7 ஆம் எண்ணில் பிறந்தவர்களே. இவர்கள் உலகப்பயணம் செய்து, தங்களது அனுபவங்களை உலகத்தாருக்கு பரப்புரை செய்வார்கள்.

பொருளாதார நிலை 7 ஆம் எண் அன்பர்களுக்குத் திருப்திகரமாக இருக்காது. வேதனைகளும், சோதனைகளும் இவர்களைத் தொடர்ந்து வரும். எந்த ஒரு செயல் தொடங்கினாலும் அதை நிறைவேற்றுவதற்காகப் பல தடைகளைச் சந்திக்க வேண்டி வரும். கேது பகவான் கொடுக்க ஆரம்பித்தால் அதை வேறு எவரும் (கிரகங்கள்) அழிக்கவோ, தடுக்கவோ முடியாது என்பது சோதிட உண்மையாகும். எப்படியும் நல்ல வளமான வாழ்க்கையைத் தங்களது வாழ்நாளில் அடைந்து விடுவார்கள்.

7 ஆம் எண்ணின் பலம் குறைந்த அன்பர்கள் பலர் உயர் கல்வி அமைந்திருந்தும், திறமைக்கேற்ற ஊதியம் கிடைப்பது மிகுந்த தடைப்படும். பெரும்பாலான 7 ஆம் எண்காரர்கள் இதனை நினைத்து வேதனையும், வாழ்க்கையில் விரக்தியும் அடைகின்றனர்.

பல லட்சக்கணக்கான மூலதனத்தைப் போட்டும், செய்தொழிலில் முன்னேற்றத்தைக் காணாத நபர்களின் எண்கள் 7 ஆக இருப்பதைக் காணலாம். அதேபோன்று இந்த எண்காரர்கள் தொழிலில் திடீரென தாழ்ந்தும், பதவி விலகல் கடிதம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியத்துக்கும் ஆளாகின்றார்கள்.

ஆனால், இந்த அன்பர்கள் சலிக்காமல் மனோ தைரியத்துடன் வாழ்க்கையில் போராடுவார்கள். 3 ஆம் எண்காரர்கள், போன்று இவர்களும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பார்கள். சகோதரன் தனது சொத்தை எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை, என் தலைவிதி என்று இருப்பார்கள்.

என்னை உற்றாரும், ஊராரும் மதிப்பதில்லையே. என்றொருநாள் மக்களும், உறவினர்களும் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கையும், எதையும் தாங்கிக் கொள்ளும் மனோபலமும் உண்டு. மனதில் கற்பனை வளரும். பிரபஞ்ச சக்தியுடன் உடனடித் தொடர்பும் இவர்களுக்கும் கிடைக்கும். தங்களது வாழ்க்கையில் கடினமாக உழைத்துத்தான் முன்னேற வேண்டுமே தவிர, அடுத்தவர்கள், உறவினர்கள் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

ஒன்பது எண்களிலும் 9 ஆம் எண்ணுக்கே முன்கோபம் உண்டு. அதை அடுத்து இந்த 7 ஆம் எண்காரர்களுக்கும் முன்கோபம் அடிக்கடி வரும். இந்தக் குணத்தினாலேயே, இவர்களது நல்ல செயல்களும், குணங்களும் மக்களால் மறக்கப்படுகின்றன. பொதுவாகத் தங்கள் மனத்தில் உள்ளதை அப்படியே வெளியில் சொல்லி விட மாட்டார்கள். இவர்கள் ஆத்மபலம் மிகுந்தவர்கள்.

(தொடரும்)

---

# வாழ்வில் புரிதல் இல்லையாயின் பிரிதலே முடிவு

சி. நற்குணலிங்கம்

புரிதல் என்பது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளலாகும். புரிதல் என்பது எல்லாத் தரப்பு உறவுமுறைகளுக்கும் பொதுவான ஒன்றாகும். புரிதல் காதலன், காதலிக்கிடையில், பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில், நண்பர்களுக்கு இடையில், கணவன்-மனைவிக்கு இடையில், சகோதரர்களுக்கிடையில், உறவினர்களுக்கு இடையில், மாமன், மாமி, மருமக்களுக்கிடையில் என எல்லாத் தரப்பு உறவுகளுக்கிடையிலும் காணப்படும்.

உறவுகள் வளர்வதற்கும் உறவுகள் அறுபடுவதற்கும் முக்கிய காரணியாக விளங்குவது புரிதல், அதாவது புரிந்துணர்வாகும். வாழ்க்கைக்கு அத்திபாரமாக இருப்பது புரிதலாகும். சரியான புரிதல் வாழ்வில் இல்லையாயின் விரிசல் ஏற்பட்டு இறுதியில் பிரிதலில் வாழ்வு முடிவடையும்.

புரிந்துணர்வு இல்லையாயின் வேலை சொந்தபந்தங்கள், நட்பு என எல்லாவற்றையும் இழக்க நேரிடும். புரிதல் என்பது நான்கு எழுத்துக்களாக இருப்பினும், அதன் தன்மை மிகப் பெரியதாகும். மனைவி எது செய்தாலும் கணவன் அதில் குறை காண்பதாகவும், கணவன் எது செய்தாலும் மனைவி அதில் குறை காண்பதாகவும் சந்தேகத்துடன் நடப்பார்களாயின், இவர்களுக்கிடையில் புரிந்துணர்வை எதிர்பார்க்க முடியாது. கணவன், மனைவி ஒருவர் குறித்து மற்றவர் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். இரு பகுதியினரும் தப்பான வழியில் செல்லமாட்டார்கள் என்ற அடிப்படைத் தெளிவு இருவருக்குமிடையில் காணப்படவேண்டும், அதுதான் புரிந்துணர்வாகும். இங்கு சரியான புரிதல் ஏற்படவில்லையாயின் வாழ்வு விவாகரத்தில்தான் முடிவடையும். எனவே வாழ்வில் புரிதலைப் பின்பற்றி பிரிதலில்இருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையை இன்பமயமாக்குவதில் கணவன், மனைவிக்கிடையிலான புரிந்துணர்வு மிக முக்கியமானதாகும்.

மாமன், மாமி, மருமக்களுக்கிடையிலான புரிதல் என்பது வாழ்வில் முக்கிய நிகழ்வாகும். புதிதாகத் திருமணம் செய்கின்ற ஒவ்வொரு தம்பதியினரும் தாங்கள் மகிழ்ச்சியாகவும், சந்தோசமாகவும் வாழ மனைவி தனது கணவனின் குடும்பத்தினருடனும் கணவன் தனது மனைவியின் குடும்பத்தினருடனும் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அங்கு புரிதல் குறைவடைந்து சில மனஸ்தாபங்கள் உருவாகுமாயின் ஒட்டு மொத்த குடும்ப மகிழ்வையும், உறவையும் பெரிதும் பாதிக்கும். எனவே மாமன், மாமி மருமக்களுக்கிடையிலே புரிந்துணர்வு வளப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தமது ஒவ்வொரு அசைவிலும் அவதானத்தை மேற்கொள்வதுடன் உற்று நோக்கலையும் செலுத்திக்கொள்ளல் சிறந்ததாகும்.

ஒரு குழந்தைக்கு உலகின் முதல் சொந்தமாக தாயானவள் காணப்படுகிறாள். அதனைத் தொடர்ந்து தந்தை காணப்படுகின்றார். பெற்றோர், பிள்ளை உறவு வாழ்வின் மிக முக்கிய உறவாகும். குழந்தைகளைக் கவனிப்பதில் இருவருக்குமே சரி பங்குண்டு. பிள்ளைகள் மீது பெற்றோருக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அந்த நம்பிக்கையானது புரிந்துணர்வின் மூலம் ஏற்பட முடியும். பிள்ளைகள் மீது புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதன் மூலம் பிள்ளை பெற்றோருடன் நெருக்கமாகப் பழக வாய்ப்பு ஏற்படும். இது பிள்ளை தவறான வழிகளில் செல்வதற்கான தயக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை நல்வழிப்படுத்தும். பிள்ளையின் நடத்தைக் கோலங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டு, மனதில் குழப்பநிலை காணப்படுமாயின் பெற்றோர் அதனைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

சகோதரர்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பது சற்று வேறுபாடானது. மிகவும் சிறுவயதில் அவர்கள் சண்டை போட்டுக்கொண்டாலும், பின்னர் இணைந்து கொள்வார்கள். அவர்கள் பெரியவர்களான பின்னர் தான் புரிதலின் முக்கியத்துவம் தோற்றம் பெறுகின்றது. இங்கு புரிந்துணர்வு குறைவடையுமாயின் சகோதரர்களுக்கிடையில் பிரிவு, சொத்துப் பிரிப்பு, புதிய சொந்தங்களுக்கிடையில் மனஸ்தாபங்கள், முறிவுகள் ஏற்பட்டு, இறுதியில் நீதிமன்றம் வரை செல்ல நேரிடும். எமது மகிழ்வைத் தூண்ட வேண்டிய சகோதரர்களுக்கு இது தேவையா? உணர்வுகளை மதியுங்கள், சிந்தித்துச் செயற்படுங்கள். பெற்றோர்களே! சான்றோர்களே! சிறு பராயத்திலிருந்து பிள்ளைகளுக்கு புரிந்துணர்வை ஊட்டுங்கள், சகோதர பாசத்தைஊட்டுங்கள், நல்ல வழிகாட்டுங்கள் நிச்சயம். சகோதரர்களுக்கிடையில் பிரச்சினைகள் தோற்றம் பெறமாட்டா.

நண்பர்கள் மத்தியில் தோன்றும் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் சரியான புரிதல் இல்லாமையாகும். இதனால் இனிய நல்ல நண்பர்களையும் தப்பான எண்ணங்களால் இழக்க வேண்டி ஏற்படும். நண்பர்களுள் ஒருவர் கோபமாகக் காணப்படும்போது, மற்றவர் அமைதியாக இருக்க வேண்டும் என்ற ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொள்வதும், நல்ல நண்பர்களை இழக்காது இறக்கும் வரை கொண்டு செல்ல உதவியாக இருக்கும். நட்பு என்பது வார்த்தையால் அளவிட முடியாத ஒரு உறவு. பாடசாலை நட்புக்கு ஒரு தனியிடம் உண்டு, புரிந்துணர்வுடன் கூடிய சொந்தம் இது.

புரிந்துணர்வுள்ள காதலுக்கு என்றும் பிரிதல் என்பது கிடையாது. பெரும்பாலும் தனது காதலன் அல்லது காதலி வேறு ஒருத்தன் அல்லது வேறு ஒருத்தியுடன் சந்தர்ப்ப சூழ்நிலையில் கதைத்தால் அதை பெரிது படுத்தாதீர்கள். அதை நீங்கள் பெரிதுபடுத்தி மனதை குழப்புவீர்களாயின் உங்களுக்கு புரிந்துணர்வு இல்லை என்பது தான் அர்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைச் சிறு வயதிலேயே வழிப்படுத்துவது பெற்றோரது கடமை

பழனித்துரை தர்மகுமாரன்



*"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றும் அதன்*
*நன் கலம் நன் மக்கள் பேறு"*

என்னும் திருக்குறளுக்கு ஏற்பவும் "தொட்டிற் பழக்கம் சுடு காடு வரைக்கும்" எனும் பழமொழிக்கு இணங்கவும் குழந்தைகளைச் சிறந்த சிந்தனையாளர்களாக உருவாக்க வேண்டும்.

ஏனெனில் குழந்தை பிறந்தவுடன் முதலில் தாயையே இனம் கண்டு கொள்கின்றது. இதனால்தான் "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்கிறார்கள். தாய் தான் குழந்தைக்குத் தந்தையை அறிமுகப்படுத்தி வைக்கிறாள். எனவே தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்கிறார்கள். கோயில் இருந்தால்தான் மந்திரம் சொல்ல முடியும் என்ற கருத்துக்கு இணங்க குழந்தைக்குச் சிறந்த அறம், அறிவு, அகிம்சைக் கருத்துக்களைத் தந்தை பிஞ்சு உள்ளத்தில் விதைக்க வேண்டும். தாய் குழந்தையின் உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதுடன் அன்பு, அரவணைப்பு, பண்பு, பாசம், சமூக விழுமியங்கள் என்பவற்றை உணவு ஊட்டும் போது சேர்த்து ஊட்ட வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளை சமூக அமைப்புக்கு ஏற்ப வளர்ந்து வரும்.

குடும்ப அமைப்பிலும் , சுற்றுப்புறச் சூழல், சமூகச் சூழல் போன்றவற்றில் குழந்தையின் உடல், உள வளர்ச்சி தங்கியுள்ளது. இதிலே தாய், தந்தைக்கிடையில் உள்ள பாசம், நெருக்கம், சிறந்த பேச்சு ,மகிழ்ச்சி என்பன பிள்ளைகளையும் சந்தோசமாக வளர வைக்கின்றது. குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகள், அடிக்கடி சண்டை ஏற்படுதல், ஒருவரை ஒருவர் முகம் சுழித்தல், ஒன்றாகச் சாப்பிடாமை, ஒன்றாக ஆன்மிகத் தலங்களுக்குச் செல்லாமை போன்ற காரியங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியை இழப்பதுடன் மட்டுமன்றி குழந்தைகளின் எதிர் காலத்தையும் பாதிப்படையச் செய்கின்றது. இதனால் குழந்தைகளின் உள்ளத்தில் வன்முறையான சிந்தனைகள் முளை விடுவதற்கு குடும்பப் பின்னணியே காரணமாக அமைகின்றது. அதற்குப் பின்னர் தான் சமூக அமைப்பு செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே குடும்பத்தை மகிழ்ச்சிகரமானதாக மாற்றி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

இதை விடுத்து இன்றைய போட்டி உலகில் எல்லோரும் பொருளாதாரத்தைப் பெருக்கினால் போதும் குடும்பத்தில் என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று சொல்லும் அளவுக்குத் தம்மையே இழந்து போட்டி உலகில் சஞ்சரித்து விட்டார்கள்.

இந்த உலகிலே போட்டி என்ற மாயையினால் பதவி மோகம், பொறாமை, பழி வாங்கும் சிந்தனை, விட்டுக் கொடுக்காமை அவதூறாகப் பேசுதல், காட்டிக் கொடுத்தல் போன்ற தீய செயற்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு இன்றைய பொருளாதார நிலையே காரணமாக அமைகின்றது.

> பிள்ளைகளின் பிஞ்சு மனதிலேயே ஆரம்பத்தில் எது நன்றாக பதிவாகின்றதோ அதுவே வாழ் நாள் முழுவதும் அவர்களை வழி நடத்திச் செல்லும். இதனைக் கருத்தில் கொண்டு இயற்கையை ரசிப்பதற்கும் உயிர்கள் மீது அன்பு வைப்பதற்கும் வீட்டுச் சுற்றுப்புறச் சூழலை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை, சினம், எரிச்சல், வாய்க்கு வந்தபடி பேசுதல் அன்பைத் தொலைத்தல், வன்முறையை உருவாக்குதல்போன்றதீயகுணங்கள்உருவெடுக்கின்றன. இதன் மூலம் குழந்தைகள் பாதிப்படைவதுடன் தமது கோயில் போன்ற குடும்பங்களை அவல நிலைக்கு மாற்றி நிம்மதியற்ற குடும்பச் சூழலை உருவாக்குகின்றனர். இதுவும் குழந்தைகளின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எமது சமூக அமைப்பிலே மூதாதையர்கள் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையையே கடைப்பிடித்து வந்தனர். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஊற்றெடுத்துக் கொண்டே இருந்தது . இதன் மூலம் குடும்பம் ஆரோக்கியமாகக் காணப்பட்டது. உதாரணமாகத் தாய் அல்லது தந்தை குழந்தையைத் தண்டித்தால் கூட்டுக் குடும்பத்தில் உள்ள பாட்டனோ, பாட்டியோ அல்லது பூட்டனோ, பூட்டியோ அன்பாக அரவணைத்துத் தண்டனைக்குரிய காரணத்தை நியாய பூர்வமாகத் தெளிவுபடுத்தி, பிள்ளையை உளரீதியாகத் திருப்திப்படுத்தி தவறை உணர்த்தி செய்த தவறை மீண்டும் செய்யவிடாது வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கின்றனர்.

ஆனால், சில குடும்பங்களில் தந்தை பிள்ளையைத் தண்டித்தால் அரவணைத்துக் கொள்வதற்கும் அன்பு காட்டுவதற்கும் குடும்பத்தில் ஒருவரும் இல்லை. ஏனெனில் தாயும் தனது தொழில் நிமித்தம் தன்னுடைய வேலைகளைச் சமாளிக்க முடியாது நெருப்பிலே நடப்பது போன்று வீட்டிலே அங்குமிங்குமாக ஓடித் திரிந்து தனது வேலையை முடித்து தொழிலுக்குப் புறப்பட்டு விடுவாள்.

தண்டனை பெற்ற பிள்ளையோ ஒரு மூலையில் தனிமையாக இருந்து அழுது விட்டு தன்னை எவருமே கவனிக்கவில்லை என்ற விரக்தியில் தனது உள்ளத்தில் வன்முறையான சிந்தனைகளை விதைத்து விடுகின்றது. இது காலம் செல்லச் செல்ல முளை விட்டுப் பெரும் விருட்சமாக மாறி சமூக விழுமியங்களுக்கு அப்பால் செயற்பட்டு சமூகப் பண்பாட்டைச் சிதைத்து செயற்படும்போதே பெற்றோர்கள் தமது பிழைகளை உணர்ந்து கொள்கின்றனர்.

எனவே பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அன்பாகவும் பண்பாகவும் அரவணைப்புடனும் இருத்தல் வேண்டும்.

அதனுடன் எமது சமூக மரபை தெளிவுபடுத்திச் சிறந்த நண்பர்களைத் தெரிவு செய்யும் முறைகளைத் தெளிவுபடுத்தி பெற்றோர்கள் பிள்ளைகளுடன் பொழுதைக் கழிக்க குறைந்தது இரண்டு மணித்தியாலமாவது ஒதுக்க வேண்டும்.

*நல்லாரை காண்பதும் நன்றே*
*நல்லார் சொற் கேட் பதும் நன்றே*
*நல்லார் குணங்களை உரைப்பதுவும் நன்றே*
*நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே.*

இதனைக் கருத்திற் கொண்டு, பிள்ளையை ஆரம்பத்திலேயே சிறப்பான முறையில் வளர்த்தெடுக்க வேண்டும். அதாவது ஆன்மிக நம்பிக்கையை ஏற்படுத்தி நாட்டின் சட்டங்களையும் தவறு விடுவதனால் ஏற்படும் தண்டனைகளையும் பசுமரத்து ஆணி போல மனதிலே பதியச் செய்ய வேண்டும்.

பிள்ளைகளின் பிஞ்சு மனதிலேயே ஆரம்பத்தில் எது நன் றாக பதிவாகின்றதோ அதுவே வாழ்நாள் முழுவதும் அவர்களை வழி நடத்திச் செல்லும். இதனைக் கருத்திற் கொண்டு இயற்கையை ரசிப்பதற்கும் உயிர்கள் மீது அன்பு வைப்பதற்கும் வீட்டுச் சுற்றுப்புறச் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

சிறந்த நல்ல பழக்க வழக்கங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். உதாரணமாக சோக்கிரட்டீஸ் என்ற விஞ்ஞானி கூறியது போல "என்னால் கல்வி கற்பிக்க முடியாது. ஆனால் மாணவர்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்ட முடியும்" என்றார் .இதனையே நாமும் பிள்ளைகள் மத்தியில் செய்ய வேண்டும்.

அதை விடுத்து பிறந்து மூன்று வயதிலேயே கல்வி கற்பதற்குப் பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதால் அவர்களின் சுதந்திரம், இயல்பான செயற்பாடுகள் ஆகியன சிறைப்படுத்தப்படுகின்றன. இது எமது இன்றைய கல்வி முறை. ஆனால் பின்லாந்து நாட்டிலே ஏழு வயதிலேயே ஒரு பிள்ளை பாடசாலைக்குக் கற்கச் செல்கிறது. அதற்கு முன்னர் இயற்கையையும், சிந்தனையையும், சமூகத்தையும், உறவுகளையும் கற்றுக் கொள்கின்றது. இன்று உலக நாடுகளிலே சிறந்த கல்வி முறையாக பின்லாந்து கல்வி முறை காணப்படுகின்றது. இவ்வாறான விடயங்களைத் தேடி அறிவதுடன் முன்னாள் விஞ்ஞானிகளான ஐசாக் நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன் போன்றோர் இயற்கையை ரசித்ததன் மூலமும், தமது சிந்தனையைத் தூண்டியதன் மூலமுமே இன் றும் உலகிலேயே பேசப்படுகின்றார்கள். "என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் சோர்ந்து போக மாட்டேன் காரணம் நான் 100 வெற்றிகளைப் பார்த்தவன் அல்ல. 1000 தோல்விகளைப் பார்த்தவன்" என்றவர் தோமஸ் அல்வா எடிசன். இவரது கருத்து தன்னம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

பிள்ளைகள் மத்தியில் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற விடயங்களை மனதிலே பதிக்க இவ்வாறான கருத்துக்களை விதைக்க வேண்டும். அதற்குப் பெற்றோர்கள் தம்மைத் தயார் படுத்தவேண்டும்.

ஏனெனில் இரண்டு பேர் சேர்ந்தால் குடும்பம், இரண்டு குடும்பம் சேர்ந்தால் அது சமூகம். எனவே குடும்பத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலுமே ஒரு சமூகம் தங்கியுள்ளது என்று கூறுவதில் மிகையேதுமில்லை. ஆனால் அன்றைய குடும்பத்தில் ஐந்துக்குக் குறையாத பிள்ளைகள் காணப்பட்டார்கள். இன்றைய குடும்பத்தில் இரண்டுக்குக் குறைந்த பிள்ளைகளே உள்ளனர். அதனைக் கூட சரியான முறையில் வளர்த்தெடுப்பதற்குச் சிரமப்படுகின்றனர்.


இதன் மூலம் சனத்தொகை குறைந்து காணப்படுகின்றது. ஆரோக்கியமான தமிழ்ச் சமூக அமைப்பை உருவாக்க முடியாத கறை படிந்த வரலாற்றுக் காலம் உருவாகாது தடுப்பதற்கு முதலில் பெற்றோர்கள் தங்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

"நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பது ஆகும் அறிவு" எனும் குறளுக்கு அமையும் படி நிலத்தின் தன்மைக்கு ஏற்ப நீர்மாற்றமடைவது போல ஒரு குழந்தையின் செயற்பாடும் குடும்பம், சமூகச் சூழல் என்பவற்றுக்கு ஏற்ப அதன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.


"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" இதனைக் கருத்திற் கொண்டு குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே உடல், உள, சமூக, ஆன்மிகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

*கட்டுரையாளர்:*
*ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வர்ணம் தீட்டுவோம்வாங்க....



## வரலாற்றில் இன்றைய தினம்

1529 - லன்றியனோ சண்டையில் வட இத்தாலியிலிருந்து பிரான்ஸ் படைகள் ஸ்பெயின் படை வீரர்களால் விரட்டியடிக்கப்பட்டன.

1582 - ஜப்பானில் சக்தி வாய்ந்த ஆட்சியாளரான ஒடாநொபுனகா அவரது ஜெனரல் அகெச்சி மிற்சுகையால் பல வந்தமாகத் தற்கொலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்.

1791 - பிரான்ஸ் புரட்சியின்போது பிரான்சின் அரசர் 16ஆம் லூயிஸ் தனது நெருங்கிய உறவினர்களுடன் வாரெனசிற்கு விமானத்தில் தப்பியோடினார்.

1898 - ஸ்பெயினிடமிருந்து குவாமை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றியது.

1900 - அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் மீது சீனா முறையாகப் போர்ப் பிரகடனம் செய்தது.

1957 - கனடாவின் முதற் பெண் கபினெட் அமைச்சரானார் எல்லன் பெயர் குளோ.

1982 - றொனால்ட் றீகன் கொலை முயற்சியில் ஜோன் ஹிங்க்லி மனநலக் குறைவு காரணமாக குற்றமற்றவர் எனக் காணப்பட்டார்.

1990 - ஈரானில் பூமியதிர்ச்சி; 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு.

- கொழும்பில் தமிழர்கள் வாழும் வீடுகளின் விவரம் சேகரிப்பு.

1992 - இனப் பிரச்சினைக்குத் தீர்வு தேடித் தமிழ்க் கட்சிகள் இந்தியா செல்லும் நிலை மாறி விட்டதாக அமைச்சர் ரணில் தெரிவிப்பு.

- கைதானவர் காணாமற்போன விவகாரம் தொடர்பில் ஐந்து பொலிஸார் தற்காலிக வேலை நீக்கம்.

- இந்துக்கள் மீதான கொடுமையை அம்பலப்படுத்துமாறு யாழ்.பேரவை அத்வானியிடம் கோரிக்கை.

2004 - இனவாதம் முடிவுக்கு வரவேண்டுமானால் இலங்கையின் வரலாற்றைத் திருத்தி எழுதவேண்டும் என சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத் தெரிவிப்பு.

- அதிரடிப் படையால் கைது செய்யப்பட்ட பனிச்சங்கேணிவாசி மீது கடும் சித்திரவதை எனச் சிறைச்சாலையிலிருந்து மனித உரிமை ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு.


- நாடாளுமன்றில் பயங்கரவாதம்; இதனை ஆட்சேபித்து 114 எம்பிக்கள் சபாநாயகருக்கு மனு.

2009 - கிறீன்லாந்து சுயாட்சியை வரித்துக்கொண்டது.

2012 - 200 வரையான அகதிகளை ஏற்றிச் சென்ற படகு இந்துமா சமுத்திரத்தில் யாவா, கிறிஸ்மஸ் தீவு மற்றும் இந்தோனேஷியத் தீவுகளிடையே கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர். 70 பேர் காணாமற் போயினர்.

2013 - பாகிஸ்தானில் மசூதி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 பேர் உயிரிழக்க 20 பேர் வரை காயமடைந்தனர்.

## அனு விஞ்ஞானி அப்துல் கலாம்



*(கடந்த செவ்வாய் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

கலாமின் இள நெஞ்சம் நாமும் இது போன்று வானில் பறக்க மாட்டோமா இப்படியொரு காலம் இனி எப்போதுமே வரும் என்று அன்று எண்ணியதன் விளைவால்தான், ஏரோ நாட்டிகல் எனப்படும் துறையில் பொறியியல் நிபுணர் என்ற உயர்நிலைக்கு உந்தித் தள்ளப்பட்டார்.

கலாம் இராமேஸ்வரம் ஆரம்பப் பள்ளியில் படித்தார். உயர்நிலைப் பள்ளியில்படித்து, 1954 இல் திருச்சி சென் ஜோசப் கல்லூரியில் பி.எஸ்.சி.படித்து முடித்தார். அவர் பஞ்சாயத்து தலைவராயிருந்த கோடூர்-ராஜகோபால் முயற்சியால் வாங்கப்பட்ட பல அரிய நூல்களை இராமேஸ்வரம் பஞ்சாயத்து நூலகம் மூலம்படித்தார். அறிஞர் பெருமக்களின் பேச்சுக்களை ஆர்வத்துடன் கேட்டார்.

தமக்குக் கல்வி போதித்த அய்யாத்துரை சாலமோன், ஆங்கிலம் கற்றுக் கொடுத்த தவயோகி கனகசுந்தரம் விஞ்ஞானம் போதித்த சிதம்பர சுப்பிரமணியம் ஆகியவர்களையெல்லாம் வீடுதேடிச் சென்று அவரவர்களுக்கு மதிப்பளிக்கவும் அளிஞர் பெருமக்களிடம் அறிமுகப்படுத்தவும் "மாதா பிதா குரு தெய்வம்" என்ற பழமொழிக்கேற்ப மரியாதையளிக்கத் தவறியது கிடையாது.

அப்போதைய ஆளுநராகவும், பல்கலைக்கழக நிகழ்ச்சிகளின் தலைவராகவும் இருந்த பி.சி. அலெக்சாண்டரிடம் தமது ஆசிரியராயிருந்த அய்யாத்துரை சாலமோனை அறிமுகப்படுத்தி அந்த ஆசிரியரை மனம் மகிழச் செய்தார். இத்தகைய சீரிய பண்புகள் அவரிடம் இருந்தமையால்தான் ஒரு சாதாரண கலாமாக இருந்தவர் உலகம் போற்றும் விஞ்ஞானியாக உருவாகி இந்தியத் துணைக் கண்டத்தையே ஆளும் வல்லமை படைத்த குடியரசுத் தலைவராக உருவெடுத்தார்.

*(அடுத்த செவ்வாய் தொடரும்)*

## மறப்போம் மன்னிப்போம்



விடியும்போது... கோழி கூவும். மாடுகள் கழுத்தில் கிடக்கும் மணிகளை அசைத்து இசை எழுப்பும், வீட்டுக்குள் இதமான குளிர் காற்று வீசும், பெண்கள் தண்ணீரைக் கையால் வாரி முற்றத்தில் தெளிக்கும் ஓசை கேட்கும்.

இத்தனையையும் பார்த்து, கேட்டு ரசிப்பதற்காகவே அதிகாலையில் மணி எழுந்து விடுவான்.

இந்த அனுபவமெல்லாம் அவன் கிராமத்துப் பள்ளியில் 4ஆம் வகுப்புப் படிக்கும் வரைதான்.

இப்போது அவன் நகரத்தில் வசிக்கிறான்.

ஒரு நாள் மணிக்கு விழிப்பு வந்து விட்டது. ஆனாலும் படுக்கையை விட்டு எழாமல் இப்படிச் சிந்தித்தபடியே கிடந்தான்.

''மணி எழுந்திரப்பா.... பாடசாலைக்கு நேரம் ஆகுது...'' அம்மா சத்தம் போட்டார்.

அம்மா பாவம்! எல்லோருக்கும் சமைத்து அனைவருக்கும் பொட்டலம் கட்டிக் கொடுத்து, மின்னல் வேகத்தில் சாப்பிட்டுவிட்டு மூச்சு இரைக்க அலுவலகம் செல்ல வேண்டும்.

இதேவேளை மணிக்காக சிறிராம் கீழே காத்திருந்தான். அவன் மாருதி காரில் இருந்தான்.

சிறிராமை இந்த நேரத்தில் மணி எதிர்பார்த்திருக்கவில்லை.

தினமும் அவன் பாட்டுக்கு காரில் பள்ளிக்குச் சென்றுவிடுவான். "இன்று மட்டும் ஏன்காத்திருக்கிறான்?" மணி மனதில் கேள்வி எழுந்தது.

சிறிராம் காரின் கதவைத் திறந்து விட்டான். மணி ஏறிக் கொண்டான். சாரதி இயக்கினார். கார் பள்ளிக்கூடத்தை நோக்கிச் சென்றது.

"என்ன சிறிராம் எனக்காகக் காத்திருக்கிறாய்..." என் றான் மணி.

''ஒரு சின்னப் பிரச்சினை...'' என்றான் சிறிராம்.

''சொல்லேன்...'' என்றான் மணி.

"எனக்கு வரவர வாழவே பிடிக்கவில்லை..." என்றான் சிறிராம் "ஏன்?"

"என்னைச் சுற்றி இருக்கிற எல்லோருமே தவறு செய்கிறார்கள் அவர்களோட பொறுப்புகளை தட்டிக் கழிக்கிறார்கள்... புரிந்தாலும் புரியாதது மாதிரி நடிக்கிறார்கள்...." என்றான் சிறிராம்.

"நண்பா...நீ சொல்லும் குறைகளுக்கு நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இதற்குத் தீர்வாக இரண்டு கொள்கைகள் இருக்கின்றன...." என்றான் மணி.

"சொல் நண்பா..." என்றான் சிறிராம்.

"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை"

அதைக் கேட்டு சிறிராம் சிந்தித்தான்.

"குறைகள் என்பது மனிதனுடன் கூடப் பிறந்தது. உன்னிடம் இருந்தால் திருந்து. மற்றவர்களிடம் இருந்தால் அதை மறந்துவிடு" என்றான் மணி.

மணி இப்படிச் சொன்னதும் சிறிராமுக்குத் தெளிவு வந்துவிட்டது.

ஆம்... குறை கண்டுபிடிக்க முயற்சித்தால் எல்லாமே குறையாகத்தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆர்வம் உள்ளீடுகளின் மீதானதாக இருக்கக்கூடாது..! தீர்வுகளை பெற்றுத் தருவதில் இருக்க வேண்டும்..!

சர்வதேசத்தின் மனித உரிமைகள் தொடர்பான திரு விழா ஆரம்பமாகிவிட்டது. உபயகாரர்களின் ஆரவாரமும் அதற்கேற்ப ஆடம்பரம் செய்யத் தொடங்கிவிட்டது. வழக்கம் போல மௌன உபவாசங்கள் கடந்து வார்த்தைகளின் உபவாசங்கள் வேண்டுதலாக அன்றி பூர்த்தியற்ற, ஆத்மார்த்தமற்ற நேர்த்திக் கடன்களாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலே இலங்கை தொடர்பான, தமிழின அழிப்பின் காரண காரியம் தொடர்பான உபயத்தின் உருவம் கொள்ளல் தயார் நிலையில் இருக்கிறது. எழுந்தருளலுக்கான அலங்கரிப்புகள் வார்த்தை ஜாலங்களிடை இடம்பெற்று வருகின்றன.
ஐ.நா மன்றத்தின் வீதிகளில் அறிக்கையாக உலாவருவதற்கான தருணங்கள் நெருங்கிட அரசியல் கைதிகளின் விடுவிப்பு, நில விடுவிப்பு, அரசியல் தீர்வு என்பன உள்ளீடு என்பதான மந்திர உச்சாடனமாக உதிர்க்கப்பட்டிருக்கின்றன.மேற்குலகின் இராஜதந்திரம் எனும் நிலையிலிருந்தான உருவேறலாக, பக்தி நிலையின் உச்சமாக தனித்து ஆர்வம் கொண்டுள்ளது. மாறாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வை வழங்குவதற்கான பணி செய்தலில் இருந்து தூரவிலகியுள்ளது. முன்னேற்றத்தை அறிந்து கொள்ளல் தொடர்பிலான பதிகம் பாடலாகவும் காலம் கடத்தலாகவும் தொடர்புறுகிறது.
இன அழிவுகள் இடம்பெற்று ஆறு ஆண்டுகள் கடந்த நிலையிலே, இன நல்லிணக்கம், சமத்துவம் தொடர்பில் இலங்கை அரசு இணங்கிக் கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதான ஐ.நா சபையினதும் அதன் ஆணையாளரதும் உறுதி என்ற கருத்துக்கள் நிதானமான நிலைபேறு இன்றி, நிலை பெறுதல் இன்றி காலத்தின் அழிதலோடு நகர்ந்திருக்கிறது.
ஒரு நாடக அரங்கம். அதில் நாடகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. மக்கள் அனைவரும் நாடகத்தின் கலை நயமான காட்சிகளில் லயித்து மனத்தைப் பறிகொடுத்து இரசித்துக்கொண்டிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்திலே எதிர்பாராத விதமாக நாடகமேடையில் ஒரு காட்சி நகர்கிறது. அதில் நாடகத்துக்கு சிறிதும் தொடர்பில்லாத பாத்திரங்களின் தோற்றம் கொள்ளல் தென்படுகிறது. இந்தக் காட்சியின் நகர்வுகள் நாடகமேடையிலும் அதைப் பார்த்திருந்த மக்களிடமும் சலசலப்பை ஏற்படுத்தி விட்டது. உண்மையிலே நடந்த விடயம் இதுதான். நாடகத் தில் முக்கியப் பாத்திரம் ஏற்று நடித்துக்கொண்டிருந்த நடிகர்களில் ஒருவர், எவரிடமோ ஒருதொகை பணத்தை கடன் வாங்கியிருந்தார். அந்த நபரைக் கைது செய்யும் பொருட்டு பொலிஸார் நாடக மேடைக்கே சென்று விட்டனர். இந்த நகர்வே நாடகத்தில் லயித்திருந்த மக்களிடம் நாடகத்தோடு தொடர்புறாத காட்சி நகர்வின் சலசலப்பை ஏற்படுத்திவிட்டிருந்தது. இந்த விடயம் பொது மக்களுக்குத் தெரிய வந்த போதும், அவர்கள் அனைவரும் மறுப்பு எதனையும் தெரிவிக்கவில்லை, மௌனமாகவே இருந்தனர்.
இந்தச் சந்தர்ப்பத்திலே சிறுவன் ஒருவனின் குரல் மக்கள் கூட்டத்திடை இருந்து உரத்து ஒலித்தது.பொலிஸாரை நோக்கி இடி போன்று முழங்கியது. மேடையை விட்டு வெளியே போ...! நடிகரைக் கைது செய்யும் உன் வேலையை நாடகம் முடிந்தபிறகு வைத்துக்கொள்..! நாடகத்தின் இடையில் புகுந்துகொண்டு பொதுமக்களைத் தொந்தரவு செய்யாதே..! என்பதாக அவன் துணிவை வெளிப்படுத்தியது அவனது குரல் திட்டவட்டமாகவும், உறுதியாகவும் பொலிஸாரை நோக்கியதான கட்டளைப் பிறப்பிப்பது போன்று கணீரென்று ஒலித்தது. உண்மையில் சிறுவனின் வார்த்தைகளின் உறுதி செய்த ஜாலத்தைக் கண்டு பொலிஸாரே திடுக்கிட்டு விட்டனர். இதற்கிடையே அவனது கருத்தை ஆமோதித்துக் கொண்ட பொதுமக்களும் ஒருமித்த குரலில் பொலிஸாரை மேடையை விட்டுக் கீழே இறங்கு..! என்று பணித்தனர். நாடகம் முடியும் வரையில் காத்திருந்து நடி கரைக் கைது செய்துகொள்..! என்று கூக்குரலிட்டனர்.ஒற்றுமையான ஒன்றுபட்ட எதிர்ப்பு எழுந்ததால் பொலிஸாரும் அதை ஏற்றுக் கொண்டனர். அவ்விதமே நடந்தும் கொண்டனர்.
ஆக,தமிழர்களுக்கான தீர்வு என்பது விரைந்து கிடைத்திட வேண்டுமெனில் தலைமைத்துவங்களின் கருத்துரிமை வலுப்பட வேண்டும். கரங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். தீர்வை நோக்கியதாக சர்வதேச உதவிக் கரங்களை நகர்த்துவதில் காத்திரம் செய்ய வேண்டும்.நியாயத்தின் முழக்கங்களைத் துணிவோடு கருத்துரைக்கும் பணியைச் செய்ய வேண்டும். தமிழர்களுக்கான தீர்வை வழங்குவது தொடர்பில் உள்ள ஆர்வங்களை உள்ளீடுகளின் மீதானதாக இருக்கச் செய்வதிலிருந்து திசை திருப்பி முன்னேற்றத்தை அறிந்து கொள்ளுதல் என்பதான கருத்து நிலையிலிருந்து முன்னகர்த்தி தீர்வுகளைப் பெற்றுத் தருவதில் [illegible] முனைப்புறச் செய்ய வேண்டும்..!





# கலாசாரத்தைப் பேணவேண்டியது பெண்களின் கடமை

உடுவிலூர் கலா

பெண் சுயமாக வாழவேண்டும். பால் நிலையில் சமத்துவம் வேண்டும். ஆணாதிக்கக் கோட்பாடுகள் செயலற்றுப் போகவேண்டும். கண்ணீர் சிந்தும் கன்னிகையர் கவலையற்று மகிழ்வாய் வாழவேண்டும் என்ற விடுதலை உணர்வுடன் பெண் விடுதலைக்காய்ப் போராடுகிறோம். ஆனால் இங்கு நடப்பதென்ன?
சாதிக்க வேண் டும் என்கிற வெறியுணர்வுடன் தொடர்ந்து பெண்கள் போராடுகின்றனர். இவர்களுக்கு எதிரிடையாக விடுதலை கிடைத்து விட்டது என்கிற செருக்குணர்வோடு அதீத விடுதலை பெற்றவர்கள் போன்று வாழுகின்றனர் சில பெண்கள். இவர்களால் பெண்ணினத்துக்கே பெரும் அவ மானம். பெண் விடுதலை என்பது ஆண்களைப் போல சுதந்திரமாக வாழ்வதற்கேயன்றி, பெண்மையைக் கொச்சைப் படுத்தவோ, பெண்ணினத்தைச் சாகடிப்பதற்கோ அல்ல.
பெண்மை அழகு படைத்தது. தாய்மை அதை விட அழகு. அழகு இறைவனால் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட பெரும் வரம். அழகைச் சரிவரப் பயன்படுத்துகிறார்களில்லை. வெறுமனே ஆண் களையே குறை கூறிக்கொண்டிருப்பதை விடுத்து பெண்கள் மீதுள்ள குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம்.
பாலியல் வன்முறைகளுக்கு பெண்களின் உடைகளும் நடவடிக்கைகளும் ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது. அடக்கம் பெண்ணின் அணிகலன். ஆனால், அடக்கத்தைத் தொலைத்து நீண்டநாள்களாகிவிட்டன. காரணமின்றி வீட்டை விட்டு வெளியே செல்கிறார்கள். ஏன்? எதற்கு? என்கிற கேள்விக்கு பதிலே வராது. சிலவேளை கடும் தொனியில் பொய்யுரைகள் பதிலாகக் கிடைக்கும். "தாயைச் சந்தையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்கத் தேவையில்லை" என்றொரு அழகான பழ மொழி உண்டு. அன்று பெண் பிள்ளைகள் வீட்டில்தான் இருந்தார்கள். இன்று இரவானா லும் வீட்டில் சந்திக்கக் காத்திருக்க வேண்டி யுள்ளது.
குடும்பத்திலும்சரி, பொது இடங்களிலும்சரி, சமூகத்திலும்சரி பெண்களை வைத்தே கலாசாரம் தீர்மானிக்கப்படுகிறது. எமது பெண்கள் கலாசாரத்தைப் பாதுகாக்கிறார்களா? மதிக்கிறார்களா? கலாசாரத்தைப் பற்றியோ, சமூகத்தைப் பற்றியோ, குடும்பத்தைப் பற்றியோ சிந்திப்பவர்களாக இன்றைய பெண்கள் இல்லை. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என வாழ்கிறார்கள். ஆடம்பர மோகத்துக்கு தலையசைத்து, இழிநிலைக் கலாசாரங்களை உள்வாங்கி, அரைகுறை ஆடைகளை அணிகிறார்கள். பெண்கள் கலாசாரத்தினுள் கட்டப்பட்டுள்ளார்கள். பெண்களால் கலாசாரம் மெருகேறுகிறது என்பதே யதார்த்தம். இதனைப் பெண்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.
கைப்பேசிப்பாவனை, இணையத் தேடல், தொலைக்காட்சித் தொடரில் மூழ்குதல், வேண்டாத நட்புகள் போன்ற இன்னோரன்ன தொடர்புகளால் பெண்மை புனிதமிழக்கிறது. பெண் விடுதலை என்பது அறிவு வளர்ச்சியால் ஏற்பட வேண்டுமே தவிர, நேர விரயத்தால் ஏற்படப் போவதில்லை. எமக்குத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு விநாடியும் பெறுமதியானது. கடந்து விட்டால் திரும்பக் கிடைக்கவே கிடைக்காது. நாம் செய்வதற்கு நல்ல காரியங்கள் நிறைய இருக்கின்றன. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோல, எதையும் அளவோடு பயன்படுத்த வேண்டும். எதற்கும் எல்லையை போடவேண்டியது பெண்களது தலையாய கடமை. வன்முறை என்பது எங்கும் பரந்து விரிவடைந்துள்ளது. தொலைக்காட்சித் தொடர்களில் திரும்பும் இடமெங்கும் வன்முறை. இணையத்தில் வன்முறை, கைபேசியில் வன்முறை. எதற்காக வன்முறையைப் பரப்புகின்ற செயற்பாடுகளுக்குப் பெண்கள் ஒத்துப் போகின்றனர் என்பது புரியாத புதிர்.
காலம் கெட்டுவிட்டது. பெண்பிள்ளைகளைப் பெற்றவர்கள் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டியே அன்றும் இன்றும் வாழ்கின்றனர். ஆனால், பெண்பிள்ளைகளோ, எம்மால் எல்லாம் முடியும், எமது வாழ்வை நாமே தீர்மானிப்போம். பெண் விடுதலை கிடைத்துவிட்டது. வீட்டுக்குள் முடங்கி வாழ முடியாது என பரப்புரை செய்கின்றனர். விடுதலை என்பது தெருக்களில் சுற்றுவதற்கு அல்ல. சிறைக்கம்பிகளை உடைத்து வெளியே வந்து, நற் செயல்களில் சாதனை புரிய வேண்டும். சமூகத்துக்கு சேவை செய்ய வேண்டும். ஆண்களுடன் ச[illegible] நிகர் சமமாக நின்று பணி செய்ய வேண்டு[illegible] சுயமாக வாழ வேண்டும். பாலியல் வ[illegible] முறைக்கு சாவு மணி அடிக்க வேண்டும். ச[illegible] தாயத்தில் பால் நிலை சமத்துவத்தை ஆழ[illegible] கப் பதிவு செய்ய வேண்டும். இவற்றை எல்ல[illegible] விடுத்து பெண் விடுதலையை தவறுதல[illegible] உச்சரிப்பது நியாயமானதா? இன்றைய பெ[illegible] கள் புரியாத புதிர்களாய் உள்ளனர். பெ[illegible] வர்களாலேயே அவர்களின் மனதைப் புரி[illegible] கொள்ள முடிவதில்லை. நல்லவராவது தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.... [illegible] கிற பாடல் வரிகளை மாற்றியமைத்துள்ள[illegible] பெண்கள். தாயின் அரவணைப்பிலும் அ[illegible] பிலும் பொத்திப்பொத்தி வளர்க்கப்பட்ட [illegible] ளைகளும் குறிப்பிட்ட வயதின் பின்னர் மா[illegible] மடைகின்றனர்.
இதனால் பெற்றோர் மனமுடைகின்ற[illegible] தனது பிள்ளையின் எதிர்காலம் இருள[illegible] விடுமோ என அச்சம் கொள்கின்றனர். அ[illegible] புடன் சொல்லும் அறிவுரைகளை பாதக[illegible] எடுத்துக்கொள்ளும் பெண் பிள்ளைகள், [illegible] றோர் மீது வெறுப்புக் கொள்கின்றனர். ப[illegible] என்பது இல்லாமற் போய்விட்டது. தடம் பு[illegible] கின்ற பெண் பிள்ளைகளின் மன நிலை[illegible] அவசர முடிவு எடுக்கப்பட்டு, தற்கொலைக[illegible] இளவயதுத் திருமணங்களும், விவாகரத்[illegible] களும்கூட இடம் பெறுகின்றன. சுட்டு விர[illegible] எதிரியைக்காட்டி குற்றம் கூறுகையில் [illegible] மூன்று விரல்களும் உந்தன் மார்பைக் க[illegible] வதை பெண்களாகிய நாம் நன்குணர [illegible] டும். பெண் பெண்ணாக வாழ்ந்து கொண்டு [illegible] பெண் விடுதலைக்காகப் போராட முடி[illegible] பெண் விடுதலை என்பது நேர்கொண்ட[illegible] தனையை மையமாகக் கொண்டது. [illegible] ஆணாதிக்க ஆதிக்கங்களுக்கும், கோட்[illegible] களுக்கும் எதிராகக் குரல் கொடுக்கிறோம். [illegible] பெண்கள் அழிவை நோக்கிப் பயணிக்கிறா[illegible] இது நியாயமா? இல்லை பெண்ணியம் எ[illegible] இதுதானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டை அடிச்ச மண்டையும்,

நண்பர்கள் போட்ட சண்டையும்,

ரொம்ப நாள் நிலைத்ததாக சரித்திரமே இல்ல.

பள்ளிக்கூடம் போன பின்புதான்
விளையாட்டின் அருமை தெரியும்,
கல்லூரி போன பின்புதான்
பள்ளியின் அருமை தெரியும்,
வேலைக்குப் போன பின்புதான்
படிப்பின் அருமை தெரியும்,
ஓய்வு பெற்ற பிறகுதான்
வேலையின் அருமை தெரியும்,
சாவுப்படுக்கையில்தான்
வாழ்க்கையின் அருமை தெரியும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | 4 | | |
| 4 | | 1 | | | | | 8 | 3 |
| | 8 | | 5 | | | 1 | | 6 |
| 5 | | | | | | 8 | 7 | |
| 2 | 1 | | | | | | 5 | 4 |
| | 7 | 4 | | | | | | 2 |
| 1 | | 5 | | | 9 | | 3 | |
| 6 | 9 | | | | | 7 | | 5 |
| | | 2 | 8 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 1 | 5 | 4 | 9 | 2 | 3 | 7 |
| 4 | 2 | 7 | 1 | 3 | 6 | 9 | 5 | 8 |
| 9 | 5 | 3 | 8 | 2 | 7 | 4 | 6 | 1 |
| 2 | 3 | 6 | 7 | 5 | 8 | 1 | 9 | 4 |
| 1 | 4 | 8 | 6 | 9 | 3 | 7 | 2 | 5 |
| 5 | 7 | 9 | 4 | 1 | 2 | 3 | 8 | 6 |
| 8 | 9 | 4 | 3 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 7 | 6 | 2 | 9 | 8 | 1 | 5 | 4 | 3 |
| 3 | 1 | 5 | 2 | 6 | 4 | 8 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உடன்பிறப்பே @udanpirappe

மூன்றெழுத்தில் ஒரு கவிதை கேட்டார்கள். "அப்பா" என்றேன். இப்படியே ஊரிட்டு இருக்காம வேலைக்குப் போடா மூதேவி என்றார் அப்பா!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் உழைப்புத் தேவைப்படும். பண விடயத்தில் விழிப்புடன் இருக்கவும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**இடபம்:** பொறுப்புடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க வாங்கக் கூடாது.

**மிதுனம்:** உறவினருக்கு உதவி செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். விரும்பிய உணவு வகை உண்டு மகிழ்வீர்கள்.

**கடகம்:** நண்பரின் யதார்த்த பேச்சால் சங்கடம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் செலவைக் கட்டுப்படுத்துவர். வெளியூர்ப் பயணம் செல்லும் சூழல் உருவாகும்.

**சிங்கம்:** சொந்த நலனைத் தியாகம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கான, புதிய வாய்ப்புக் கிடைக்கும். இலாபம் உயரும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கன்னி:** பெற்றோரின் சொல்லை மதித்து நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**துலாம்:** இலட்சிய நோக்கத்துடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற, அதிக மூலதனம் செய்வீர்கள். ஆதாயம் உயரும். பிள்ளைகளின் செயலால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.


**விருச்சிகம்:** முக்கியமான விடயத்தில் சுமூக தீர்வு ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சியில் இலக்குநிறைவேற கடின முயற்சி தேவைப்படும். தாராள இலாபம் கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உருவாகும்.

**தனுசு:** சுய இலாபத்துக்காகச் சிலர் உதவ முன் வருவர். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். இலாபம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** மனதில் நம்பிக்கை கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்குப் படிப்படியாக நிறைவேறும். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** எதிர்வரும் பணியில் முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபார நடைமுறை சுமுகமாக இருக்கும். இலாபம் சீராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்புக் கரையும். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.

**மீனம்:** எதிர்பாராத வகையில் நன்மை உண்டாகும். மனதில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். அரசு தொடர்பான உதவி கிடைக்கும்.




**டாக்டர்:** குழந்தைக்குத் தண்ணீர் கொடுக்கிறதுக்கு முன்னாடி நல்லாக் கொதிக்க வைத்துக் கொடுங்க.

**ஜோ:** எப்படி டாக்டர்! குழந்தைகளை அடுப்பில கொதிக்க வைக்கிறது தப்பில்லையா?





## ரவிக்குமாரின் அடுத்த படம்

லிங்காவைத் தொடர்ந்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படம் 'முடிஞ்சா இவனப் புடி'. 'ராம்பாபு புரொடக்ஷன்ஸ்' சார்பில் எம்.பி.ராம்பாபு தயாரிக்கும் இந்தப் படத்தில் சுதீப் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக நித்யாமேனன் நடிக்கிறார். வில்லனாக 'போக்கிரி', 'பூஜை' ஆகிய படங்களில் நடித்த முகேஷ் திவாரி நடிக்கிறார். இன்னொரு வில்லனாக 'எதிர்நீச்சல்', 'பாண்டியநாடு' படங்களில் நடித்த சரத் லோகித்சுவா நடிக்கிறார். இவர்களுடன் நாசர், சாய் ரவி அச்சுதா குமார், லதா ராவ், சதீஷ், சாது கோகிலா, கௌதமி மற்றும் பலர் நடிக்கின்றனர். படப்பிடிப்பு வேலைகள் அனைத்தும் முடிவடைந்து, தற்போது போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வரும் இந்தப் படத்தின் பாடல்களை இந்த மாத இறுதியிலும், படத்தை ஜுலை மாதமும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள். 'நான் ஈ', 'புலி' ஆகிய படங்களில் நடித்த சுதீப் கதாநாயகனாக நடிக்கும் நேரடித் தமிழ் படம் இது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## சிறுவர்களுக்கான உண்டியல்கள்

சிறுவர்களுக்கான உண்டியல்கள் அறிமுகமாகியுள்ளன. செராமிக்கினால், கார்ட்டூன்களின் உருவங்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. சிறுவர்களிடம் சேமிப்பை ஊக்குவிக்க இவை உதவும். இது 400 தொடக்கம் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறன.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 200 | 700 | 800 | 900 | 700 |
| நண்டு | 250 | 200 | 300 | 400 | 400 | 400 | 500 |
| கணவாய் | 600 | 600 | 600 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 600 | 650 | 550 | 500 | 400 |
| சுறா | 500 | 700 | – | 800 | 800 | 700 | 500 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 450 | 500 | 400 |
| விளை | 650 | 500 | – | 800 | 500 | 50 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 600 | – |
| கும்பிளா | 400 | 350 | 400 | 450 | 400 | 350 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 350 | – | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 350 | – | 450 | 300 | 350 |
| திரளி | 300 | 300 | 150 | 200 | 300 | – | 350 |
| நகரை | 250 | 300 | 150 | 300 | 400 | 300 | 370 |
| சூடை | 150 | 200 | 400 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | 400 | 250 | 150 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 300 | 300 | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 50 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 300 | 300 | 400 | 500 | 100 | – |
| வாழை | 100 | 200 | – | – | 400 | – | – |


## தக்காளி பஜ்ஜி

### தேவையானவை

கடலை மா - 150 கிராம்
தக்காளி - 6
பெருங்காயம் - கால் சிட்டிகை
உள்ளி - 5 பல்
மிளகு - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
பொரி - 100 கிராம்
எலுமிச்சைப்பழம் - 1
பச்சைமிளகாய் - 3
பெரிய வெங்காயம் - 1

### செய்முறை

உள்ளி, மிளகை அரைத்து கடலை மாவில் சேர்த்து, அதில் பெருங்காயத்தையும் உப்பையும் கலந்து பஜ்ஜி மாப் பதத்துக்கு கரைத்துக் கொள்ளுங்கள். தக்காளியை நன்கு கழுவி இந்த மாவில் போட்டுக் கொள்ளுங்கள். சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவோடு சேர்த்து தக்காளியை போட்டு வேக வைத்து எடுங்கள். இன்னொரு பாத்திரத்தில் பொரியைக் கொட்டி, வெங்காயம், பச்சை மிளகாயை சிறுசிறு துண்டுகளாக வெட்டி, பொரியில் போட்டு எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்துவிட்டு, கொத்தமல்லியை சிறிதளவு போட்டு நன்கு பிசைந்து கொள்ளுங்கள். தக்காளி பஜ்ஜியை இரண்டாக வெட்டி நடுவில் இந்த பொரிக்கலவையை அள்ளி வைத்துப் பரிமாறுங்கள்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | நெல்லியடி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 100 | 100 | 160 | 100 | 120 | – | 60 |
| கத்தரி | 120 | 140 | 160 | 150 | 100 | 200 | – | 80 |
| கரட் | 200 | 140 | 250 | 140 | 200 | 300 | – | 160 |
| மரவள்ளி | 70 | 70 | 80 | 80 | 70 | 80 | – | 40 |
| பயிற்றை | 180 | 160 | 160 | 180 | 160 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 220 | 250 | 240 | 180 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 100 | 110 | 120 | 100 | 100 | – | – | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 180 | 140 | 200 | – | 130 |
| பூசணி | 70 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 180 | 170 | 200 | 240 | 160 | 200 | – | 150 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 50 | 80 | – | 40 |
| கீரை | 30 | 50 | 50 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 500 | 500 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 120 | 100 | 140 | 120 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 180 | 240 | 180 | 220 | – | 140 |
| வெண்டி | 160 | 100 | 160 | 140 | 140 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 180 | 180–240 | 240 | 180 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 160–240 | 240 | 200 | 250 | – | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 90 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 350 | 350 | 250 | 240 | 180 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 220 | 240 | 240 | 300 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 160 | – | 200 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 550 | 400 | 800 | 300 | – | 400 |

## நாளை

ஆனி-08
புதன்கிழமை
-22.06.2016
திதி: துதியை
மா.05.45வரை
நட்சத்திரம்: பூராடம்
மு.ப.09.18 வரை
ராகுகாலம்:
11.54-01.24 வரை
சுபநேரம்:
04.24-05.54 வரை



## வீட்டுக்குறிப்புக்கள்

- இளநீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியா இருக்கும்.
- எந்தக் கறை ஆடையில் பட்டாலும் சிறிது வினிகர் போட்டுத் துவைத்தா கறை இருந்த இடம் தெரியாது.
- கொதிக்கவைத்து ஆறிய நீரில் சீரகப் பொடியைப் போட்டு 12 மணி நேர ஆகியபின் குடித்தால் இரத்தக் கொதிப்பு சீராகும்.
- மண்பாத்திரம் புதிதாக வாங்கினால் அதில் சிறிது எண்ணெய் தட அடுப்பில் சற்று நேரம் சூடேற்றியபின் கழுவினால் மண்வாசனையு வராது விரிசலும் விடாது.
- தக்காளிச் சட்னி செய்யும்போது அதில் சிறிது எள்ளை வறுத்துப் பெ செய்து போட்டால் ருசி அதிகமாக இருக்கும். தயாரிக்கும்போது அதில் சிறி எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து குடித்தால் ருசி அதிகமாக இருக்கு
- பொரித்த அப்பளம் மீதமாகிவிட்டால் அதை பொலித்தீன் பையில் நன்றா சுற்றி குளிர்சாதனப்பெட்டியில் வைத்துவிட்டால் ஒரு வாரம் ஆனாலு மொரு மொருப்பு மாறாமல் இருக்கும்.
- சாப்பாட்டு மேசையைத் துடைக்கும் துணியில் சிறிதளவு உப்போ, கர்ப ரமோ வைத்துத் துடைத்தால் ஈ மற்றும் பூச்சிகள் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## பற்றரி விமானம் சோதனைக்கு தயார்

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ள பற்றரியில் இயங்கும் விமானத்தின் சோதனை ஓட்டம் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெட்ரோலில் இயங்குகின்ற விமானங்களுக்கு அடுத்தபடியாக தற்போது சூரிய ஒளியின் சக்தி மூலம் இயங்கும் புதிய ரக விமானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அண்மையில் அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒரு விமானம் சூரிய ஒளியால் சேமித்து வைக்கப்பட்ட சக்தியின் மூலம் பல நாடுகளுக்கான தனது நீண்ட தூர பயணத்தையும் மேற்கொண்டது.

புதிய தயாரிப்பாக பற்றரியில் உள்ள சக்தியைப் பயன்படுத்தி பறக்கும் விமானத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது. அதற்கு மோஸ்வெல் என பெயரிடப்பட்டுள்ளது.

அதில் பற்றரியுடன் இணைக்கப்பட்ட 14 இலத்திரனியல் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை விமானத்தின் புரோபெல்லர்கள் இயங்க உதவும். இந்த விமானம் அதிக திறன் கொண்டதாக இருக்கும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த புதிய பற்றரி விமானம் செயற்பட்டால் பயண நேரம் குறையும் அதேவேளை, எரிபொருள் சிக்கனம் உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## தற்கொலையை தடுக்கும் முகநூலின் கருவி




தற்கொலை எண்ணம் உள்ளவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்காக பிரபல சமூக ஊடகமான முகநூல் தற்கொலை தடுப்புக் கருவியை உருவாக்கி சர்வதேச அளவில் விரிவுபடுத்தியுள்ளது.

இந்த புதிய தற்கொலைத் தடுப்புக் கருவி அனைத்து மொழிகளிலும் கிடைக்கப்பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. யாராவது ஒருவர் துன்பத்தில் தற்கொலை செய்து கொள்ளும் வகையிலான பதிவுகளை முகப்புத்தக்கத்தில் பதிவு செய்தால், அவருடைய நண்பர்கள் அல்லது அந்தப் பதிவைப் பார்ப்பவர்கள் இந்தக் கருவிக்குத் தெரியப்படுத்தலாம் என்று முகப்புத்தக நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்கொலை எண்ணம் உள்ளவர்களுக்கான மனரீதியிலான ஆலோசனைகள், உதவிகள் மற்றும் அவர்களை நண்பர்களுடன் இணைத்தல் போன்ற பல வகையான செயற்பாடுகளுக்காகவும் முகநூல் நிறுவனம் குழுக்களை அமைத்துள்ளது.

# இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை திறப்பு

சாவகச்சேரி, ஜூன் 21

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை நேற்று நகரசபையின் பொன்விழா மண்டபக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளை முகாமையாளர் திருமதி சுஜாதா நேதானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சுந்தரலிங்கம், சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், யாழ். பிராந்திய முகாமையாளர் கோ.சேதுகாவலர், தென்மராட்சி பிரதேச பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ர.இரகுநாதன் ஆகியோர் கூட்டாக வங்கிக் கிளைக் கட்டடத்தை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள், சாவகச்சேரியில் இயங்கும் ஏனைய வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், இலங்கை வங்கியின் ஏனைய பிரதேச கிளைகளின் முகாமையாளர்கள், ஓய்வுநிலை வங்கி அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-9)





# Hutch விற்பனையாளர்கள் கௌரவிப்பு

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் மிகவும் விரைவாக வளர்ச்சி கண்டு வரும் 3ஜி வலையமைப்பான Hutch, அண்மையில் இடம்பெற்ற Hutch Champions Challenge 2015/16 விருது வழங்கும் நிகழ்வில், நிறுவனத்தின் அதியுச்ச விற்பனைப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களைக் கௌரவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் அதியுச்ச பெறுபேறுகளை, வெளிப்படுத்தியவர்கள், இதன்போது பாராட் டப்பட்டதுடன் Hutchison Asia Telecom நிறுவனத்தின் செயற்றிட்ட பணிப்பாளரான ஆன் சென், Hutch நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திருக்குமார் நடராசா மற்றும் Hutch Sri Lanka நிறுவனத்தின் முகாமைத்துவ அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

நாடு முழுவதிலுமுள்ள 500 வரையான Hutch விற்பனை ஊழியர்கள் மற்றும் விநியோக பணியாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





இதன்போது Hutch நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திருக்குமார் நடராசா கருத்துத் தெரிவிக்கையில்:

"குறிப்பாக 3ஜி தரவு அடங்கலாக, நிறுவனத்தின் விற்பனைப் பெறுபேறுகள் அண்மைக்காலத்தில் விரைவாக அதிகரித்துள்ளதுடன், இந்தத் துறையில் தொழில் ரீதியான நேர்த்தி மற்றும் சிறப்பான சேவை ஆகியவற்றை வெளிப்படுத்திய வலிமையான விற்பனை அணியே இதனை முன்னெடுக்க வழிகோலியுள்ளது" - என்றார்.

> “3ஜி தரவு அடங்கலாக, நிறுவனத்தின் விற்பனைப் பெறுபேறுகள் அண்மைக் காலத்தில் விரைவாக அதிகரித்துள்ளதுடன், இந்தத் துறையில் தொழில் ரீதியான நேர்த்தி மற்றும் சிறப்பான சேவை ஆகியவற்றை வெளிப்படுத்திய வலிமையான விற்பனை அணியே இதனை முன்னெடுக்க வழிகோலியுள்ளது.”

இலங்கையில் மொபைல் தொலை தொடர்பாடல் சேவைகளை வழங்குவதில் முன்னிலையில் திகழும், ஒரு நிறுவனமான Hutch ison Teleco mmunications Lanka (Private) Limited, Hutch வர்த்தக நாமத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது. நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தனது சேவைகளை வழங்கி வருகின்ற இந்நிறுவனம், நியாயமான கட்டணங்களில் 3ஜி மொபைல் புரோட்பான்ட் சேவைகளை வழங்கி வருகின்றது.

Hutchison Telecommunications Lanka (Private) Limite நிறுவனம், Global Fortune நிறுவனம், 500 நிறுவனங்கள் பட்டியலிலுள்ள Hutchison Whampoa Limited (HWL) குழுமத்தின் ஒரு அங்கமாகும்.

வணிகம்

HWL குழுமத்தின் தொலை தொடர்பாடல் சேவைப் பிரிவு நவீன 3ஜி தொழிற்பாடுகளில் ஒரு முன்னோடியாக உள்ளதுடன், ஐக்கிய இராச்சியம், இத்தாலி, அயர்லாந்து, டென்மார்க், ஆஸ்திரியா மற்றும் சுவீடன் உட்பட ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும் கொங்கொங், மக்காவு, வியட்நாம், இந்தோனேசியா மற்றும் இலங்கை உட்பட ஆசியாவிலும் தனது தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு விவகாரம்: சட்டசபையில் ஜெயா ஆவேசம்

சென்னை, ஜூன் 21
கச்சதீவை மீட்பது குறித்து பேச திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அருகதையில்லை எனவும், அதனை தாரை வார்த்தது கருணாநிதிதான் எனவும் தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா ஆவேசமாக பேசியுள்ளார்.
சட்டசபையில் நேற்று தி.மு.க வின் முன்னாள் அமைச்சர் பொன்முடி பேசும் போது, கச்சதீவை இன்னும் ஏன் மீட்கவில்லை. 1991ஆம் ஆண்டு முதல் கச்சதீவைமீட்கநடவடிக்கை எடுப்பதாக கூறிவந்தீர்களே. இன்னும் ஏன் மீட்கவில்லை என்றார்.
இதேபோல் எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலினும் கச்சதீவை மீட்பது தொடர்பாக நீண்ட விளக்கம் அளித்து பேசினார். இதற்கு பதிலளிக்கும் போதே முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கண்டவாறு ஆவேசமாகப் பேசினார்.
இது தொடர்பில் ஜெயலலிதா மேலும் தெரிவித்ததாவது:-
கச்சதீவு தாரை வார்க்கப்பட்ட போது, 29-6-1974 அன்று செய்தியாளர்கள் அப்போதைய முதலமைச்சர் கருணாநிதியிடம், கச்சதீவை பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ஜன சங்கத் தலைவர் வாஜ்பாய் அறிவித்துள்ளாரே, உங்கள் கருத்து என்ன என்று கேட்டதற்கு, அதுபற்றி நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று பதில் கூறியுள்ளார் கருணாநிதி.
வழக்குத் தொடர முடியும் என்றும், வழக்குத் தொடரப்படும் என்றும், தமிழக மீனவர் பிரச்சினையில் நேரடி தொடர்பில்லாத வாஜ்பாய் அறிவித்த பின்னரும், அதுபற்றி எந்த அக்கறையும் காட்டாமல் தமிழக மீனவர்களுக்கு துரோகம் இழைத்தவர்தான் கருணாநிதி என்பதை மீண்டும் கூறுகிறேன் - என்றார். (வ)

## கொத்துக் குண்டுகளை

நிலையில், இந்த ஆதாரங்கள் வெளிவந்துள்ளன.
இது தொடர்பில் 'கார்டியன்' நாளிதழின் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:
போர்க் குற்றங்களை உறுதிப்படுத்தும் - சர்வதேச விதிமுறைகளுக்கு மாறாகச் செயற்பட்டதை எடுத்தியம்பும் விதத்தில் கொத்துக் குண்டுகள் பாவித்தமை தொடர்பான ஒளிப்பட ஆதாரங்கள் வெளியாகியுள்ளமையானது, இலங்கை அரசுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும்.
இறுதிப் போரின்போது அரச படைகளை வழிநடத்திய - போருக்குப் பொறுப்புக் கூற வேண்டிய பலர் தற்போதைய அரசின் உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

**கண்டுபிடிப்பு**
யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பிரதேசமான சுண்டிக்குளம் (தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பிரதேசம்), முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை ஆகிய இடங்களிலிருந்தே கொத்துக் குண்டுள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்ட ஹலோ ட்ரஸ் பணியாளர் ஒருவரே இவற்றைக் கண்டுபிடித்தார். அவரே குறித்த ஒளிப்படங்களை வழங்கினார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஹலோ ட்ரஸ் தொண்டு நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர், தங்கள் பணியாளர்கள் ஆனையிறவுக்கு அருகில் உள்ள பச்சிலைப்பள்ளி பகுதியில் 42 கொத்துக் குண்டுகளைக் கண்டுபிடித்தனர். அத்துடன் ஒளிப்படங்களில் காணப்படும் கொத்துக் குண்டுகளை முல்லைத்தீவின் சாலைப் பகுதியில் கண்டறிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.
இவற்றைக் கண்டதாகப் பலர் தெரிவித்தனர். அவ்வாறு தெரிவித்தவர்களில் சிலர் இந்தக் குண்டுகளை அரசு இறுதிப் போரின்போது பாதுகாப்பு வலயம் என்று பெயரிட்ட பகுதிகளிலும் கண்டனர் என வாக்குமூலம் வழங்கினர்.

**ரஷ்ய தயாரிப்புக்கள்**
இந்த ஒளிப்படங்களை ஆராய்ந்த சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆயுத ஆய்வாளர், இவை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்தினார்.

**ஆதாரங்கள் உண்டு**
கொத்துக் குண்டுகளை இலங்கை அரச படையினர் பயன்படுத்தினர் என்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஹலோ ட்ரஸ்ட், மக், எவ்.எஸ்.டி ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டவர்களும், கொத்துக் குண்டுகளை கண்டனர் என்று தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர் என 'கார்டியன்' நாளிதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

**சாட்சியங்கள்**
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தனது அமர்வை பூநகரி பிரதேச செயலகத்தில் 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி நடத்தியது. இதன்போது சாட்சியமளித்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், போரின் போது இலங்கை அரச படைகளால் கொத்துக்குண்டுகள் பாவிக்கப்பட்டதாகவும், அதனை தாம் நேரில் கண்டார் எனவும் குறிப்பிட்டார்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்திய போதும், 2014ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் சாட்சியமளித்த பெண் ஒருவர், கொத்துக் குண்டுகள் போரின் போது பயன்படுத்தப்பட்டதாகவும், அதனைத் தாம் கண்டார் எனவும் தெரிவித்தார். (வ-5)

## போர்க்குற்ற

அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளன.
கொத்துக்குண்டு பயன்படுத்தப்பட்டதை மறுப்பதும், ஆதாரங்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுவதும், போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச விசாரணையாளர்களும், தடயவியல் நிபுணர்களும் ஈடுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளது - என்றார்.
சித்திரவதையிலிருந்து விடுதலைக்கான அமைப்பைச் சேர்ந்த சினியா சீட்ஸ், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இந்த அமர்வில், "சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இதன் அவசியம் கொத்துக்குண்டு விவகாரத்தின் ஊடாக உணர்த்தப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.
பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் கரெத்தோமஸ், கொத்துக்குண்டுக்கள் பயன்படுத்தப்பட்டனவா? என்று வினா எழுப்பியுள்ளதுடன், இது இலங்கை அரசுக்குப் பாரதூரமான விடயம் என்றும் தெரிவித்துள்ளார். (வ-5)

## அதிபர்

விசேட பாடம் கற்பிக்கச் சென்ற ஆசிரியர், பாடசாலையில் வைத்து மாணவியைப் பாலியல் துர்நடத்தைக்குட்படுத்த முற்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார்.
இதையடுத்து சம்பவம் தொடர்பில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, மத்திய கல்வி அமைச்சு ஆகியனவும் தீவிர விசாரணைகளில் இறங்கியுள்ளன.குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியர் மடு கல்வி வலயத்திலிருந்து தற்காலிக இணைப்பில் குறித்த பாடசாலையில் கற்பித்தவர். இவரது தற்காலிக இணைப்பு நீக்கப்பட்டு, கடந்த ஒன்பதாம் திகதி மடு வலயத்தில் உள்ள பாடசாலையில் கடமையேற்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் அவர் செல்லவில்லை. அவர் தொடர்ந்தும் அந்தப் பாடசாலையில் கையொப்பமிட அதிபர் அனுமதித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.
இது தொடர்பிலும் மாகாணக் கல்வி அமைச்சினால் அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாமென வும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இடமாற்றக் கடிதம் கடந்த ஆறாந் திகதி கிடைத்த போதிலும் சொந்தப் பாடசாலைக்குத்திரும்பிச் செல்லாமல், தற்காலிக இணைப்புப் பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றியமைக்காக ஆசிரியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.
சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவி சம்பவம் குறித்து தனது வகுப்பாசிரியை மற்றொரு ஆசிரியை, பிரதி அதிபர், அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்தார் என்று கூறப்படுகிறது. எனினும் அவர்கள் சம்பவத்தை மூடி மறைக்க முற்பட்டனர் என்கின்றனர் பொலிஸார். அதனாலேயே அந்த 4 பேரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மாணவியின் தாயார் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த மாணவி மற்றும் சக மாணவிகள் கொடிகாமம் பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டனர் அதன் பின்னரே பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியைகள் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் இரவு அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அன்றையதினமே நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இதே பாடசாலையில் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் சிரமதானத்தில் பங்குபற்றவில்லை என்றுகூறி மாணவனை ஆசிரியர் ஒருவர் மோசமாகத் தாக்கினார் என்றும் குற்றச்சாட்டு உள்ளது. இதனால் குறித்த மாணவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தான்.
மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். எனினும் ஆசிரியரும் மாணவனின் பெற்றோரும் இணக்கப்பாட்டுக்கு வந்து அந்தச் சிக்கல் சீர்செய்யப்பட்டது. (வ-4,9,10)

## மற்றொரு

அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
"2 மாணவிகளை நிலத்தில் சாயுமாறு கூறிய ஆசிரியர், பின்னர் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள் நேற்று விசாரணையை ஆரம்பித்துள்ளனர். அமைச்சு மட்டத்திலும் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-4)

## போரில்

உள்நாட்டு நீதிபதிகளோ அல்லது உள்நாட்டு வழக்கு நடத்துநர்களோ போர்க்குற்ற வழக்கினை நடத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் இணக்கத்துடன் எடுத்த தீர்மானத்துக்கு மாறாக, இவர்கள் ஏன் கருத்துக் கூறுகின்றனர் என்பதையும் சர்வதேசம் அறியவேண்டும். குற்றம் செய்தவர்களைப் பாதுகாக்கும் எண்ணத்துடனேயே இவ்வாறு கூறுகின்றனர்.
வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறுவதன் மூலம், இந்த விசாரணைகள் மூலம் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட மாட்டார்கள் என்பது உறுதியாகிறது. நீதித்துறையில் நான் பல ஆண்டுகள் இருந்தேன். நீதித்துறையில் இன ரீதியான எண்ணங்களும் செயற்பாடுகளும் இலங்கையில் நடந்தேறுகின்றன.
நல்லிணக்கத்துக்காக மத்தியுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளோம். பிழையானவற்றிற்கு அன்றி, சரியானவற்றுக்கு ஒத்துழைப்போம் என்று குறிப்பிட்டேன்.
மத்தியிடம் என்ன பிழையாக உள்ளது என்பதைப் போல் கேட்டார்.
கூட்டாட்சி என்றால் பிரிவினை என்ற கருத்தைத் தெற்கில் உள்ளவர்கள் மனதில் வைத்திருக்கின்றனர். கூட்டாட்சி என்பது சேர்த்து வைப்பதே. இதனை அரசியல்வாதிகள் எடுத்துச் சொல்லவில்லை. இதைச் சொல்லவேண்டியது தெற்கு அரசியல்வாதிகளின் கடமை. அவர்கள் இதனைச் செய்யவில்லை என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டும். நல்லிணக்கத்துக்காக கூட்டாட்சியின் உண்மையான கருத்தை ஏற்படுத்த வேண்டும்.
தென்னிலங்கை அரசியல்வாதிகள், தமிழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய தீர்வைப் பற்றி தெற்கு மக்களுக்குச் சொல்லலாம். அங்கு கூட்டாட்சி என்ற சொல்லைப் பயன்படுத்தத் தேவையில்லை என்று குறிப்பிட்டேன்.
நான் பேசிய விடயங்களை தெற்குக்கு எடுத்துச் செல்வார் என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதித் தலைவர் போல் குறிப்பிட்டார் - என்றார் வடக்கு முதலமைச்சர். (வ-5-10)

## ஜெனிவா

இவரை சந்திப்பதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் மகசின் சிறைக்கு நேற்றுச் சென்றிருந்தனர். பந்துலவைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர்.
"நல்லாட்சி அரசின் அரசியல் பழிவாங்கலுக்கு எதிராக உள்நாட்டு, சர்வதேச சமூகத்தின் முன் முறையிடுவோம். உதய கம்மன்பில, டலஸ் அழகப்பெருமவுடன் நானும் இணைந்து சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திடம் சென்று இலங்கை அரசுக்கு எதிராக முறையிட்டிருந்தேன்.
ஜனநாயக செயற்பாட்டில் ஈடுபட முடியாத படி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசு விதிக்கின்ற இடையூறுகள் பற்றி ஜெனிவாவுக்குச் சென்று முறையிட்ட நாடாளுமன்ற உறுப்பினரே தற்போது சிறையில் தள்ளப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் இலங்கை அரசின் ஜனநாயக அடக்கு முறைகளுக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவுக்குச் சென்று சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திடம் முறையிடவுள்ளோம் - என்றார். (வ-5)

## மகிந்த

அணியைச் சேர்ந்த மொஹமட் முசாமில், மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலக வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டார்.
நேற்றுக் காலை, பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர் கொழும்பு நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, அவரை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.
மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த நிலையில், முசாமில் நேற்றுக் கைது செய்யப்பட்டார். (வ-5)

## காணாமற்போனோர்

தரப்பிடமிருந்து இன்னும் கருத்து எதுவும் கோரப்படவில்லை. இராணுவ அதிகாரிகள் ஒரு சிலரிடம் மாத்திரமே விசாரணை நடத்தப்பட்டுள்ளது.
அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் இறுதி அறிக்கையைக் கையளிக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கால அவகாசம் போதாது. எனவே, இடைக்கால அறிக்கை ஒன்றைத்தான் கையளிக்கக்கூடியதாக இருக்கும். ஒரு தரப்பை மாத்திரம் விசாரித்துவிட்டு அறிக்கை கைளிப்பது கடினம். 19 ஆயிரம் முறைப்பாடுகளுள் சுமார் 4 ஆயிரம் வரை இரட்டை முறைப்பாடுகளும் இருக்கின்றன" - என்றார். (வ-5)

## ஜூலை

போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதிகளுடன் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் குறித்து உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திரனுக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஜுன் 21

மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுனமகேந்திரனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கபே அமைப்பால் நேற்று மனுத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் தொடர்ந்தும் செயற்படுவதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப் பட்டதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரி வித்துள்ளார்.

அர்ஜுன மகேந்திரன் இந்த நாட் டின் குடிமகன் இல்லை. அவரை அந்தப் பதவியில் நிய மித்தது சட்ட ரீதியானது அல்ல எனவும் அந்த மனுவில் கூறப் பட்டுள்ளது.

மேலும், பிணை முறி மோசடி தொடர்பில் அர்ஜுன மகேந்திர னுக்கு எதிராக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டி யுள்ள கீர்த்தி தென்னக்கோன், அவர் அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (வ-5)

## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடும் நிரந்தரப்பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பப் படிவத்தினை 10/= செலுத்தி சங்க கடமை நேரத்தில் தலைமை யகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பம் " பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்கலாம். இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

- விண்ணப்ப முடிவுதிகதி : 30.06.2016
- கிளை முகாமையாளர் சம்பள குறியீடு 208/15 (165/88)
- சம்பளத்திட்டம்: 13515 - 110 X 10 -120 X 10 - 15815 (13/2015)
- வயதெல்லை: 18 - 45(சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)
- அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
- கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்டதுறை பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

- கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த(சாதாரணம்) சான்றிதழில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வு களில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:
- கூ.வே.ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 13/2015 இற்கமைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணை, ஆதனப்பிணை செலுத்தப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்
வலி கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம்,
நீர்வேலி.
(16.06.2016 ஆம் திகதிய இயக்குநர்சபை கட்டளைப்படி)

## இலங்கையர் மீது கனடாவில் தாக்குதல்

கனடாவில் இலங்கையர் ஒரு வர் மீது தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை டொரன்டோ பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக சி.பி.சி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன் னர் கனேடிய குடியுரிமையைப் பெற்ற குறித்த இலங்கையர் தமது இரவு நேர பணி முடித்து வீடு திரும்பும்வழியிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் தம்மை, இலங் கையரா? என வினவியதுடன் இலங்கைக்கு திரும்பிச் செல் லுமாறு அச்சுறுத்தியதாகவு தம் தாக்குதலுக்குள் ளானவர் குறிப்பிட்டுள்ளார். 20 வயது மதிக்கதக்க சுரேஸ் என்ற இந்த இலங்கையர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (வ)

## பிறந்த உடன் குழந்தையின் சாவுக்கு காரணம் என்ன ?

யாழ்ப்பாணம்,ஜுன் 21

யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தை ஒன்று உடனே இறந் தமைக்கு ஒட்சிசன் வழங்கப்படாமையே காரணம் என்று கூறப்படுவது தவறு.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித் தார்.

"பிறந்த குழந்தை நிறை குறைவாக இருந்தது. முதிர்ச்சியடையாததாக இருந் தது. அதனாலேயே உயிரிழந்தது'' என்றார் பணிப்பாளர்.

இந்தக் குழந்தையின் இறப்புக்கு உரிய நேரத்தில் அதற்கு உயிர்வாயு(ஒட்சிசன்) வழங்கப்படாததே காரணம் என்று செய் திகள் வெளியாகி இருந்தன. மருத்துவ மனையின் பிரசவ விடுதியில் கடமையில் இருந்த மருத்துவருக்கும் தாதிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதலைய டுத்து உரிய நேரத்தில் குழந்தைக்கு உயிர்வாயு கொடுக்கப்படவில்லை என்று அந்தச் செய்திகள் தெரிவித்தன. இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மை எதுவும் இல்லை என்று பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

"பிரசவ விடுதியில் மருத்துவருக்கும் தாதி க்கும் முரண்பாடு இருந்தது. ஆனால் அதற்கும் குழந்தையின் இறப்புக்கும் தொடர்பு ஏதும் இல்லை. நிறை குறைவாக முதிர்ச்சியடையாது பிறக்கும் குழந்தை கள் இறப்பது வழமையானதே. எனினும் விடுதியில் நிலவிய கருத்து மோதல் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் உள்ளக விசாரணை நடத்தப்படுகின் றது"-என்றார் பணிப்பாளர்.

வெளியான உண்மைக்குப் புறம்பான செய்தி குறித்து குற்றப் புலனாய்வு துறை யினரிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-4-ரி)

## பதவிக்கான தேடல்

நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது American DMI நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.

- வயதெல்லை 18-30
- அனுபவம் அவசியமற்றது
- தங்குமிடம் இலவசம்
- பயிற்சியின் போது (12000/= - 15000/= வரை)

077 5566224, 077 2302795

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திருமதி S. யோகசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரி

திருமதி
*சௌந்தரராணி* (றோகினி)
*சிவராஜா றொமேன்*

அவர்கள் 18.05.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ சென்மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

### அறை வாடகைக்கு

யாழ் நகரில் அமைதியான சூழலில் அறைகள் வாடகைக்கு உண்டு. பெண் உத்தி யோகத்தர்கள், மாணவிகளுக்கு ஏற்றவை.

077 367 3309

### வேலையாள்கள் தேவை

01. மேசன் உதவியாளர்
02. வெல்டர், உதவியாளர்
03. அலுமினிய பிற்றிங் தெரிந்தவர்கள்

(J.1876)(12.18)

077 262 3944

### தேவை

நகைக்கடைக்கு ஆள்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு: 077 2349933

## TRADE FINANCE & INVESTMENTS PLC

கிளிநொச்சிக் கிளையில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO | CHASIS NO |
| --- | --- | --- |
| DISCOVER | NP BBT - 50XX | MD2A57B2XEWG42740 |
| SCOOTY ZEST | NP BDG - 42XX | MD 626CG47F2H00799 |
| GLAMOUR | NP BCI - 49XX | MBLJA06AHFGD00055 |
| ISMARI | NP BBP - 22XX | MBLHA12ACE9F07027 |
| DAWN | NP BBY - 41XX | MBLHA11EYE9M00201 |
| DASH | NB BDF - 36XX | MBLJFI6ERFGK01104 |
| DAWN | NP BBR - 90XX | MBLJA05EPE9G00091 |
| DELUXE | NP BCP - 76XX | MBLHA11ALE9J52860 |
| DELUXE | NP BAG - 57XX | MBLHA11EWD9A22232 |
| DAWN | NP BCR - 11XX | MBLHA11EYF9D00071 |
| DELUXE | NP BBV - 66XX | MBLHA11ALE9H50246 |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைக்குட்பட்டது

மேலதிக விவரங்களுக்கு
077 166 1648, 077 109 2236
021 228 0110, 021 228 0108

## கணினி திருத்தம்

உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். Computer Repair
GUNA BEST PC 077 9086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்
50/12, Hospital Road Jaffna. 522, Manipay Road Jaffna.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**றெஜினா கனகம்மா பரம்சோதி**
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி: அபரபக்க பிரதமை



**நீங்காது இருக்குமே!**

மாண்டார் வருவதில்லை மாநிலத்து நியதியன்றோ!
மறுமுறை காண்பதுவும் இயலாத நிலையுமன்றோ!
ஆண்டாண்டு வருகின்ற திவசத்தின் திதியதனை
அறிந்திடப் பேரரெம் கனவினில் வருபவளே!
காண்கின்ற எங்களுக்கு ஈராண்டின் நினைவினால்
கண்கலங்கி தவிக்கின்றோம்! அப்பம்மாவே! என்றுமே
நீண்டுவரும் காலமாற்றங்கள் வந்தாலும் எப்போதும்
நீங்காது இருக்குமே உங்களின் நினைவுகள்!

பேரர்கள்
தர்மதா - மனோகரதாஸ்
மிதுண் பரிசித் - மனோகரதாஸ்
நர்மதா - மனோகரதாஸ்
[illegible] - மனோகரதாஸ்

[illegible] குறாப்,100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(j/8895)
(11,17)

தோற்றம் 31.05.1933
மறைவு 13.07.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் கடும் தாக்குதல்: மாணவன் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 21

திக்வெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து, மூர்க்கத்தனமாகத் தாக்கியதில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்த மாணவன் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மூவாயிரம் மாணவ, மாணவியர் கல்வி பயிலும் அந்தப் பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து ஆசிரியர்களில் பெரும்பாலானோர் அடுத்த நாள் கடமைக்குச் சமுகம் தரவில்லை.

இதன் காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளை மீளவும் வீடுகளுக்கு அழைத்துச் சென்றதாகவும், ஏற்பட்ட பதற்ற நிலையை சீர் செய்ய பொலிஸாரின் உதவி கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்கு உள்ளான மாணவன் தெரிவிக்கும் போது, அன்றைய தினம் நான் அவசிய தேவையின் நிமித்தம் வீடு செல்ல வேண்டியிருந்தது. இது தொடர்பில் பாடசாலை அதிபரிடமும் வகுப்பு பொறுப்பாசிரியையிடம் தெரிவித்து அனுமதி பெற்றுக் கொண்டேன். அனுமதி பெறுவதற்குரித்தான பதிவேட்டில் எனது கையொப்பத்தை வைத்ததன் பின்னர் பாடசாலை நேரத்துக்கு முன்னதாகவே நான் வீட்டுக்குச் சென்றிருந்தேன்.


மறுநாள் விஞ்ஞான ஆசிரியர் வகுப்புக்கு வருகை தந்து, நான் முன்னதாக பாடசாலையை விட்டுச் சென்றிருந்தமை பற்றி வினவினார். அதிபரிடமும் வகுப்பாசிரியையிடமும் அனுமதி பெற்று, உரிய பதிவேட்டிலும் கையொப்பம் இட்டே சென்றேன் என்பதை அவருக்குத் தெரிவித்தேன்.

இருந்தும் அவர், சொல்லப்பட்ட விடயங்களைக் கருத்தில் எடுக்கவில்லை. என்னிடம் தெரிவிக்காது நீர் எப்படிச் செல்ல முடியும் என மிரட்டினார். எனது சட்டைக் கழுத்தில் பிடித்து வாங்கொன்றின் மீது தள்ளி விழுத்தினார். நான் கதிரையொன்றைவிழுத்திக் கொண்டு நிலத்தில் விழுந்தேன். எழுந்து நிற்க முனைந்த போது, தொடர்ச்சியாக எனது தலையில் தாக்கினார்.

இந்த மூர்க்கத்தனமாக தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆசிரியரை தள்ளிவிட்டவாறே வகுப்பிலிருந்து வெளியே நான் ஓடினேன். ஓடும் போது எனது கை விரல்களில் சிக்கிய ஆசிரியரின் சட்டைப் பை கிழிந்தது. விடாது என்னைப் பின்னாலேயே துரத்தி வந்த ஆசிரியர், என்னை மீண்டும் தாக்குவதற்கு மொத்தத் தடியொன்றை எடுக்க முனைந்தார். இதனைக் கண்ட பதற்றத்தில் எங்கும் தப்பி ஓடாது நின்றுவிட்டேன். அப்போது என்னை நன்றாகப் பற்றிப்பிடித்துக் கொண்ட ஆசிரியர் பலமாகத் தாக்கினார். இதனை அவதானித்த எனது வகுப்பின் பலசாலியான சக மாணவன் தலையிட்டு ஆசிரியரின் பிடியிலிருந்து என்னை விடுவித்தான்.

இதன் பின்னர் அங்கு வருகை தந்த ஆசிரியர்கள் சிலர் பாடசாலை அதிபரிடம் என்னை அழைத்துச் சென்றனர். பாடசாலை அதிபர் என்னைத் தாக்கிய ஆசிரியரிடம் இது பற்றி விசாரித்தார். அதன் பின்னர் என்னை அலுவலகத்துக்கு அழைத்து விசாரித்துக் கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைத் தாக்கிய ஆசிரியர் மேலும் ஆசிரியர்களை அழைத்துக் கொண்டு அதிபரின் அலுவலக அறையினுள் உள்நுழைந்தனர். அதிபர் தடுத்த போதும், அதைப் பொருட்படுத்தாது மூர்ச்சையாகும் வரை மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். நான் தொடர்ச்சியாக வாந்தி எடுப்பதை அவதானித்ததன் பின்னர் பதிகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். அதன் பின்னர் மாத்தறை மத்திய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர் - என்றார். (ஐ-ரி2,22)

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை கைலாசபிள்ளை

(தேசிய நீர் வழங்கல் ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை (வன்குவர்) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கைலாசபிள்ளை கடந்த 17.06.2016 காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான மனோன்மணி, பொன்னுத்துரை மற்றும் வரதராசா, விஜயரட்ணம் , தவலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரன்(ஈசன்-கனடா), நாகேஸ்வரி (உமா-கனடா), பத்மினி (றதி-ஜேர்மனி), கைலவாகீசன் (வாசன் தே.நீ.வ.வ.ச) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமனோகரி, யோகரட்ணம், தர்மகுலசிங்கம், குபேந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமனும் சிவரூபன், அகிலரூபன் கஜன்-ஜேமிளா, துளசிகா-சாரங்கன், துளக்சன், தர்சன், யனார்த்தனி, தர்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.06.2016 வியாழக் கிழமை கனடாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **வாசன் (மகன்)**
**077 1605525, 021 2051079** (J/2302(17. 19)

# பிரபாகரனைக் கைது செய்ய வலியுறுத்தியவர் ஜெயலலிதா

### தமிழக சட்ட சபையில் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 21

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்யுமாறு கோரியிருந்தவர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. போரின் போது பொதுமக்கள் உயிரிழப்பது இயல்புதான் என்றும் அவர் குறிப்பிட்டவர்.

இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து தமிழக சட்ட சபையில் நேற்று உரையாற்றினார் எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்ராலின்.

இதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை முற்றாக மூடி மறைக்கவும், போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்வதைத் தடுக்கும் வகையிலும், இலங்கை அரசு மேற்கொள்ளும் சதி வேலையை திறமையாக முன்னெடுத்துச் செல்வதற்கு, இந்தியா பக்கபலமாக உள்ளதாக ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.


யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை இலங்கை ஜனாதிபதியுடன்இணைந்து இந்தியப் பிரதமர் திறந்து வைத்தமை குறித்து வைகோ வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழரின் பூர்வீக நிலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வரும் நிலையில், அதன் பின்னணியிலேயே தமிழர்கள் கொல்லப்பட்ட இடத்துக்கு அல்பிரட் துரையப்பா பெயரை சூட்டி மைதானம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களுக்காக அங்கே வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையும் அழிக்கப்பட்டுள்ளதென வைகோ சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் எந்த வித பதிலும் கிடைக்காமல், அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்காமல், இராணுவத்தின் கெடுபிடிகளுக்குள் மக்கள் வாழ்ந்துவரும் நிலையில், தமிழர்களின் பிள்ளைகளை அரங்குக்கு கொண்டு வந்து யோகா பயிற்சியைக் காட்டி காணொலி மூலம் அரங்கத்தை திறந்து வைத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கை தட்டி மகிழ்வதானது, 187,000 தமிழர்கள் படுகொலை வரலாற்றைப் புதைகுழியில் மறைப்பதற்கான முயற்சியென வைகோ சாடியுள்ளார். (வ-5)

## மரண அறிவித்தல்

### மனோன்மணி கனகலிங்கம்



காங்கேசன்துறை சோதி வீதியைப் பிறப்பிடமாகவும் குருசுமதவடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி கனகலிங்கம் நேற்று (20.06. 2016) திங்கட்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குருசுமதவடி, ஆனைக்கோட்டை.**

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### செல்வநாயகம் நடராஜா

பலாலி மேற்கைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் நடராஜா கடந்த (19.06.2016) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-தங்கம் தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற ஐயாத்துரை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணியின் அன்புக் கணவரும் இரத்தினம் (மலே சியா) அவர்களின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரி, பாஸ்கரன் (சுவீடன்) ,கருணாமூர்த்தி(கனடா), சுந்தரமூர்த்தி (சுவீடன்) , விஜயகுமாரி, புண்ணியமூர்த்தி (லண்டன்), மோகனமூர்த்தி (ஆஸ்திரேலியா), இராமமூர்த்தி, மகிவனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தையா, லகிதேவி (சுவீடன்), சந்திராதேவி (கனடா), மதிவதனி (சுவீடன்), விக்கினராஜா, மோகனா (லண்டன்), தேனுகா, துஸ்யந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகியோரின் அன்புப் பேரனும் பூட்டனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (23.06.2016) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தமேனி, அச்சுவேலி.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 3144803**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்றலைட்ஸ் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 21
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் வி.கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 27.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வினோத் 67 ஓட்டங்களையும், சஜித் 23 ஓட்டங்களையும், சுபாஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் எறிக், கோகுலன் இருவரும் தலா 3 இலக்குகளையும், மயூரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 26.1 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து, இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக நிரோசன் 50 ஓட்டங்களையும், மதுசன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மானிப்பாய் பரிஸ் அணியின் சார்பில் கிசோக்குமார், சுபாஸ் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-422)



## மெக்ஸிக்கோவுக்கு பலத்த அடி சிலி இலகுவாக அரையிறுதியில்

நடைபெற்றுவரும் கோபா அமெரிக்கத் தொடரில் மெக்ஸிக்கோ அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது சிலி.
சிலியின் நம்பிக்கை வீரரான வர்காஸ் ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்திலேயே முதல் கோலைப் பதிவுசெய்து தனது ஆதிக்கத்தை மெக்ஸிக்கோவுக்கு எதிராக நிலைநாட்டினார். முதல் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல் மெக்ஸிக்கோ வீரர்கள் வழமைக்குத் திரும்புவதற்கு முதல், 10ஆவது, 17ஆவது, 22ஆவது நிமிடங்களில் சிலியின் சார்பாக சீரான இடைவெளியில் கோல்கள் பதிவாகின. 4:0 என்ற சிலியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதி, மெக்ஸிக்கோ எதிர் சிலி என்பதை விட, மெக்ஸிக்கோ எதிர் வர்காஸ் என்று சொல்லும் விதமாக அமைந்திருந்தது. அவர் 52 ஆவது, 57 ஆவது, 74 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்த மூன்று கோல்களை பதிவுசெய்ய முடிவில் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு இலகுவாக தகுதி பெற்றது சிலி. (ம)


## சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் சிம்பாப்வேயை வென்றது இந்தியா

இந்தியா-சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 10 இலக்குகளால் இந்தியா அபார வெற்றி பெற்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளரான சரணுக்கு இந்த ஆட்டம் அறிமுக ஆட்டமாக அமைந்திருந்தது. பழக்கமற்ற பந்துவீச்சு சிம்பாப்வேயை மிகையாகச் சோதித்தது. ஆரம்ப வீரர்களான சிப்கபா, மசகட்சா இருவருக்கும் சரண் முடிவு கட்டினார். பவர்பிளே முடிந்ததும் அழைக்கப்பட்டார் பும்ரா. பும்ரா, சரண் என்ற வேகப்பந்துவீச்சு இணை சிம்பாப்வேயின் துடுப்பாட்ட வரிசையை தலைதூக்க விடாமல் பார்த்துக்கொண்டது. ஓர் முனையில் இலக்குச் சரிவு மறுமுனையில் அளவுக்கு அதிக நிதானம் என இருமுனைப் போராட்டத்தில் சிக்கித் தவித்தது சிம்பாப்வே. மூர் 31 ஓட்டங்களுடனும், சிக்கும்புரா எட்டு ஓட்டங்களுடனும் பும்ராவின் வேகத்தில் சிக்கினர். 10 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்தே சிம்பாப்வே 50 ஓட்டங்களைத் தொட்டிருந்தது. மத்திய வரிசை நம்பிக்கையான ரசாவால் முடிந்தது ஒரு ஓட்டம் மட்டுமே. 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சிம்பாப்வே 99-9.
பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக சரண் 4 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், குல்கர்னி, சாஹல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கியது இந்தியா. ஆரம்ப வீரர்களாக லோகேஸ் ராகுல் மற்றும் மன்டீப் சிங். இந்திய அணியின் துடுப்பாட்டம் சிம்பாப்வேயின் துடுப்பாட்டத்துக்கு முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருந்தது. 7.4 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. சிம்பாப்வேயின் போராட்டம் ஆட்டத்தை வெல்வதை விடுத்து இணைப்பாட்டத்தை பிரிக்கும் படியாய் மாற்றம் பெற்றது. இந்த முயற்சியும் இறுதிவரை கைகூடாமல் போக சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் 13.1 பந்துப்பரிமாற்றங்களில் 10 இலக்குகளால் சிம்பாப்வேயை ஊதித்தள்ளியது இந்தியா. மன்டீப் சிங் 52 ஓட்டங்களுடனும், லோகேஸ் ராகுல் 47 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)



## இந்திய அணியுடன் தொடர்புடைய எவரும் வன்புணர்வு முறைப்பாட்டில் சிக்கவில்லை

அனுராத் தாக்கூர் தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியுடன் தொடர்புடைய ஒருவர், தன்னை வன்புணர்ந்ததாக பெண் ஒருவர் சிம்பாப்வே பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான அனுராத் தாக்கூர் இதை மறுத்துள்ளார்.
இந்திய கிரிக்கெட் அணி ஒரு நாள் மற்றும் ரி-20 தொடர்களில் விளையாடுவதற்காக சிம்பாப்வே சென்றுள்ளது. அனைத்து ஆட்டங்களும் ஹராரேயில் நடைபெறுவதால் அங்குள்ள நட்சத்திர விடுதியில் இந்திய வீரர்கள் அனைவரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் விடுதியில் தங்கியிருந்த இந்திய கிரிக்கெட் அணியுடன் தொடர்புடைய ஒருவர் தன்னை வன்புணர்ந்தார் என்று சிம்பாப்வே பெண் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளதாக நேற்றுமுன்தினம் தகவல்கள் வெளியாகியிருந்தன. மட்டுமல்லாமல் இந்திய அணியின் அனுசரணை நிறுவனங்களில் ஒருவரே குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், இவற்றை அனுராத் தாக்கூர் மறுத்துள்ளார். இவற்றில் உண்மைத்தன்மை எதுவும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ஆஸி. - தெ.ஆபிரிக்கா ஆட்டம் கைவிடப்பட்டது

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த ஆஸ்திரேலியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா இரு புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ம)

## மெஸ்ஸி மற்றொரு சாதனை



ஆர்ஜென்ரீனா சார்பாக அதிக கோல்களை அடித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் அந்த அணியின் தலைவரும், நட்சத்திர வீரருமான மெஸ்ஸி.
கழகங்களைப் பொறுத்த மட்டில் மெஸ்ஸி பார்சிலோனாவைப் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார். ஆனால், அவர் பார்சிலோனாவுக்காக செயற்படுவதைப்போல் ஆர்ஜென்ரீனாவுக்காகச் செயற்படுவதில்லை என்றும், தனது தேசிய அணிக்காக கோல்களைப் பதிவுசெய்யத் தவறுகிறார் என்றும் குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே மெஸ்ஸி குறித்த சாதனையை படைத்துள்ளார். நடைபெற்று வரும் கோபா அமெரிக்கத் தொடரில் வெனிசுலா அணிக்கு எதிரான ஆட்டத்தில் கோலொன்றைப் பதிவு செய்ததன் மூலமே அவர் இந்தச் சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார்.
ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் வீரரான பாடிஸ்குடா 78 ஆட்டங்களில் 54 கோல்கள்ளப் பதிவு செய்து, குறித்த பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். தற்போது இந்தச் சாதனையை மெஸ்ஸி சமன் செய்துள்ளார். இருப்பினும் இதற்காக மெஸ்ஸிக்கு 111 ஆட்டங்கள் தேவைப்பட்டது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதியின் கால்பந்தாட்டம்**

சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது. (ம-23)



## மாகாண கால்பந்தாட்டத் தொடர்: சென். ஹென்றிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் விடாப்போராட்டத்தை வெளிப்படுத்த, கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் இரு அணிகளதும் பின்களங்கள் சுவர் எழுப்பியதுபோல் அமைந்திருந்தன. இருப்பினும் 18ஆவது நிமிடத்தில் பிரசாந் மூலம் முதல் கோலைப் பதிவு செய்தது சென். ஹென்றிஸ். பதிலடி கொடுக்க படாதபாடுபட்டது பற்றிக்ஸ். ஹென்றிஸும் விடுவதாயில்லை. ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கையில் பதிலடி கொடுத்தது பற்றிக்ஸ். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணத்தைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது சென். ஹென்றிஸ்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணி. (ம-23)



## ஆஸி. – தீவுகள் இன்று பலப்பரீட்சை

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர், மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா மூன்று முறைகள் மோதவேண்டும். புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிக்குத் தகுதி பெறும். தென்னாபிரிக்கா 5 ஆட்டங்களில் விளையாடி 12 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியா 5 ஆட்டங்களில் விளையாடி 11 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன. தீவுகள் 4 ஆட்டங்களில் விளையாடி 8 புள்ளிகளுடன் உள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றாலேயே தீவுகள் இறுதியாட்டத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கலாம். ஏனெனில் தீவுகளின் சராசரி ஏனைய இரு அணிகளையும் விட மோசமான நிலையில் உள்ளது. (ம)

## சென். மேரிஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

இங்கிலாந்து-இலங்கை அணிகளுக்கு இடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் இங்கிலாந்து வென்றிருந்தது. இதனால் ஒருநாள் தொடரை கைப்பற்றி பதிலடி கொடுக்க இலங்கை முனைப்புக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மட்டுமல்லாமல் அயர்லாந்தை புரட்டியெடுத்ததால் தனது பழைய போர்முக்கு இலங்கை திரும்பியுள்ளதாகவும் கருதப்படுகிறது. (ம)





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், நீர்வேலி சவாரித் திடலில், மாட்டுவண்டிச் சவாரியொன்று நேற்றுமுன்தினம் பி.ப. 2 மணிக்கு நடைபெற்றது. யாழில் இருந்து மட்டுமல்லாமல், வடக்கின் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான போட்டியாளர்கள் குறித்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொண்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rotary | HOPE
Helping Other People Evolve Project - RID 2982, SALEM, INDIA
Be a gift to the world

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்,
இந்தியா - சேலம் றோட்டறி மாவட்டம் 2982
அனுசரணையுடன் போரினால் பாதிப்படைந்த வடக்கு - கிழக்கு
தமிழ் உறவுகளுக்கான செயற்கைக் கால் வழங்கும் செயற்றிட்டம் 2016

காலம் : 21.06.2016. செவ்வாய்க்கிழமை
பி.ப 4.00 மணி
இடம் : இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி
கல்லூரி வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம்

தலைமை
றொட்டேரியன். சி.அனுராஜ்
தலைவர். யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்.

பிரதம விருந்தினர்
றொட்டேரியன். ஆர். வாசு
மாவட்ட ஆளுநர் - றோ.மா 2982

சிறப்பு விருந்தினர்கள்
ஸ்ரீ. ஏ.நடராஜன்
இந்தியத் துணைத் தூதுவர். யாழ்ப்பாணம்

றொட்டேரியன். ஈ.சரவணபவன்
முன்னாள் தலைவர். யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்.
நாடாளுமன்ற உறுப்பினர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

றொட்டேரியன். எஸ்.சிவக்குமார்
HOPE செயற்றிட்ட இயக்குநர் - றோ.மா 2982
சேலம் வடக்கு றோட்டறிச் சங்கம்




அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## ரஸ்பேர்க் மற்றுமொரு வெற்றி

உலக கார்பந்தயத் தொடரில் 7ஆவது சுற்றில் ஜேர்மனிய வீரரான ரஸ்பேர்க் வெற்றிபெற்றுள்ளார். முடிவடைந்த ஒட்டு மொத்த சுற்றுக்களின் அடிப்படையிலும் அவரே முதலிடத்தில் உள்ளார். அசர்பைஜான் நாட்டின் தலைநகர்ப் பகுவில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் ஏற்கனவே முடிவடைந்த ஆறு சுற்றுக்களில் நான்கில் வெற்றிபெற்றுள்ள ரஸ்பேர்க் முதலிடம் பிடித்துள்ளார். வெட்டல் இரண்டாவது இடத்தையும் கமில்டன் மூன்றாமிடத்தையும் பிடித்தனர். (ம)

**Personal Class (Maths)**

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு கணிதம் (Tamil & English Mediam) பிரபல ஆசிரியரால் வீடு வந்து இலகுவான கவர்ச்சிகரமான முறையில் கற்பிக்கப்படும். G.C.E O/L தரம் 9,10 மாணவர்களுக்கு Model Papers மற்றும் Past Papers ஊடாகக் கற்பிக்கப்படும்.
(யாழ்ப்பாணம், மல்லாகம் பிரதேசத்துக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

077 2369133

SAAMSON
Experts in English Training
மூன்றே மாதங்களில்
SPOKEN ENGLISH
ஷாம்சனிடம் பழகுங்கள்!

"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின் மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"

2வது சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 25.06.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு3: 01.00-03.00
பிரிவு2: 10.00-12.00 பிரிவு4: 03.00-05.00

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.

ஷாம்சன் ஆசிரியரின் வாரநாள் வகுப்புகள் : 28.06.2016
பிரிவு 1: காலை-10.00 - 12.00 மாலை

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af
பிரெஞ்சு மொழி



* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.

* இலவசம்:
பாடங்களின், PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..

INTERNATIONAL DIPLOMA (DELF-A1)
ஆரம்பம்: 26/06/2016
0212228093

யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

61, கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக்கடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

Nalin Information Technologies (PVT) LTD
இரண்டு வருட உத்தரவாதம்



உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களில் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள்....





4 CH CCTV PACKAGE — 30,140/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| CMOS 1000TVL CAMERA | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

4 CH CCTV PACKAGE — 33,740/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

4 CH CCTV PACKAGE — 32,540/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA 960p 131 | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

8 CH CCTV PACKAGE — 53,180/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

8 CH CCTV PACKAGE — 56,780/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD1.3MP CAMERA 960p131 | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

4 CH CCTV PACKAGE — 40,340/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 4 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |



8 CH CCTV PACKAGE — 49,980/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| CMOS 1000TVL CAMERA | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

8 CH CCTV PACKAGE — 73,480/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 8 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |





16 CH CCTV PACKAGE — 94,660/-

| | |
|---|---|
| 16 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 16 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 32 |
| DC JACK | 16 |
| POWER PACK 12V ~ 20A | 1 |
| CAMERA STAND | 16 |
| 3C 2V CABLE | 200M |
| POWER CABLE KELANI | 200M |

16 CH CCTV PACKAGE — 132,960/-

| | |
|---|---|
| 16 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 16 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 32 |
| DC JACK | 16 |
| POWER PACK 12V ~ 20A | 1 |
| CAMERA STAND | 16 |
| 3C 2V CABLE | 200M |
| POWER CABLE KELANI | 200M |

அதிநவீன CCTV Camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.

குறிப்பு :- உங்கள் கணணிகளிலும், கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும். ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/4 Parameswara Junction, Palay Road. T.P : 021 222 1121/1166 Mob : 0777 667 975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.